Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு
THINAMURASU


**Restaurant Tilko**



10% Disscount
மே மாதம் மட்டும்
(உணவு மட்டும்)
(Fully Air Condationed)

**Tilko Jaffna City Hotel**
Tel : 021 222 5969, Fax:021 222 7291
Wdb:www.cityhoteljaffna.com
e-mail : info@cityhoteljaffna.com
TILKO (C/1501)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 16 செவ்வாய்க்கிழமை (29.05.2012) பக்கங்கள் 20 ஓசை – 241



பயிற்சியின் நோக்கு 06



அபிவிருத்தியை மேம்படுத்த... 05




15



சிகிச்சைக்கு ஆறு கோடி 12



காதலியுங்கள்... 18

# தமிழருக்கு மட்டும் வடக்கு சொந்தமல்ல

## பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் வடக்குப் பிரதேசத்தை தமிழர்களுக்கு மட்டும் உரித்துடையதாகப் பார்க்கக் கூடாது எனவும் இலங்கையர் என்றால் நாட்டின் எந்தப் பகுதியிலும் வாழலாம் எனவும் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பி.பி.சி.க்கு வழங்கியுள்ள பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன், இறுதிக்கட்டப் போரில் சிறிதளவு எண்ணிக்கையான ஆட்சேதங்களே ஏற்பட்டதாகவும் போருக்கு பின்னர் கடத்தப்பட்டு காணாமல் போனவர்கள் எனக் கூறப்படுவோரின் எண்ணிக்கை குறித்தும் அவர் 'சந்தேகம் வெளியிட்டுள்ளார். இலங்கையில் இன ரீதியான பாகுபாடுகளின்றி அனைவருக்கும் சம வாய்ப்புகள் கிடைக்கக்கூடிய இயல்பு. நிலை



19 ஆம் பக்கம் பார்க்க

## கடற்படை வீரர் தற்கொலை

(மன்னார்)

மன்னார், முசலி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிலாவத்துறை கடற்படை முகாமில் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படும் கடற்படை வீரர் ஒருவரின் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக குருநாகல் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிபதி ஏ.யூட்சன் பணித்தார்.

இச்சடலம் மன்னார் மாவட்ட பொதுவைத்தியசாலையில் கடந்த சனிக்கிழமை இரவு ஒப்படைக்கப்பட்டது. இந்நிலையில், நேற்று முன்தினம் மன்னார் வைத்திய சாலைக்குச் சென்று சடலத்தை பார்வையிட்டபோதே மன்னார் மாவட்ட நீதிபதி ஏ.யூட்சன் மேற்கண்டவாறு பணித்தார்.

## இராஜதந்திரி பதவிகளை ஏற்க மறுக்கும் தமரா

(கொழும்பு)

அரசாங்கத்தின் இராஜதந்திர பதவிகளை தாம் மேலும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என, ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர பிரதி நிதியாக நியமிக்கப்பட்டு பதவி விலக்கப்பட்ட தமரா குணநாயகம் தெரிவித்துள்ளார்.

ஏசியன் ட்ரிபியுன் இணையத் தளத்துக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையில் உள்ள குளறுபடிகள் தம்மை இந்தத் தீர்மானத்தை மேற்கொள்ளச் செய்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கை அரசாங்கத்தில் மிகவும் குறைந்த அளவிலேயே தமிழ் இராஜதந்திரிகள் காணப்படுகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

# தற்கொலைத் தாக்குதலுக்கு உதவிய பெண்ணை மன்னிக்கத் தயார்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

கடந்த 2004 ஆம் ஆண்டில் தன் மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல் நடவடிக்கைக்கு உதவிய பெண்ணை மன்னிக்கத் தான் தயாராகவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இது குறித்த வழக்கு விசாரணை ஒன்றில் நேரில் ஆஜராகியபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

2004 ஆம் ஆண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது தாக்குதல் நடத்திய தற்கொலையாளியை அங்கு அழைத்து வந்ததாகக் கூறப்படும் சத்தியலீலா என்னும் பெண்மணி மீதே இந்த வழக்கு விசாரணை நடக்கிறது. இந்த வழக்கில் ஆஜராகிய அமைச்சர், அந்தப் பெண்மணி

19 ஆம் பக்கம் பார்க்க

# சட்டவிரோத விடுதி மூடக்கோரி வழக்கு

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் உள்ள சட்டவிரோத தங்குமிட விடுதி ஒன்றின் மீது யாழ். மாநகர சுகாதாரப் பரிசோதகரினால் யாழ்.நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாநகரசபை ஆணையாளர் ஊடாக மாநகர சுகாதாரப் பரிசோதகரினால் நேற்று இவ் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இவ்விடுதி சுகாதார சீர்கேட்டுடனும், கலாசாரச் சீரழிவுகளோடும் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதிவுகள் எதுவும் மேற்கொள்ளப்படாமல் திருமணமாகாத இளம் பெண்கள், ஆண்கள் அனுமதிக்கப்பட்டு தங்க வைக்கப்படுவதாகவும், காலை 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரை இவ்விடுதியில் 21 வயதுடைய இளைஞனும், யுவதியும் தங்கியிருந்தாகவும், திடீரென்று கைத்தொலைபேசியில் கதைத்தபடி யுவதியொருவர் விடுதிக்குள்ளிலிருந்து ஓடிவந்து வான் ஒன்றில் ஏறிச் சென்றதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இவ்விடுதியைத் தடை செய்யுமாறு யாழ்.மாநகர சபை நீதிமன்றைக் கோரியுள்ளது. இவ்விடுதியின் உரிமையாளர் கொழும்பில் இருப்பதாகத்

19 ஆம் பக்கம் பார்க்க

## திருடனின் கத்திவெட்டிற்கு ஆளான உதவிக் கல்விப் பணிப்பாளர் படுகாயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு-கோம்பாவில் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்தை தடுக்க முயன்ற முல்லைக் கல்வி வலய தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருடனின் சரமாரியான வெட்டுக்காயங்களுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கோம்பாவில் மேற்கைச் சேர்ந்த இ.பீதாம்பரம் (வயது-46) என்ற உதவிக் கல்விப் பணிப்பாளரே படுகாயமடைந்த வராவார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் வவுனியாவில் நடைபெற்ற மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டியில்

19 ஆம் பக்கம் பார்க்க

## 2 கோடியைத் தாண்டிய இலங்கையின் சனத்தொகை

(கொழும்பு)

மக்கள்தொகை மற்றும் புள்ளிவிபர மதிப்பீட்டுத் திணைக்களத்தால் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் படி, தற்போது இலங்கையில் 20.2 மில்லியன் மக்கள் வாழ்வதாக உத்தியோகபூர்வ வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இம் மக்கள் தொகை

19 ஆம் பக்கம் பார்க்க


# நாடாளுமன்ற சட்ட நடைமுறை யாழ்.செயலகத்தில் பட்டறை

(யாழ்ப்பாணம்)

வடக்கின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பணியாளர்கள், வடபகுதி அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள் மற்றும் அதிகாரிகளுக்கான நாடாளுமன்ற சட்ட வாக்கங்கள் பற்றிய பயிற்சி செயலமர்வு நேற்றைய தினம் யாழ்.செயலகத்தில் இடம்பெற்றது.

நாடாளுமன்ற விவகார அமைச்சர் சுமேதா ஜி ஜயசேன தலைமையில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் சிரேஷ்ட அமைச்சர் டி.யூ.குணசேகர, ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் உவைஸ் பாரூக், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்

19 ஆம் பக்கம் பார்க்க




## 12 மாணவர்களுக்கு கற்றல் தடை அதிபருக்கு எதிராகப் போர்க்கொடி

பாடசாலையில் ஒழுங்கீனமாக நடந்தார்கள் எனத் தெரிவித்து 12 மாணவர்களுக்கு பாடசாலை அதிபரால் கற்பித்தல் தடை விதிக்கப்பட்டதற்கு பெற்றோர்கள் தமது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

# சமூக சீர்கேடுகளை வேரோடு அழிக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்



(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் அண்மைக்காலமாக திருட்டு, வழிப்பறி, பாலியல் வன்முறை, மதுப்பழக்கம், சிறுவர் துஷ்பிரயோகம், கடத்தல், பெற்ற சிசுவை பகிரங்கமாக வீசுவது போன்ற இன்னோரன்ன குற்றச் செயல்கள் நாளாந்தம் அதிகரித்து வருகின்றது.

தினசரி இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் இச்செய்திகள் வெளிவந்த வண்ணமே உள்ளன. பெரும்பாலும் இத்தகைய குற்றச் செயல்களோடு இளைஞர்கள், யுவதிகள் என வயது வேறுபாடின்றி பல்வேறு தரப்பினரும் சம்பந்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

கடந்த 30 ஆண்டு கால யுத்தம் காரணமாக சமூகம் பல்வேறு இழப்புகளைச் சந்தித்துள்ளதும் அநேகமானவர்கள் தமது இளமைக் கல்வியை இடை நடுவில் கைவிட நிர்ப்பந்திக்கப்பட்டமையால் தற்போது எத்தகைய வேலைவாய்ப்புக்களையும் பெற முடியாத நிலையில் அதிருப்தி அடைந்ததின் காரணமாக தம்மை அறியாமலே இத்தகைய குற்றச் செயல்களுக்குள் தள்ளப்படுகின்றனர்.

யாழ். குடாநாட்டில் தற்போது சமூகம் பல்வேறு கூறுகளாக பிளவுபட்டு நிற்பதும் சமூகத்தின் ஒரு பகுதியினர் பொருளாதார பலத்தில் உச்சத்தில் இருப்பதும் இன்னொரு பகுதியினர் பொருளாதாரத்தில் மிகத் தாழ்ந்த நிலையில் இருப்பதையும் நிதர்சனமாகக் காணமுடியும்.

இதனால் சமூகத்தில் உள்ள முதியவர்கள், இளைஞர்கள், யுவதிகள், மாணவர்கள் என சமூகத்திலுள்ள விரக்தியுற்றவர்கள் இத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபடுவதையும் காணமுடிகின்றது.

இத்தகைய சமூகச் சீர்கேடுகளைக் கண்டு இதன் மூலம், மக்களின் பண்பாடு, கலாசாரம் சீரழிவதாக கூப்பாடு போடுவதால் எதனையும் சாதிக்க முடியாது. இவற்றிற்கான அடிப்படைக் காரணிகளைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கு சமூகத்தின் மீதும் மக்களின் மீதும் உண்மையான அக்கறை கொண்டவர்கள் முன்வர வேண்டும்.

இதேவேளை இத்தகைய சம்பவங்களை சாக்காகக் கொண்டு சுயலாப அரசியல்வாதிகளும் ஊடகங்களும் யாழ். குடாநாட்டு மக்களை மத ரீதியாகவும் இன ரீதியாகவும் பிளவு படுத்தும் நடவடிக்கைகளில் முழுமூச்சாக ஈடுபட்டு வருவதை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது என்று ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இத்தகைய சமூகச் சீர்கேடுகளில் இருந்து இளைய சந்ததியைக் காப்பாற்றும் எண்ணம் கொண்ட அனைவரும் ஒருங்கிணைந்து செயலாற்றுவதன் மூலமே குடாநாட்டில் வாழும் எதிர்காலச் சந்ததிக்கு நம்பிக்கையளிக்க முடியும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சுட்டிக்காட்ட விரும்புகிறது.

ஆகவே இன, மத பேதங்களுக்கு அப்பால் நின்று சமூகத்தை நேசிக்கும் முற்போக்காளர்கள் இத்தகைய சீரழிவுகளுக்குள்ளானவர்களை நல்வழிப்படுத்த முனைய வேண்டுமெனக் கேட்டுக் கொள்வதோடு வழிப்பறி, திருட்டு, பாலியல் வன்முறை, போதைவஸ்து விற்பனை போன்றவற்றில் ஈடுபடுபவர்கள் சமூகத்தில் எத்தகைய நிலையில் இருந்தாலும் அவர்கள் மீது பொலிஸார் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வேண்டுகோள் விடுக்கின்றது.

# தீயில் கருகிய இளம்பெண் மருத்துவமனையில் சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

குருநகர் பகுதியில் கடந்த சனிக்கிழமை இளம் பெண் ஒருவர் தனக்குத் தானே தீ மூட்டி எரிகாயங்களுக்குள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி மரியகொறற்றி (ஜீவிதா) வயது - 22 என்பவரே இவ்வாறு தனக்குத் தானே தீ மூட்டியுள்ளார்.

குறித்த யுவதி ஒருவரை காதலித்து வந்ததாகவும், அவர் வேறு ஒரு பெண்ணை பதிவுத் திருமணம் செய்து கொண்டதனை தெரிந்துகொண்ட நிலையிலேயே தனக்குத் தானே தீ மூட்டிக் கொண்டதாகவும் தெரியவருகிறது.

மேலும் குறித்த யுவதி தனது காதலன் தன்னைத் திருமணம் செய்து கொள்ள மறுத்துவருவதாக ஏற்கனவே யாழ். பொலிஸில் முறையிட்டிருந்ததாகவும் தெரியவருகின்றது.

இந்நிலையில் அவர் வேறு பெண்ணை பதிவுத் திருமணம் செய்துகொண்டதாகவும், இதனால் ஏற்பட்ட மன உளைச்சல் காரணமாகவே குறித்த யுவதி தனக்குத் தானே தீ மூட்டியதாகவும் இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகிறது.

மேலும் குறித்த யுவதி குருநகர் திருக்குடும்ப கன்னியர்மட வைத்தியசாலையில் தாதியாக பணிபுரிந்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# போதைப்பொருளில் மோகம் ஐந்து பேர் மடக்கிப்பிடிப்பு

## மானிப்பாயில் அதிரடி

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பகுதியில் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டிருந்த 5 பேர் விசேட அதிரடிப்படையினரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டிருப்பதாக அப்பகுதியிலிருந்து கிடைத்த தகவல் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த ஐவரும் தற்சமயம் பொலிஸாரினால் விசாரிக்கப்பட்டு வருவதாகவும் மேலும் தெரியவருகின்றது.

குறித்த பகுதியில் போதைப்பொருள் பாவனையில் சிலர் ஈடுபடுவதாக கிடைத்த தகவலையடுத்தே அப்பகுதியில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப்படையினரால் இவர்கள் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது. இவர்கள் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் நிறுத்தப்படவுள்ளனர் எனவும் தெரியவருகின்றது. (பா)

# வலை திருட்டு; ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். அரியாலை பூம்புகார் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் ஒரு தொகுதி வலையைத் திருடினார் என்ற குற்றத்திற்காக ஒருவரை யாழ். பொலிஸார் நேற்றுக் கைதுசெய்துள்ளனர்.

மேற்படி பகுதியில் நிறுவனம் ஒன்றினால் வாழ்வாதார உதவியாக வழங்கப்பட்டிருந்த குறித்த வலைத் தொகுதியை நேற்று முன்தினம் இரவு குறித்த நபர் களவாடியிருந்ததாகவும், அதன் பின்னர் அவரை அப்பகுதி மக்கள் சுற்றிவளைத்துப் பிடித்து யாழ். பொலிஸில் ஒப்படைத்ததாகவும் தெரியவருகிறது.

குறித்த நபரால் களவாடப்பட்ட வலைகளும் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸார் குறித்த நபர் மீது யாழ். நீதவான் நீதிமன்றத்தில் வழக்கினை பதிவுசெய்ய நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரியவருகிறது. (பா)

# வெள்ளைப்பூரான் தீண்டிய இளைஞர் மருத்துவமனையில்

(வடமராட்சி)

புன்னாலைக்கட்டுவன் வடக்கில் கல் எடுத்துக் கொண்டிருக்கையில் அதனுள் இருந்த வெள்ளைப்பூரான் கடித்து ஆபத்தான நிலையில் இளைஞர் ஒருவர் அச்சுவேலி கிராமிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நடேசு திவாகர் (வயது - 33) என்ற இளைஞரே இவ்வாறு வெள்ளைப்பூரானால் கடியுண்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மதியம் குறித்த இளைஞர் தனது வீட்டில் கல் எடுத்து வேறு பகுதிக்கு கொண்டு செல்ல முற்படுகையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (பா,116)

# மரத்தில் தொங்கியது குடும்பஸ்தரின் சடலம்

(வடமராட்சி)

வடமராட்சி வராத்துப்பளை வைரவர் கோவில் வேப்பமரத்தில் தூக்கில் தொங்கி இறந்த நிலையில் 5 பிள்ளைகளின் தந்தை ஒருவர் சடலமாக நேற்றுக்காலை பருத்தித்துறை பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த தம்பிஜயா சுருமதிராசா (வயது - 50) என்பவரே இறந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பொலிஸாரினால் மந்திகை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட இச்சடலத்தின் மரண விசாரணையை திருமதி அஞ்சலா வின்சன் நடத்தியதைத் தொடர்ந்து சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (பா,116)

# திருக்கேதீச்சரத்தில் மகாஜனா உபயம்

(மன்னார்)

மன்னார் திருக்கேதீச்சர ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் 5 ஆவது திருவிழா பூசையை நடத்தும் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி 20 ஆசிரியர்கள், 40 மாணவர்களும் மேற்படி ஆலயத்துக்கு சென்றுள்ளனர்.

இன்று நடைபெறும் இத்திருவிழாவை சிறப்பாக நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

இந்த திருவிழா உபயம் வருடாந்தம் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியினால் மேற்கொள்ளப்படுவது வழக்கமாகும். (93)

# வருடாந்த திருவிழா

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி வருடாந்த வைகாசி திருநாளை முன்னிட்டு ஆயத்த வழிபாடுகள் ஆரம்பமாகியுள்ளன.

எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு திருநாள் திருப்பலியும், திருச்சொரூப பவனியும், தொடர்ந்து அன்னதான நிகழ்வும் இடம் பெறும்.

# முதற் திருப்பலி

(வடமராட்சி கிழக்கு)

இம்மாதம் 24 ஆம் திகதியன்று யாழ்ப்பாணம் தூய மரியன்னை பேராலயத்தில் யாழ். மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் அமல மரித் தியாகிகள் இறை பணியாளராக திருப்பொழிவு செய்யப்பட்ட அருட்பணி யாக்கோப்பு றொபின்சன் சதீஸ்குமார் (றமேஸ்) அ.ம.தி தனது முதற் திருப்பலியை நாளை காலை 9.30 மணிக்கு கட்டைக்காடு புனித கப்பலேந்தி மாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.

இந்நிகழ்வுக்கான ஒழுங்குகளை தாளையடி பங்குத்தந்தை அருட்பணி ஏ.யேசுரட்ணம் அடிகளார், உதவிப் பங்குத் தந்தை அருட்பணி எஸ்.யஸ்ரின் ஆகியோருடன் ஆலய நிர்வாகக் குழுவினர், அருட்பணி சபையினர், பங்கு மக்கள் ஆகியோர் செய்துவருகின்றனர். (70)

# நல்லூர் வரலாற்றுக் கழகம் விசேட ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் சரித்திர பிரசித்தி பெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்கள் காணப்படுகின்றன. அவை தற்போது தனியார் பாவனைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதால் அவற்றைப் பேணிப் பாதுகாக்கமுடியாத நிலை தற்போது காணப்படுகிறது.

இவ்வாறான நிலையில் அதனைப் பேணி பாதுகாப்பதற்கு நல்லூர் வரலாற்று கழகம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் ஜுன் மாதம் 6 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு யாழ். மாநகர முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் அனைவரும் கலந்து நல்லூரில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை பாதுகாக்கும் முயற்சிக்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்குமாறு யாழ். மாநகர முதல்வர் யேகேஸ்வரி பற்குணராசா கேட்டுக் கெள்கின்றார்.


## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 30.04.2011 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் 2012.06.16 (சனிக்கிழமை) மு.ப 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ். பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ். பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ். கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (C/1512) 2012.05.25

ஞானமே முக்கியம், ஞானத்தைச் சம்பாதி
என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக்கொள்.
- பைபிள்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021221811
thinamurasu@live.com

## ஊடகங்களிடமிருந்து சுதந்திரம்!

உலகளாவிய ரீதியில் நாம் இன்று அறிந்து கொள்ளும் செய்திகள் எல்லாம் ஒருதலைப்பட்சமானவையே. பிபிசி ஆகட்டும், சிஎன்என் ஆகட்டும் மற்றுமற்றும் உலகளாவிய செய்திச் சேவைகள் ஆகட்டும் எல்லாமே அமெரிக்கா, பிரிட்டன் உட்பட்ட மேற்கு நாடுகளின் கண்ணோட்டத்தை ஊதிப் பரப்புபவையே.

அவை தரும் செய்திகளிலிருந்தே நம் கருத்துக்கள் உருவாகின்றன. அரபு நாடுகளிலும் ஆபிரிக்க நாடுகளிலும் மக்களைப் பாதுகாத்து, சுதந்திர ஜனநாயகச் சூழலை மேற்கு நாடுகள் அங்கு ஏற்படுத்திக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன போன்ற கதைகளுக்குள் நாமும் சிக்கிக் கொள்கிறோம்.

உலகளாவில் தகவல் ஏகாதிபத்தியம் இவ்வாறு நடந்து கொண்டிருக்கிறதென்றால், உள்ளூரிலும் ஏறேவிதமான தகவல்களை விழுங்கியபடிதான் நாம் இருக்கிறோம். நீரோட்டிற திசையின் போக்கில் பொம்மைக் கப்பல்களை விட்டே பழக்கப்பட்டவை நமது ஊடகங்களும். மக்களிடம் விற்கக் கூடிய சரக்காக விறுவிறுப்புச் செய்திகளை மட்டும் எழுதிக் கொண்டிருப்பதில் களிபேருவகை கொள்ளக் கூடியவை.

ஊடகங்களின் ஒட்டுமொத்தப் பங்களிப்பு என்பது இன்று தலைகீழாக இருப்பதைப் பார்க்கிறோம். ஜனநாயகத்தின் காவலர்களாக, மாற்றத்தின் தூதுவர்களாக இருக்க வேண்டிய ஊடகங்கள் இன்று சரண்டலின் காவலர்களாக, லாப வேட்டையின் தூதுவர்களாக மாறிப்போயிருப்பதைப் பார்க்கிறோம். மக்களது உணர்ச்சிகளை உசுப்பி, அவர்களை அடுத்த கட்டத்துக்கு நகர விடாமல் தடுத்து அப்பட்டமாக, லாபத்தை அதிகரிக்கும் வர்த்தக எந்திரங்களாக மாறிவிட்டன.

அரசதிகாரத்தின் மூன்று தூண்களாக உள்ள ஆட்சிமன்றம், நாடாளுமன்றம், நீதிமன்றம் ஆகியவற்றோடு, ஊடகம் நான்காவது தூணாகக் கருதப்படுகிறது. இவற்றில் முதல் மூன்று தூண்களும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஏதாவது ஒரு வகையில் மக்களுக்கு பதிலளிக்கக் கடமைப்பட்டவை. ஆட்சியாளர்கள் நாடாளுமன்றத்திற்கு பதிலளித்தாக வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடுத்த தேர்தலில் மக்களைச் சந்தித்தாக வேண்டியவர்கள். நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அல்லது ஜனாதிபதியின் அதிகாரங்களுடன் உச்சநீதிமன்ற நீதிபதியை விலக்கிவிட முடியும்.

இந்த மூன்றையும் கேள்வி கேட்கக்கூடிய நான்காவது தூணாகிய சுதந்திர ஊடகம், எந்தவகையிலும் மக்களுக்கு பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கவில்லை என்பதுதான் வேடிக்கை! அதனால் எப்படி வேண்டுமானாலும் மக்களைத் தவறாக வழிநடத்துவதையும் ஒரு உரிமையாக எடுத்துச் செயல்பட முடிகிறது.

ஊடகம் தன் மீது நம்பிக்கை வைத்துள்ள மக்களுக்கு பதிலளிக்கக் கடமைப்பட்டதாக இருக்க வேண்டாமா? அந்தப் பொறுப்பை ஊடகங்கள் தாங்களாகவே உருவாக்கிக் கொள்ள வேண்டாமா?

அந்த ஜனநாயகக் கடமையைத் தட்டிக்கழிக்கின்றன என்பதே நாம் கண்டுகொண்டிருப்பது. வறிய நிலையில் வாழ்வாதாரங்கள் இல்லாத நிலையில் மக்கள் வாடுகிறார்கள் என்பதான யதார்த்த நிலைமைகளை இவை வெளிப்படுத்துவதில்லை. அல்லலுறும் அடித்தள மக்களின் குரலாய், அவர்களின் தேவைகளைப் புரிந்து வெளிப்படுத்துவதற்கு மாறாக, சமுதாயத்தில் மிகச் சிறியதொரு பகுதியினரின் நலன்களைப் பாதுகாக்கிற, அவர்களது ரோசங்களையும் வீம்புகளையும் முன்னிலைப்படுத்துகிற வேலையைத்தான் இந்த ஊடகங்கள் செய்கின்றன.

நாட்டு மக்கள் மேலும் மேலும் ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்தப்பட்டவர்களாக இருப்பதை விட, அவர்களை வெறும் ஆவேசத்தில் பொங்கிக் கொண்டு, அழுந்திச் சுமை சுமப்பவர்களாக மாற்றுவதற்குத்தான் இந்த ஊடகங்கள் செயல்படுகின்றன.

ஊடகங்களின் சுதந்திரத்திற்கு முன்பதாக ஊடகங்களிடமிருந்து சுதந்திரத்தை நாம் பெற்றாக வேண்டும்.

- ஆசிரியர்

# குருநகர் 5 மாடிக் குடியிருப்பை புனரமைக்க 70 மில்லியன் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

குருநகர் 5 மாடிக் கட்டடத்தின் புனரமைப்புக்கு 70 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதென தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் நோயல் ஜெயச்சந்திரன் தெரிவித்தார்.

பல வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்பட்ட 5 மாடிக் கட்டடத்தினை வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் பணிப்புக்கு அமைவாக கடந்த பெப்ரவரி மாதம் மதிப்பீட்டு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிலையில் 160 வீடுகளைக் கொண்ட 5 மாடிக் கட்டடத்தின் யன்னல்கள் இரும்புக் கம்பிகள் சேதமடைந்துள்ளன.

இதேவேளை, யாழ். மாநகரசபையானது மல சல கூடம் என்பவற்றைப் புனரமைத்துக் கொடுத்துள்ளது.

அடுத்த வருடத் திட்டத்தின் கீழ் இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியின் கீழ் 5 மாடிக்கட்டடத்திற்கான நீர் வசதிகள், திருத்த வேலைகள் நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எஸ்)

# இயற்கை அனர்த்தத்திற்கு முகம்கொடுக்க தயாராகவேண்டும்

(கொழும்பு)

இலங்கையில் தற்போது நிலவுகின்ற மழையுடனான காலநிலையைத் தொடர்ந்து, எந்தவித மான இயற்கை அனர்த்தத்துக்கும் முகம் கொடுக்க தயாராக இருக்க வேண்டும் என்று அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்தஅமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட நிலஅதிர்வுகளைத் தொடர்ந்து இந்த எச்சரிக்கை நிலைமை அதிகரித்திருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையில் இது தொடர்பிலான பேச்சுவார்த்தை ஒன்று எதிர்வரும் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

இதற்கிடையில் இலங்கையில் தொடர்ந்து ஏற்பட்ட நில அதிர்வுகள் குறித்து பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இலங்கையின் பல பகுதிகளில் நில அதிர்வு உணரப்பட்டது.

இது 3.6 என்ற ரிக்டர் அளவில் பதிவானதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் இது குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை என இலங்கை புவிசரிதவியல் மற்றும் சுரங்கப்பணித் திணைக்களத்தின் தலைவர் என்.பி.விஜயானந்தா தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் கடந்த இரண்டு மாதங்களில் 3 தடவைகள் இலங்கையில் குறிப்பிட்ட சிலப்பகுதிகளில் இந்த நில அதிர்வு உணரப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இது தொடர்பில் பரிசீலனைகளை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மதவழிபாட்டு உரிமை அனைவருக்கும் உண்டு

## ஜயலத் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

அனைத்து இலங்கையர்களுக்கும் தமது மத வழிபாடுகளில் ஈடுபட இலங்கை அரசியலமைப்பில் உரிமை வழங்கப்பட்டுள்ளது. எனினும் துரதிர்ஷ்டவசமாக எமது நாட்டு முஸ்லிம் மக்களுக்கு அந்த உரிமைகள் மறுக்கப்பட்டு வருவதாக அண்மைக்கால சம்பவங்கள் தெரிவிக்கின்றன என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அண்மையில் தம்புள்ளை நகரில் இடம்பெற்ற சம்பவம் ஓர் உதாரணமாகும். இந்த வாரத்தில் தெஹிவளையில் முஸ்லிம் மக்களுக்கு அந்த நிலைமை ஏற்பட்டது. குறுகிய நோக்குக் கொண்ட, இனவாத பிரிவினர் தெஹிவளை முஸ்லிம் மக்களுக்கு தமது மத வழிபாடுகளை மேற்கொள்ளும் உரிமையை இல்லாமல் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதனை நாம் கண்டிக்கின்றோம். இதற்கு ஒரு போதும் இடமளிக்க முடியாது.

பௌத்த, இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவம் உள்ளிட்ட அனைத்து மக்களுக்கும் தமது மதத்தை பின்பற்ற உரிமைகள் உள்ளன. இதனை பறிக்கும் முயற்சிகளுக்கு இடமளிக்க முடியாது. அனைத்து இலங்கையர்களுக்கும் பயம், சந்தேகம், பீதியின்றி அனைத்து பகுதிகளிலும் வாழ்வதற்கான சூழல் உருவாக்கப்படல் வேண்டும்.

சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் அனைவருக்கும் தத்தமது மதத்தை பின்பற்றுவதற்கான உரிமைகளை உறுதிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி என்றும் இலங்கையர்கள் அனைவரும் தத்தமது மதங்களை பின்பற்றுவதற்கான உரிமைகளை வென்றெடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன் என்று அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## களனியில் கடத்தப்பட்ட பெண் மருதானையில் விடுவிப்பு

(கொழும்பு)

களனி-வெதுல்வத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் கடத்தப்பட்ட பெண் மருதானை பிரதேசத்தில் இறக்கிவிடப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடத்தப்பட்ட இந்தப் பெண் போதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடையவராக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக தெரிவித்த பொலிஸ் பேச்சாளர், யாரால் இந்தப் பெண் கடத்தப்பட்டார் என்பது இதுவரை கண்டறியப்படவில்லையெனக் குறிப்பிட்டார். பெண் ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டதாக செய்தி பரவியதை அடுத்து குறித்த பிரதேசத்தில் பதற்றம் ஏற்பட்டதாகவும், எனினும், பொலிஸாரின் பலத்த பிரயத்தனத்தின் பின்னர் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

# இலங்கையின் புராதனச் சின்னங்களை மீளக் கொண்டுவர நடவடிக்கை

இலங்கையின் புராதனச் சின்னங்கள் பல காணாமல் போன பின்னணியில், காலனித்துவக் காலத்தைச் சேர்ந்தவை உட்பட வெளிநாடுகளிலுள்ள இலங்கையின் தொல்லியல்பொருட்களை மீண்டும் இலங்கைக்கு கொண்டுவருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்வதாக அமைச்சர் ஜகத் பாலசூரிய தெரிவித்துள்ளார்.


இலங்கையை ஆட்சி செய்த இங்கிலாந்து, போர்த்துக்கல், நெதர்லாந்து போன்ற நாடுகளின் நூதனசாலைகளில் இலங்கையின் தொல்லியல் பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன.

இப்பொருட்களை ஒப்படைக்குமாறு சம்பந்தப்பட்ட நாடுகளின் அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுப்பதற்கு கடந்த காலத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அதற்கு பலன் கிடைக்கவில்லை.

இப்போது முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளோம். இலங்கையிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட அத்தகைய பொருட்களின் விபரங்களை அனுப்புமாறு முதலில் கோரவுள்ளோம். அந்நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களின் ஊடாக இந்நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்விபரங்கள் கிடைக்கப்பெற்றவுடன் அவற்றை இலங்கைக்கு அனுப்புமாறு நாம் கோருவோம் என அவர் தெரிவித்தார்.

# முன்பள்ளி ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும்



(யாழ்ப்பாணம்)

மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு வழிகாட்டலாய் அமைகின்ற முன்பள்ளிக் கல்வியை சரியான வகையில் முன்பள்ளிகள் வழங்க வேண்டும் என ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்பு குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

கோப்பாய் கோட்ட முன்பள்ளிகளின் வருடாந்த விளையாட்டு விழா நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை வலி.கிழக்கு பிரதேச முன்பள்ளிகளின் இணைப்பாளர் செல்வி சிறிதேவி தலைமையில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றபோது பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், முன்பள்ளிக் கல்வியானது மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கெல்லாம் அத்திவாரக்கற்களாய் அமைகின்றன. இவ்வாறான அடிப்படைக் கல்வியை சிறந்த வகையில் வழங்க முன்பள்ளி ஆசிரியர்கள் முன்வருவதுடன் பெற்றோரின் பங்களிப்பும் மிகவும் அவசியமானதொன்று.

குறைந்த கொடுப்பனவுடன் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடும் முன்பள்ளி ஆசிரியர்களின் தார்மீகப் பணியை நான் வரவேற்கின்றேன். இந்த முன்பள்ளி ஆசிரியர்களின் ஊதியம், நியமனம் என்பன தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து வெற்றியீட்டிய சிறார்களுக்கான பரிசில்களை நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகள் வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் வலி.கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச இணைப்பாளருமான ஐங்கரன், யாழ்.வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் விமலநாதன், கோப்பாய் பிரதேச செயலக ஆரம்பப் பிள்ளைப்பருவ உத்தியோகத்தர் பத்மகுமார், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் பத்மநாதன், பெற்றோர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மக்கள் வங்கி பிரதான கிளைக்கு புதிய கட்டடம் அமைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் பிரதான வீதிக் கிளைக்கு புதிய கட்டடமொன்று அமைக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏ-9 வீதி அகலிப்புப் பணிகளுக்கான பிரதான வீதியில் இயங்கி வந்த வங்கிக் கிளையின் ஒரு பகுதி உடைக்கப்பட்டு வருவதால் வங்கிச் செயற்பாடுகளில் பல்வேறு தரப்பினரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில் மேற்படி வங்கிக்குப் புதியகட்டடம் நிர்மாணிக்கப்படும்போது தற்காலிகமாக அவ்வங்கியின் செயற்பாடு பஸ்ரியன் சந்தியில் உள்ள கட்டடமொன்றுக்கு மாற்றப்பட விருப்பதாகவும், கட்டட வேலைகள் முடிவடைந்து பழைய இடத்தில் இயங்கும்போது தற்காலிக இடத்தில் சேவை நிலையம் இயங்கி வரும் எனவும் வங்கி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஏற்கனவே மாகாண கூட்டுறவு வங்கியாக இயங்கி வந்த வங்கியே மக்கள் வங்கிச் சட்டத்தின் மூலம் மக்கள் வங்கியினால் வங்கி பொறுப்பேற்கப்பட்டு மக்கள் வங்கி பிரதான கிளையென மாற்றம் பெற்று இயங்கி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

(வி)

# இந்து சமய பாட பொது அறிவுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களின் அறிவை வளர்க்கும் நோக்குடனும் அவர்களினை ஊக்குவிக்கும் முகமாகவும் ஒவ்வொரு வருடமும் இந்து சமயப் பொதுஅறிவுப் போட்டிப் பரீட்சை ஒன்றை நடத்தி வருகின்றது.

அவ்வரிசையில் இந்து சமயப் பொது அறிவுப்போட்டி - 2012 பரீட்சையை இவ்வருடம் ஜூன் மாதம் 09 ஆம் திகதி சனிக்கிழமை நடத்தவுள்ளது. இப்பரீட்சையானது 3 பிரிவுகளாக நடத்தத் திட்டமிடப்பட்டு காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை இடம்பெறவுள்ளது.

2ஆம், 3ஆம், 4ஆம் வகுப்புக்கான பரீட்சை காலை 9 - 10 மணிவரையும், 5ஆம், 6ஆம், 7ஆம் வகுப்புக்கான பரீட்சை காலை 10 - 11.30 மணிவரையும், 8ஆம், 9ஆம், 10 ஆம், 11ஆம் வகுப்புக்கான பரீட்சைகள் மதியம் 12 - 1 மணி வரையும் இந்து அறநெறிப் பாடசாலை இயங்கும் இடத்திற்கு அருகில் உள்ள பாடசாலைகளில் நடத்தப்படவுள்ளது.

இது சம்பந்தமான விபரங்களினை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சாந்தி திருநாவுக்கரசு பரீட்சை நடைபெறவுள்ள பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

(42)

# மத்திய கல்லூரி தமிழ்ச் சங்கத்தினால் நாடகத் திறன் காண் போட்டிகள்

(யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் தமிழ்ச் சங்கத்தினால் நடத்தப்படவுள்ள 2012 ஆம் ஆண்டிற்கான முத்தமிழ் விழாவினை முன்னிட்டு நாடக மன்றத்தினால் கல்லூரி மாணவர்களுக்கிடையில் நாடகத்திறன் காண் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

**தனிநடிப்பு**

கீழ்ப்பிரிவு 7, 8, 9. மத்திய பிரிவு 10, 11. மேற்பிரிவு 12, 13 ஆகிய பிரிவுகளின் கீழ் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளுக்குரிய நிபந்தனைகளாக மாணவர்கள் விரும்பிய தலைப்பில் 5 நிமிடத்திற்குள் தனி நடிப்பை வெளிப்படுத்துவதுடன் நாடகக் கருப்பொருள் தெளிவாக அமைந்திருத்தல், படைப்பானது புத்தாக்க சிந்தனையுடன் புதிய படைப்பாக அமைதல், பொருத்தமான வேடப் புனைவு மேற்கொள்ளப்படல் ஆகிய அம்சங்கள் கொண்டமைதல் வேண்டும்.

மது, புகைப்பிடித்தல், ஆபாசம் சார்ந்ததாகவோ தனிநபரையோ, இனத்தையோ, மதத்தையோ புண்படுத்தும் வகையிலாகவோ அமைந்த சம்பவங்கள் தவிர்க்கப்படவேண்டும். கல்லூரி ஆசிரியர்கள் அல்லாத நாடகத்துறைசார்ந்தவர்களால் இறுதி மதிப்பீடு மேற்கொள்ளப்படும். இறுதிப் போட்டிகள் ஆனி மாதத்தின் முதல் வாரத்தில் நடத்தப்படும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

**நாடகப் பிரதி எழுதும் போட்டி**

கீழ்ப்பிரிவு 7, 8, 9. மத்திய பிரிவு 10, 11. மேற்பிரிவு 12, 13 போன்ற பிரிவின் கீழ் நடத்தப்படவுள்ளதுடன் நாடகப்பிரதி எழுதுவதற்காக ஒரு மணித்தியாலம் தரப்படும். நாடகப்பிரதி 10 - 15 நிமிடத்திற்குட்பட்ட ஆற்றுகை நேரத்தினைக் கொண்டிருக்க வேண்டும். நாடகத் தலைப்பு போட்டியின் போது வழங்கப்படும். காட்சி சம்பவங்கள் பற்றிய தெளிவு இருத்தல் வேணடும். இவ்விரு போட்டியிலும் பிரிவு ரீதியாக முதல் மூன்று இடங்களையும் பெறும் போட்டியாளர்களுக்கு முத்தமிழ் விழாவன்று பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படுவதுடன், தனிநடிப்பில் முதல் இடம்பெறும் ஆற்றுகை முத்தமிழ் விழாவில் ஆற்றுகை செய்யப்படும் என யாழ்.மத்திய கல்லூரி நாடக மன்றப் பொறுப்பாளர் எஸ்.ரி.குமரன் அறிவித்துள்ளார்.

# இரவு நேரங்களில் தடைப்படும் மின்சாரம்; பாவனையாளர்கள் கடும் விசனம்

(யாழ்ப்பாணம்)

இரவு நேரங்களில் மின்விநியோகம் தடைப்படுவதால் அது தொடர்பாக சம்பந்தப்பட்ட மின்சார சபை அலுவலகத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முடியாது பாவனையாளர்கள் சிரமங்களை எதிர்கொள்வதாக விசனம் வெளியிடப்படுகிறது.

நேற்றுமுன்தினம் இரவும், கடந்த வெள்ளிக்கிழமை இரவும் கோண்டாவில் பகுதியில் மின்சாரம் தடைப்பட்ட போது சம்பந்தப்பட்ட மின்சார சபை அலுவலகத்துடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு அறிவிக்க முற்படுகின்ற போது அத்தொலைபேசியில் இருந்து வரவேண்டிய அழைப்புக்கு பதிலாக அடைய முடியாத நிலையில் ஸ்ரீலங்கா ரெலிகொம்மினால் மன்னிக்கவும் தற்போது அழைத்த இலக்கம் இணைக்கப்படாது இருப்பதால் சற்றுத் தாமதித்து தொடர்பு கொள்ளவும் என்ற பதிலையே ஆங்கிலத்தில் கேட்க முடிந்தது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் இரவு 12 மணியளவில் தடைப்பட்ட மின் விநியோகம் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அலுவலகத்துடன் தடைப்பட்ட நேரம் முதல் காலை 6.30 மணி வரை தொடர்புகொண்ட போதும் இந்தப் பதிலே பாவனையாளர்களுக்குக் கிடைத்து வருகின்றது.

இந்நிலையில் அன்றைய தினம் காலை 6.45 மணிக்கு மீண்டும் அந்த அலுவலகத்துடன் தொடர்பு கொண்டபோது தான் இரவு நேர ஊழியரினால் பதில் தர முடிந்தது.

இரவு நேரத்தில் போக்குவரத்துக்களை மேற்கொள்வோர் வீதியில் தற்போதைய கடும் காற்றினால் மரங்கள் முறிந்து விழும் சந்தர்ப்பங்கள் ஏற்படும் நிலையில் பாவனையாளர்கள் மின்சார சபையிடம் தொடர்பு கொண்டு கேட்பதற்காக தொடர்புகள் ஏற்படுத்தப்படுகிறது.

எனவே ஊழியர்களின் இத்தகைய பொறுப்பற்ற தன்மையினால் பாவனையாளர்கள் பெரும அசௌ கரியங்களுக்கு உள்ளவதாகத் தெரிவிக்கின்றனர்.

## ஆங்கிலதினப் போட்டிகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கோட்டமட்ட ஆங்கில தினப் போட்டிகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் படசாலையில் நடைபெறவுள்ளது.

மேலும் கரவெட்டி கோட்டமட்ட போட்டிகள் எதிர்வரும் முதலாம் திகதி பி.ப. 2 மணிக்கு நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலையில் நடைபெறவுள்ளது. இப்போட்டிகளில் பேச்சு, கதை சொல்லுதல், வாசித்தல், இசைவும் அசைவும் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளது.

(109)

# வலது குறைந்தவர்களுக்கான பொதுப் போட்டிப் பரீட்சை வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு - III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான பொதுப் போட்டிப் பரீட்சை - 2009 வலது குறைந்த புனர்வாழ்வு சலுகை நிபந்தனையின் கீழ் விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களால் அங்கவீனர்களுக்காக ஒதுக்கப்பட்ட கட்டத்தை நிரப்பத் தவறிய அங்கவீனமுடைய விண்ணப்பத்தாரர்கள் அவ்விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சை கடந்த 2010 ஆம் ஆண்டு மே மாதம் நடத்தப்பட்ட நிலையில் இப்பரீட்சைக்குத் தோற்றி மொத்தப் புள்ளியில் 50 வீதம் அல்லது அதற்கு அதிகமாகப் புள்ளிகளைப் பெற்றும் மேற்படி விண்ணப்பிக்கத் தவறியவர்கள் மாதிரி விண்ணப்பப் படிவத்தைப் பெற்று எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் இணைந்த சேவைகள், பணிப்பாளர் நாயகம், இணைந்த சேவைகள் பிரிவு, பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு - 7 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.





சாவகச்சேரி - சரசாலை பொது நூலகத்தில் முப்பரிமான நூலகக் கண்காட்சி அண்மையில் நடைபெற்றபோது யாழ்.பல்கலைக்கழக நூலகர் அ.ஸ்ரீகாந்தலட்சுமி கண்காட்சியை நாடாவெட்டித் திறந்து வைப்பதையும், கண்காட்சியை பிரதிநிதிகள், மாணவர்கள் பார்வையிடுவதையும் காணலாம். (11)

# நாட்டின் அபிவிருத்தியை மேம்படுத்த வேண்டும்

## யாழ். அரச அதிபர்



பல்கலைக்கழக மஹாபொல புலமைப் பரிசில் திட்டத்தின் மூலம் மாணவர்களின் உயர் கல்வியை மேம்படுத்தி அதனூடாகவே எமது நாட்டின் அபிவிருத்தியையும் சுபீட்சத்தையும் மேம்படுத்த வேண்டும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கான மஹாபொல புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 9.00 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றபோது கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மஹாபொல புலமைப் பரிசில் திட்டத்திற்கு வருடாந்தம் 850 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

இத்திட்டம் மஹாபொல நம்பிக்கை நிதியத்தின் ஊடாக 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் அகில இலங்கை ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட !0,300 பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

அந்த வகையில் யாழ். மாவட்டத்தில் 425 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு உயர் கல்விக்கான வாய்ப்பை பெறுவதற்கு வழங்கப்படுகின்றது.

1982 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த மஹாபொல உயர்கல்வி புலமைப் பரிசில் திட்டத்தில் முதன் முதலாக 428 மாணவர்களை கொண்டு தனது சேவையை நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்தில் 50 வீதமானவர்கள் வறுமை மற்றும் வருமானம் இன்றிக் கல்வி பயிலும் மாணவர்கள் உள்வாங்கப் பட்டுள்ளார்கள்.

அந்த வகையில், எமது நாட்டின் அபிவிருத்திக்காகவும், எமது நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் மாணவர்கள் தமது கலவி மூலம் செயற்படுத்தி காட்டவேண்டும்.


எமது எதிர்கால திட்டம் எமது நாட்டின் அபிவிருத்திக்கும் சுபீட்சத்திற்கும் உறுதுணையாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு மாணவர்களுக்கும் 3 மாதங்களுக்கான தொகையாக7650 ரூபா பணம் உயர் கல்விக்காக வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பணிப்பிற்கு அமைவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

எந்த நாட்டிலும் இலவச கல்வீ திட்டம் இல்லாது உள்ளபோதிலும் எமது நாட்டில் மட்டுமே இலவச கல்வித் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

அந்த வகையில், மஹாபொல உயர்கல்வி புலமைப் பரிசில் திட்டத்தில் சுமார் 200 ஆயிரம் மாணவர்கள் இணைக்கப் பட்டுள்ளனர். இதனூடாக மாணவர்கள் உயர் கல்வியை மேம் படுத்துவதற்கான செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (எஸ்)

## தன்னிறைவு மின்சாரம்...



வடபகுதிக்கு தடங்கலற்ற வகையில் மின்சாரம் கிடைப்பதற்கான முதற்கட்ட பணியாக தென்பகுதியிலிருந்து உயரழுத்த மின்சாரத்தை கொண்டு வருவதற்கான நிர்மாணப் பணிகள் கிளிநொச்சியில் இடம்பெற்று வருகின்றது.

(படம் : ஜெ.கலையகன்)

## சான்றிதழ் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இதற்கென அமைக்கப்படும் பரீட்சை திணைகளங்களில் நடத்தப்படவுள்ளது.

இப்பரீட்சை சிங்களம், தமிழ் ஆகிய இருமொழிகளில் நடைபெறவுள்ளதுடன்,

தகுதியுடைய விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம் ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்பி வைப்பதுடன் விண்ணப்பங்களில் கடித உறையின் மேல் மூலையில் கத்தோலிக்க மறைப்பாடசாலை இறுதிப் பரீட்சை -2011 என்பதைக் குறிப்பிட்டு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## வாய்க்கால் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மணிக்கூட்டு வீதி சுற்றுவட்டத்தில் வாய்க்கால் ஒன்று வெட்டப்பட்டிருப்பதால் அவ்வீதியூடாக பயணிக்கும் மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டிகளில் பயணிப்பவர்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மணிக்கூட்டு கோபுரத்தைச் சுற்றி கடந்த வாரமே இந்த வாய்க்கால் வெட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வி)

## வேறுபடும் பேருந்துக் கட்டணங்கள்; சிரமத்துக்குள்ளாகும் பயணிகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண தனியார் பேருந்துகளில் பயணக் கட்டணங்கள் அறவிடுவது வேறுபாடாக இருககின்றது என பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவிற்குச் செல்லும் வடமாகாண தனியார் பேருந்துகளில் கிளிநொச்சி மாவட்டத்திற்குச் செல்ல ஒரு பேருந்தில் 92 ரூபாவும், மற்றொரு பேருந்தில் 96 ரூபாவும் அறவிடப்படுகிறது.

இதனால் மக்களின் பணம் சுரண்டப்படுவதோடு, பயணிகள் பெரும் சிரமத்திற்கும் ஆளாக்கப்படுகின்றனர்.

சில பேருந்துகளில் மிகுதிப் பணம் கொடுப்பதில்லை. பற்றுச் சீட்டின் பின்புறத்தில் மிகுதியை எழுதிக் கொடுத்து விடுகின்றார்கள்.

பேருந்து தரிப்பிடம் வந்தும் மிகுதிப் பணம் கேட்டால் சில்லறை இல்லை என தெரிவிக்கின்றார்கள்.

பேருந்து கட்டண விபரங்களை பேருந்தில் காட்சிப் படுத்தினால் பயணிகள் அதற்கேற்ப சில்லறைப் பணத்தைக் கொண்டு செலவதற்கு ஏதுவாக இருப்பதுடன், சில்லறைத் தட்டுப்பாட்டைக் குறைக்கவும் முடியும். இதன் மூலம் பயணிகள் தமது மிகுதிப் பணத்தினை சேமிக்கவும் ஏதுவாக இருக்கும்.

எனவே, வடமாகாண தனியார் போக்குவரத்து திணைக்களம் மற்றும் தேசிய போக்குவரத்துத் திணைக்களம், சகல மாவட்டங்கள் மற்றும் சகல இடங்களிற்கான பேருந்து கட்டண விபரங்களை பேருந்துகளில் காட்சிப்படுத்த நடவடிக்கை மேற்கொளளுமாறு பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (எஸ்)

## முரசின் இன்றைய பலன்

(29.05.2012 -செவ்வாய்க்கிழமை)

நந்தன வருஷம் வைகாசி மாதம் 16 ஆம் திகதி. அட்டமி முற்பகல் 8.39 வரை.
நட்சத்திரம் பூரம் முன் இரவு 8.08 வரை. சித்தாமிர்தம்
கரிநாள, அட்டமி - நவமி இராகுகாலம் 2.52 - 4.22 வரை.
சுபநேரம 10.22 - 11.52 வரை. எமகண்டம் 8.52 - 10.22 வரை.
குளிகைகாலம் 11.52 - 1.22 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பயண அனுகூலம், சுபகாரியங்கள், மேல் படிப்புக்கான வாய்ப்பு, தடைகள் நீங்கும். |
| ரிஷபம் | செலவுகள் அதிகரிப்பு, சமுதாய அந்தஸ்து கிடைக்கும், உறவினர்களை அனுசரிக்கவும். |
| மிதுனம் | மனமகிழ்ச்சி, தொழில்துறையில் இலாபம், உறவினரால பிரச்சினைகள், தேவைக்கேற்ப பணவரவு. |
| கடகம் | மனதில் பயம், பிரச்சினைகள் அகலும், முன்னெச்சரிக்கை, சுபகாரியங்கள் கைகூடும். |
| சிம்மம் | நினைத்தகாரியம் வெற்றி, குடும்ப அன்னியோன் யம், கல்வியில் சாதனை, சிறப்பான மணவாழக்கை. |
| கன்னி | முதலீட்டில் வளம், வாழ்க்கையில் மகிழ்ச்சி, பலமான குடும்ப ஒற்றுமை, புத்திரர்வழியால்சஞ்சலம். |
| துலாம் | குழப்பநிலை, உறவினர்களை அனுசரிக்கவும், குடும்பத்தில் ஒற்றுமை, பயண அலைச்சல். |
| விருச்சிகம் | எதிலும் வெற்றி, பிரிந்தவர் ஒன்றுகூடுவர், பணி நீடிப்புக்கு இடமுண்டு, செலவு அதிகரிக்கும். |
| தனுசு | ஒதுங்கி நடத்தல் நன்று, ஸ்தலயாத்திரை, கருத்து வேறுபாடுகள்தீரும், தகுதிக்கேற்ற வேலைவாய்பபு. |
| மகரம் | பொருளாதார சிக்கல், நண்பர்களால் அனுகூலம், போட்டிகளை சந்திக்க தேரிடும். |
| கும்பம் | எதிர்பாராத தொல்லை, ஆன்மீகத்தில ஈடுபாடு, முன்கோபமதவிர்க்கவும், கருத்து வேறுபாடு நீங்கும். |
| மீனம் | உற்சாகமான தினம், எதிரிகள் நண்பர்களா வர், வருவாய் பெருகும், பாராட்டப்படுவீர்கள். |

## விளையாட்டு உபகரணங்கள் பாடசாலைகளுக்கு விநியோகம்

(பருத்தித்துறை)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் பாடசாலை உணவு செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் வலயத்திலுள்ள பாடசாலை களுக்கு விளையாட்டு உபகரணத் தொகுதி வழங்கும் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, கௌரவ விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்து கொளளவுள்ளனர்.

இந்நிகழ்வில் பாடசாலை உணவுச் செயற்திட்ட இணைப்பாளரும், கோட்டக்கல்விப் பணிப்பாளர்களும், பாடசாலை அதிபர்களும் கலந்து கொள்வதற்கு ஏற்ற நடவ்டிக்கைகளை வலயக் கல்விப் பணிப்பாளர் மேற்கொள்ளுமாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (109)

## உயர்தர மாணவர்களுக்கு முன்னோடிப் பரீட்சை

வடமாகாண கல்வித் திணைக்களம் வடமாகாணத்திற்கு உட்பட்ட சகல வலயங்களிலும் கலை, வர்த்தகப் பிரிவுகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு முன்னோடி பரீட்சைகளினை நடாத்தவுள்ளது.

இப்பரீட்சையானது வர்த்தக பிரிவில் கணக்கியல், பொருளியல், வர்த்தகம் ஆகிய பாடங்களுக்கும் கலைப்பிரிவில் அளவையியல், புவியியல், அரசியல் விஞ்ஞானம், வரலாறு ஆகிய பாடங்களுக்கும் இத்தகைய முன்னோடி பரீட்சைகளினை நடாத்தவுள்ளது.

இப் பரீட்சையானது பாடசாலைகளிலிருந்து முதலாம் முறையாகவும் இரண்டாம் முறையாகவும் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்குமாக நடாத்தத் திட்டமிடப்பட்டு வினாத் தாள்களினை அச்சிடுவதற்காக ஒவ்வொரு பாடசாலைகளிலிருந்தும் மாணவர்கள் தொகை வட்மாகாண கல்வித் திணைக்களத்தால் கோரப்பட்டுள்ளது. (42)

## வீதிக்கு குறுக்காக செல்லும் வடிகால் பாலம் சேதம்

(வண்ணை)

யாழ். கே.கே.எஸ். வீதியில் தட்டாதெரு சந்தியில் இருந்து நாச்சிமார் கோவிலடி வரையான இடங்கள் தார்க்கலவை கொண்டு செப்பனிடப்பட்டுள்ளது.

அதேவேளை, சிவன் வடக்கு வீதிச் சந்தியில் காங்கேசன்துறை வீதியை ஊடறுத்துச் செல்லும் வடிகால் பாலம் சேதமடைந்து வடிகாலுள் விழும் நிலையில் காணப்படுகிறது.

முன்னதாக சிறிதாகச் சேதம் அடைந்து இருந்தது. மேற்படி பாலம் நீளத்துக்கும் வெடிப்புத் தோன்றி வடிகாலுள் நசிந்து போய் உள்ளது.

கனரக வாகனங்களும் போக்கு வரவில் அதிகரித்துக் காணப்படும் பிரதான வீதிகளில் ஒன்றாக இருக்கும் கே.கே.எஸ். வீதியில் இந்த அபாயம் தோன்றியுள்ளது சுட்டிக்காட்டத்தக்கதாகும். (68)

# விளையாட்டில் சாதிக்கும் உடல் வலுவை வழங்குவதே கால்பந்து பயிற்சியின் நோக்கு


சர்வதேச கால்பந்து பயிற்றுநர் வி. சுப்பிரமணியம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் முதன் முறையாக சென் ஜோன்ஸ் கல்லூரியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஐந்து நாள் கால்பந்து பயிற்சி முகாம் அனைத்து விளையாட்டில் சாதிக்கக் கூடிய உடல் வலுவை சிறார்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் அமையும் என சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனப் பயிற்றுநர் வின்சன் சுப்பிரமணியம் தெரிவித்தார்.

சென். ஜோன்ஸ் கல்லூரியில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## தேசிய, சர்வதேச போட்டிக்கான அடித்தளம்

யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து வலயங்களைச் சேர்ந்த 40 பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட சிறுவர், சிறுமியர்களுக்கான ஐந்து நாள் கால்பந்து பயிற்சி முகாம் இன்றிலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சி முகாம் சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம், இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம், யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக் ஆகியவற்றுடன் இணைந்து சென் ஜோன்ஸ் கல்லூரி ஒழுங்குபடுத்தியிருந்தது.

சென் ஜோன்ஸ் கல்லூரி அதிபர் ஞானப்பொன்ராஜா தலைமையில் நடைபெற்ற இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் வின்சன் சுப்பிரமணியம் மேலும் தெரிவித்ததாவது:

உலகிலேயே கால்பந்தாட்டம் மிகப் பிரபல்மான விளையாட்டு. இந்த விளையாட்டில் சிறு வயது முதல் சிறுவர்களை பயிற்றுவிப்பதன் மூலம் சர்வதேச மட்டத்தில் சாதிக்கக் கூடிய வீரர்களாக எதிர்காலத்தில் உருவாக்க முடியும். இலங்கையிலேயே இரண்டாவது பெரிய கால்பந்து பயிற்சி முகாமாக இது அமையவுள்ளது.

கால்பந்து நுணுக்கங்களை அறிந்து பயில்வதன் மூலம் சிறந்த கால்பந்தாட்ட வீரராக வளர முடியும். மாணவர்களுக்கு படிப்பு மட்டும் முக்கியமல்ல. விளையாட்டும் அவசியம். அதனால்தான் நல்ல ஒழுக்கத்தையும், தேக ஆரோக்கியத்தையும் பேண முடியும். சிறு வயது முதலே ஒவ்வொரு விளையாட்டிலும் கவனம் செலுத்தப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டு வந்தால் எதிர்காலத்தில் எவரும் எதிலும் சாதிக்க முடியும். பெண் பிள்ளைகளுக்கு கால்பந்தாட்டம் சிறந்ததொரு விளையாட்டாகவே நான் கொள்வேன். அவர்கள் சிறு வயதுமுதல் இந்தக்கால்பந்து விளையாட்டை விளையாட முற்படவேண்டும். அதன் மூலம் அவர்கள் நல்ல ஆரோக்கியத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். நோய்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் இருக்காது.

இந்த ஐந்து நாள் கால்பந்து பயிற்சி முகாம், கால்பந்து போட்டி என்பதற்கு அப்பால் அனைத்து விளையாட்டிலும் சாதிக்கக் கூடிய உடல் வலுவை இந்த சிறார்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் என்று நம்புகின்றேன். அதுவே முக்கியம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இன்று ஆரம்பமாகும் இந்த ஐந்து நாள் கால்பந்து பயிற்சி முகாமை பார்வையிட விரும்பும் கால்பந்து ஆர்வலர்கள், பயிற்றுநர்கள் பழைய பூங்கா நுழை வாயிலூடாக வருகை தந்து அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் இருந்து பார்வையிட முடியும் என சென் ஜோன்ஸ்கல்லூரி அதிபர்தெரிவித்தார்.

இச்சந்திப்பில் சென் ஜோன்ஸ் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் அன்ரனிப்பிள்ளை, பிரதி அதிபர் துசிதரன், இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட சங்கத்தின் யாழ். மாவட்ட செயலாளர்ஆகியோர் கலந்துகொண்டமைகுறிப்பிடத்தக்கது.(எஸ்பி.,எஸ்,20)

# வெற்றிகரமான கப்டனை உருவாக்குவது சிறந்த அணியே என்கிறார் கம்பீர்

(சென்னை)

சிறந்த அணியே வெற்றிகரமான தலைவரை உருவாக்கும் என கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக் கப்டன் கம்பீர் தெரிவித்தார்.

கொடுக்கப்பட்ட பணி முடிவடைந்து விட்டது. இந்த தருணம் எப்போது வரும் என எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். இந்த தொடர் முழுவதும் எங்களுக்கு ஆதரவளித்த கொல்கத்தா இரசிகர்களுக்கு இந்த வெற்றியை சமர்ப்பிக்கிறோம். பாலாஜி தான் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய நாயகன். தன் சொந்த மைதானத்தில் நடந்த இறுதிப்போட்டியில் பாலாஜி ஆடமுடியாமல் போனது. அவருக்காகத் தான் நாங்கள் ஆடினோம். நடப்பு சம்பியன் சென்னைக்கு எதிராக 190 ஓட்டங்கக்கு மேல் எடுத்து வெற்றிபெற பிஸ்லாவின் சிறப்பான ஆட்டம்தான் காரணம். வெற்றிகரமான கப்டன், வெற்றிகரமான கப்டனை உருவாக்குவதில்லை. நல்ல அணி தான் கப்டனை, வெற்றிகரமான கப்டனாக்குகிறது. இந்த தொடரின் ஒரு ஆட்டத்தில் நான் ஆட்டமிழந்ததும், கால்காப்புகளைக் கழற்றினேன். பஞ்சாப்புக்கு எதிரான அந்த ஆட்டத்தில் நாங்கள் இலக்கை எட்ட முடியாமல் தோல்வி அடைந்தோம். அதன்பிறகு எந்த ஆட்டத்திலும் நான் கால்காப்புக்களை கழற்றவில்லை என்றார்.

# சிறப்பாக அமைந்த தொடர்

(சென்னை)

இறுதிப் போட்டியில் தோல்வியுற்றாலும் ஐந்தாவது ஐ.பி.எல். தொடரில் நாங்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளோம் என சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக் கப்டன் டோனி தெரிவித்தார்.

முதலில் விளையாடிய நாங்கள் 190 ஓட்டங்கள் குவித்தோம். இந்த ஓட்டங்கள் போதுமானதே. ஆடுகளம் 2ஆவது துடுப்பாட்டம் செய்வதற்கு ஏற்ற வகையில் இருந்தது. இதனால் நாங்கள் கூடுதலாக 10 ஓட்டங்கள் எடுத்து இருந்தாலும் கொல்கத்தா அணி சேஸ் செய்து இருக்கும். நாங்கள் முதலில் ஓட்டங்கள் சேர்க்க சிரமப்பட்டோம். பின்னர் துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக ஆடி ஓட்டங்கள் குவித்தனர். பிஸ்லாவும், கலிசும் மிகவும் சிறப்பாக விளையாடி ஆட்டத்தை அவர்கள் பக்கம் கொண்டு சென்றார்கள். எங்களது பந்து வீச்சாளர்கள் பந்தை ரிவர்ஸ் சுவிங் செய்யவில்லை. ஒட்டுமொத்தமாக இந்த ஐ.பி.எல். போட்டியில் நாங்கள் சிறப்பாகவே விளையாடினோம். இது மகிழ்ச்சி அளிக்கிறது.

# கிண்ணம் வென்ற அவுஸி வீரர்

மொனாகோ கிராண்ட் பிரிக்ஸ் பார்முலா,1 கார் ரேசில் மார்க் வெப்பர் கோப்பை வென்றார். பார்முலா,1 கார் ரேசில் இந்த ஆண்டுக்கான 6ஆவது ரேஸ் மொனாகோவில் நேற்று முன்தினம் நடந்தது. ஒவ்வொரு ரேசிலும் ஒவ்வொரு வீரர் கோப்பை வென்றுள்ளார். இதே போல, 6ஆவது ரேசிலும் இந்தாண்டில் கோப்பை வெல்லாத அவுஸ்ரேலியாவின் மார்க் வெப்பர் முதல் முறையாக வெற்றி பெற்றார். போட்டி தூரத்தை 1 மணி நேரம் 46 நிமிடம் 6.557 வினாடிகளில் கடந்து சம்பியன் பட்டம் வெற்றார். இதன் மூலம் 62 ஆண்டுகால பார்முலா,1 ரேசில் 6 போட்டிகளில் தனித்தனி வீரர் கோப்பை வெல்வது இதுவே முதல் முறை. பிரிட்டனின் நிக்கோ ரோஸ்பெர்க் 2ஆவது இடத்தையும், ஸ்பெயினின் அலோன்சா 3ஆவது இடத்தையும், ஜேர்மனியின் வெட்டல் 4ஆவது இடத்தையும் பெற்றனர். 7 முறை உலக சம்பியன் பட்டம் வென்ற இயந்திர கோளாறு காரணமாக 64ஆவது சுற்றிலேயே வெளியேறினார்.




# பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் முதல் சுற்றில் வென்றோர்

(பாரிஸ்)

பிரெஞ்ச் ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் முதல் சுற்றில் ஸ்டோசூர், இவானோவிக் எளிதாக வெற்றி பெற்றனர். கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ்ச் ஓப்பன் டென்னிஸ் பிரான்ஸ் தலைநகர் பாரிசில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் முதல் சுற்று போட்டிகள் நடந்தன.

மகளிர் ஒற்றையர் பிரிவில் உலகின் 6ஆம் நிலை வீராங்கனையான அவுஸ்ரேலியாவின் சமந்தா ஸ்டோசூர், பிரிட்டனின் எலினா பல்டசாவை எதிர்த்து விளையாடினார்.

இதில், ஸ்டோசூர் 6,4, 6,0 என்ற நேர் செட்களில் மிக எளிதாக வெற்றி பெற்றார். 13ஆம் நிலை வீராங்கனையான செர்பியாவின் அன்னா இவானோவிக் 6,1, 6,1 என்ற செட்களில் ஸ்பெயினின் வெசினோவை வென்றார்.

மற்ற போட்டிகளில், பிரெஞ்ச் ஓபனில் முன்னாள் சம்பியனான ரஷ்யாவின் கஸ்னட்சோவா 6,1, 6,3 என்ற செட்களில் குரோஷியாவின் லூசிக்கையும், ஜெர்மனியின் கெர்பர் 6,3, 6,4 என்ற செட்களில் சீனாவின் சுவாய் ஜிங்கையும், செக் குடியரசின் ஷபரோவா 6,2, 6,0 என்ற செட்களில் பெலராசின் யகிமோவாவையும் வென்று 2வது சுற்றுக்கு தகுதி பெற்றனர்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஆர்ஜென்டினாவின் ஜூவான் மார்ட்டின் டெல் போட்ரோ 6,2, 6,7, 6,2, 6,1 என்ற செட்களில் ஸ்பெயினின் மோன்டனசையும், ஸ்பெயினின் ஜூவான் கார்லோஸ் பெர்ரேரோ 6,1, 6,4, 6,3 என்ற செட்களில் பிரான்சின் டி வெய்ஜியையும், குரோஷியாவின் சிலிக் 6,4, 6,4, 7,5 என்ற செட்களில் ஸ்பெயினின் நாவாவையும் வென்று 2வது சுற்றுக்கு தகுதி பெற்றனர்.

# நெருக்கடியில் மேற்கிந்தியத்தீவுகள்

(லண்டன்)

இங்கிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி நெருக்கடியான நிலையை எதிர்நோக்கியுள்ளது.

இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுலாவை மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத்தீவு அணிக்கும், இங்கிலாந்து அணிக்கும் இடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி நடைபெற்று வருகின்றது.

இதில் முதல் இனிங்ஸிற்காக ஆடிய இங்கிலாந்து அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 428 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அணித் தலைவர் ஸ்ரோர்ஸ் 141, பீற்றர்சன் 80, மட்ப்றியர் 39 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ராம்போல் மூன்று, றோச், டரன் சாமி, சாமுவேல்ஸ் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 58 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி, இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை மேற்கிந்தியத்தீவுகள் அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் எம். பிராவோ 22 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். ஆட்டமிழக்காது சாமுவேல்ஸ் 13, அணித் தலைவர் டரன் சாமி ஓட்டமெதுவும் பெறாமலும் களத்திலுள்ளனர்.

பந்து வீச்சில் பிரெஸ்னன் மூன்று, அண்டர்சன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். மேற்கிந்தியத்தீவுகள் அணி நான்கு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் மூன்று ஓட்டங்களினால் முன்னிலை வகிக்கின்றது. போட்டி நிறைவடைய இன்னும் இரண்டு நாள்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.




# ஒலிம்பிக் வாய்ப்பை இழந்த எதியோப்பியாவின் தங்க மகன்

2012 லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் விளையாடும் வாய்ப்பினை உலக சம்பியனான எதியோப்பியாவின் ஹெய்லி ஜெப்சிலாசி இழந்துள்ளார்.

இரண்டு முறை பத்தாயிரம் மீற்றர் ஓட்டத்தில் தங்கப் பதக்கத்தை வென்ற அவர் இம்முறை ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்ற தகுதி பெறவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹொன்ஜிலோவில் நடைபெற்ற ஓட்டத்தில் போட்டித் தூரத்தை 27 நிமிடங்கள் 20 தசம் மூன்று ஒன்பது செக்கன்களில் ஜெப்சிலாசி கடந்தார்.

இறுதி நிமிடம் வரை சிறப்பாக ஓடியதாக தெரிவித்த ஜெப்சிலாசி ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெறாமை குறித்து அதிருப்தி அடையவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

# ஜே. பி. எல். ருவென்ரி - 20 சமநிலையில் 2ஆவது போட்டி

(யாழ்ப்பாணம்)

ஜே. பி. எல். ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டித் தொடரின் இரண்டாவது ஆட்டம் சம நிலையில் நிறைவுற்றது.

யாழ். மாவட்டத்தில் கிரிக்கெட் வீரர்களை வளர்க்கும் முகமாக நடத்தப்பட்டு வரும் யாழ்ப்பாண பிறிமியர லீக் ருவென்ரி - 20 கிரிக்கெட் போட்டித் தொடர் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

லீக் முறையில் இடம்பெற்று வரும் இப்போட்டித் தொடரின் இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. இதில் கொக்குவில் கே.சி.சி.சி அணியும், யாழ். பற்றீசியன்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய பற்றீசியன்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சஜிந்தன் இரண்டு சிக்ஸர்கள், நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 39 ஓட்டங்களையும், எரிக் பிரதாப் மூன்று பவுண்டரிகள் அடங்லாக 24 ஓட்டங்களையும், கிளிங்ரன் 16, நியூட்டன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தாம்பவான் 17 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார். மற்றும் யுமாகான் 25 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 136 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொக்குவில் கே.சீ.சீ.சீ. அணி குறித்த ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெயரூபன் மூன்று சிக்ஸர்கள், நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 50 ஓட்டங்களையும், யுதமன் இரண்டு சிக்ஸர்கள், ஒரு பவுண்டரிகள் அடங்கலாக 23 ஓட்டங்களையும், பங்குஜன் நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 18 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் கிளிங்ரன் 32 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். சமநிலையில் இப்போட்டி நிறைவடைந்தமையால் இரு அணிகளுக்கும் தலா ஒவ்வொரு புள்ளிகள் வழங்கப்பட்டன. போட்டியின் ஆட்டநாயகனாக கொக்குவில் கே.சீ.சீ.சீ. அணியைச் சேர்ந்த தாம்பவான் தெரிவானார்.

இப்போட்டித் தொடர் கிழமை நாட்களில் நடைபெற்று வரும் அதேவேளை, தொடரின் இறுதிப் போட்டி அடுத்த மாதம் நடுப்பகுதியில் இடம்பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி., எஸ்.)

# யாழ்ப்பாணத்தில் வூஷு கராத்தே

(யாழ்ப்பாணம்)

சீனத் தற்காப்புக் கலைகளில் மிகப் பழமை வாய்ந்ததாகக் கருதப்படும் வூஷு (WUSHU) யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக அறிமுகப் படுத்தப்படவுள்ளன. சர்வதேச புகழ் மிக்க தற்காப்பு கலை முறைமைகள், போட்டி விதிகள் மற்றும் பயிற்சிகள் யாழ்ப்பாணத்தில் யூன் இரண்டாம் திகதி முதல் யூன் நான்காம் திகதி வரை யாழ். இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் இயங்கும் அரச நிறுவனமான இலங்கை வூஷு சம்மேளனம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. இளையோர் அபிவிருத்தியும், சமாதானமும் என்ற செயற்றிட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் வூஷு அறிமுக நிகழ்வும் - பயிற்சிப் பட்டறையும் இடம்பெறவுள்ளது. பயிற்சிகள் செய்முறையுடன் கூடியதாகவும் காணொளிகள் மற்றும் விளக்கங்களுடன் அமையும் என்று நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்தப் பயிற்சிக்கு இலங்கை வூஷு சம்மேளனத் தலைவரும், கலை கலாசார விவகார அமைச்சருமான ரீ.பி. எக்கநாயக்க பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

பயிற்சிகளை ஆசிய வூஷு சம்மேளனம், இலங்கை வூஷு சம்மேளனம் ஆகியவற்றின் பிரதம செயலாளரும், ஏ.தர சர்வதேச மத்தியஸ்தரும், பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் வூஷு அலுவலருமான சீ:.பூ மானல் தர்ம கீர்த்தி தலைமையில் ஆசியாவின் முன்னணி பயிற்றுநர்களான ருஜிதா போதினாகொட, உதவிப் பயிற்றுநர் புத்திடட்ஸன், இலங்கை தேசிய சாண்டோ பயிற்றுநர் கபில சபாபதி, உதவி தேசிய சாண்டோ பயிற்றுநர் சமன் பண்டார, இலங்கோன் உட்பட தேசிய வூஷு வெற்றியாளர்களும் இணைந்து வழங்கவுள்ளனர்.

# காளி அம்பாள், ஆலடி சிந்து மூன்றாவது சுற்றுக்குத் தகுதி

(கைதடி)

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் மாவட்ட மட்ட தாச்சிப் போட்டியின் மூன்றாவது சுற்றுக்கு தாவடி காளி அம்பாள் மற்றும் உடுவில் ஆலடி சிந்து அணிகள் தகுதிபெற்றுள்ளன.

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் 15ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு தாச்சிச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் மாவட்ட மட்ட தாச்சிப் போட்டி சனி, ஞாயிறு தினங்களில் கைதடி குமரநகர் விளையாட்டு மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றது.

அந்த வகையில், கடந்த சனிக்கிழமை நடைபெறவிருந்த முதல் போட்டியில் தாவடி காளி அம்பாள் அணியும், கொக்குவில் வராகி அணியும் மோதவிருந்தது. இப்போட்டியில் கொக்குவில் வராகி அணி சமுகமளிக்காமையால் தாவடி காளி அம்பாள் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. இதன் மூலம் இப்போட்டித் தொடரின் மூன்றாவது சுற்றுக்கு காளி அம்பாள் அணி தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது சுற்று ஆட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து அணியும், கைதடி குமரநகர் பி அணியும் மோதின. இப்போட்டியில் ஆரம்பம் முதலே ஆலடி சிந்து அணி ஆதிக்கம் செலுத்தியது. இறுதியில் 11-06 என்ற பழம் அடிப்படையில் வெற்றிபெற்ற ஆலடி சிந்து அணி மூன்றாவது சுற்றுப் போட்டியில் விளையாடும் தகுதியைப் பெற்றது. (எஸ்.பி.)



யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற மாவட்ட மட்ட ஹொக்கிப் போட்டியின் போது வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி வீரர்களும் வேகமான ஆட்டத்தை வெளிப் படுத்துவதைக் காணலாம். யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி முதலிடம் பிடித்து மாகாண மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (படப்பிடிப்பு: சுரேஸ்)

# வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் நான்கு விக்கெட்டுக்களால் வெற்றி

விளையாட்டுச் செய்திகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்ட மாவட்ட மட்ட கிரிக்கெட் தொடரின் முதல் போட்டியில் வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் அணி நான்கு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள அணிகளுக்கிடையே நடத்தப்படுகின்ற 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடரின் முதல் போட்டி வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிறுக்கிழமை நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய அரியாலை சென்றல் அணி ஓல்ட் கோல்ட்ஸ் அணியின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாது மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் அரியாலை சென்றல் அணி 18 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 73 ஓட்டங்களைப் பெறறது. இதில் நிரோசன் 12, வினோதரன் 10, நிசாதன் ஆட்டமிழக்காது 11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜெய்சுதன் மூன்று, பிரியலக்ஷன் ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 74 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் அணி ஏகநாதனின் பந்து வீச்சை எதிர்கொள்ளத் திணறியது. இருப்பினும் நிரோசன், மாதவராஜ் ஆகியோரின் பொறுமையான ஆட்டத்தில் வெற்றியிலக்கை அடைந்தது. இறுதியல் வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் அணி 17 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் நிரோசன் 21, மாதவராஜ் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஏகநாதன் மிகச் சிறப்பான முறையில் செயற்பட்டார். ஏழு ஓவர்கள் பந்து வீசிய ஏகநாதன் ஆறு ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். யாழ். மாவட்ட கழக மட்ட ஒரு நாள் போட்டி வரலாற்றில் இது சாதனையாகக் கொள்ளப்படுகின்றது என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (எஸ்.பி)



அச்செழு நீர்வேலி குடும்ப முன்பள்ளிகளின் விளையாட்டுப் போட்டி அண்மையில் முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. குடும்ப முன்பள்ளிகளின் தலைவி சகுந்தலாதேவி தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டு நிகழ்வில், சிறார்களின் வண்ணமயமான நிகழ்வுகள் பல இடம்பெற்றது.

- பாஸ்கர் லக்ஷ்மன்

கணிதத்திற்கு நொபேல் பரிசு இல்லை. அல்.ஃப்ரெட் நொபேல், நொபேல் பரிசை எந்தப்பிரிவுகளுக்குக்கொடுக்கலாம் என்று முடிவெடுத்த போது கணிதத்தைச் சேர்க்காமல் இருந்ததற்கு ஒரு கதை உண்டு. நொபேலின் சமகாலத்தவரான, ஸ்வீடன் நாட்டு கணித வல்லுநர் மாங்க்னெஸ் குஸ்டா.ஃப் (யோஸ்டா) மிட்டாக்-லெ.ஃப் லரோடு, நொபேலின் மனைவிக்கு தொடர்பு இருந்ததாகவும், கணிதத்தை பரிசுப் பிரி


ஆபெல்

**கணிதத்துறையில் பல பத்தாண்டுகளாக முடிவு காணப்படாத கேள்விகளுக்கு நல்லதொரு, ஏற்கப்படக்கூடிய விடையொன்றைத் தக்க நிரூபணங்களுடன் யாரேனும் கொடுத்தால் அதை பல்வேறு நாடுகளின் கணிதவியலாளர்களும் மிக விருப்புடன் வரவேற்பார்கள். அப்படிப்பட்ட வரவேற்பு ஆபெலின் கண்டுபிடிப்புகளுக்கு இருந்தது. எனவே ஆபெலின் பெயரில் ஒரு பரிசு நிறுவப்படுவது பலராலும் வரவேற்கப்பட்டது.**

# ஆபெல் பரிசு – கணிதத் துறைக்கான நொபேல்

வில் சேர்த்தால் அவருக்கு நொபேல் பரிசு கிடைக்கக் கூடிய வாய்ப்பு அதிகம் என்ற காரணத் தால்தான் கணிதம் நொபேல் பரிசில் சேர்க்கப் படவில்லை என்பது அந்தக் கதை.

சுவையானதாகத் தோன்றலாம், ஆனால் உண்மை இல்லை. ஏனெனில் நொபேல் திருமணமே செய்து கொள்ளவில்லை. மிட்டாக்-லெ.ஃப்லர் ஸ்வீடன் அரசரிடம் தொடர்ந்து பேசி கணிதத்துக்கு ஏற்கனவே ஒரு பரிசை நிறுவ ஏற்பாடு செய்துவிட்டதால், நொபேல் அதனுடன் போட்டி போட விரும்பவில்லை என்பது ஒரு காரணமாக இருக்கலாம் எனச் சொல்லப் படுகிறது. இதுவும் வெறும் யூகமே.

கணிதத்திற்கு நொபேல் பரிசளிக்கும் பிரிவுகளில் கணிதம் இல்லை எனத் தெரிந்தவுடன் நோர்வே நாட்டைச் சேர்ந்த கணித வல்லுநர் மாரியஸ் சொ.ஃபஸ் லீ (Marius Sophus Lie) நோர்வீஜிய கணித வல்லுநர் ஆபெல் பெயரில் ஒரு கணிதப்பரிசை நிறுவ முயற்சித்தார். ஆபெலின் நூறாவது பிறந்த நாளைக் கொண்டாடும் விதமாக அவருக்கு ஒரு நினைவு மண்டபமும், கருத்தரங்க ஏற்பாடும், அவர் பெயரில் ஒரு கணிதப்பரிசும் கொடுக்க வேண்டும் என்பது லீயின் எண்ணமாக இருந்தது.

அவருடைய விருப்பத்தில் முதல் இரண்டும் நிறைவேறின. ஆனால் அவருடைய மறைவும், 1905ஆம் ஆண்டில் நிகழ்ந்த நோர்வே-ஸ்வீடன் பிரிவினையும் காரணமாக ஆபெல்கணிதப்பரிசு இருபதாம் நூற்றாண்டில் உருவாகாமலே போனது.

லீ மறைந்து நூறு ஆண்டுகள் கழித்து 2001ஆம் ஆண்டு ஆபெலின் 200ஆவது பிறந்தநாளை முன்னிட்டு ஆபெல் பரிசு நோர்வே நாட்டு மன்னரால் நிறுவப்பட்டது.


நீல்ஸ் ஹென்ரிக் ஆபெல் (Niels Henrik Abel) 1802 ஆம் ஆண்டு நோர்வே நாட்டில் பிறந்தவர். மிகவும் வறுமையான வாழ்கை. இருந்தாலும் கணிதத்தில் அளப்பரிய ஆவல் மற்றும் திறமை. வாழ்ந்தது 26 ஆண்டுகளே. ஆனால் கணிதத்தில் பல முக்கியமான கண்டுபிடிப்புகளுக்குச் சொந்தக்காரர். கல்லூரியில் கணிதம் படித்தவர்கள் இவர் பெயரை அறியாமல் இருந்திருக்க முடியாது.


மாங்க்னெஸ் குஸ்டா.ஃப்

எல்லா இயல் எண்களுக்கும் ஈருறுப்புக்கோவைத் தேற்றம் (Binomial Theorem) உண்மையே என்ற நிரூபணத்தை கொடுத்தார். ஐந்துபடி சமன்பாட்டுக்கு (Quintic Equation) பொதுவான இயற்கணிதத் தீர்வு (algebraic solution) கிடையாது என்ற இவருடைய கண்டுபிடிப்பு, கணிதத்தில் மிக முக்கிய முடிவாகவும், இவருடைய கணிதக் கண்டுபிடிப்புகளில் தலையாயதாகவும் இருக்கிறது.

இந்த ஐந்துபடி சமன்பாட்டுக்குப் பொதுவான இயற்கணிதத் தீர்வு உண்டா அல்லது இல்லையா என்று கண்டறிய பல நூற்றாண்டுகளாக கணித் மேதைகள் முயற்சி செய்து வந்தார்கள். பொதுவாகக் கணிதத்துறையில் பல பத்தாண்டுகளாக முடிவு காணப்படாத கேள்விகளுக்கு நல்லதொரு, ஏற்கப்படக்கூடிய விடையொன்றைத் தக்க நிரூபணங்களுடன் யாரேனும் கொடுத்தால் அதைப் பல்வேறு நாடுகளின் கணிதவியலாளர்களும் மிக விருப்புடன் வரவேற்பார்கள்.

அப்படிப்பட்ட வரவேற்பு ஆபெலின் கண்டுபிடிப்புகளுக்கு இருந்தது.எனவே ஆபெலின் பெயரில் ஒரு பரிசு நிறுவப்படுவது பலராலும் வரவேற்கப்பட்டது.



ஆபெல் பரிசை இது வரை 12 கணித மேதைகள் பெற்றிருக்கிறார்கள். இந்தப் பரிசுக்கு 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்புள்ள பணமுடிப்பு கொடுக்கப் படுகிறது. பரிசுத்தொகையை விட இந்தப்பரிசினால் கிடைக்கும் பெருமை அளவிட முடியாதது. முதல் ஆபெல் பரிசு ohd; பியர் ஸேர் (Jean-Pierre Serre) என்ற கணித மேதைக்கு 2003 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. ஏற்கனவே இவர்தன் 27ஆவது வயதில் ஃபீல்ட்ஸ் பதக்கம் வாங்கியவர்.

இந்த வருடத்துக்கான ஆபெல் பரிசு ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த எண்ட்ரே ஸெமெரீடீ (Endre Szemerédi) என்ற கணித மேதைக்கு வழங்கப்பட்டுள்ளது. இவர் 1940-ஆம் ஆண்டில் பிறந்தவர். கணிதமேற்படிப்பு படிக்கத் தொடங்கும் முன் ஒரு வருடம் மருத்துவக் கல்லூரியிலும், பின் ஒரு வருடம் ஒரு தொழிற்சாலையிலும் வேலை பார்த்தார். மற்றொருஹங்கேரி கணித மேதையான போல் எர்டிஷ் (Paul Erdos) எண்ட்ரேயின் அபாரக் கணிதத்திறமையைக் கண்டறிந்து, அவரை ஊக்குவிக்கவும் செய்தார்.

எண்ட்ரேக்கு அவருடைய தனிச் செயலிக்கணிதம் (Discrete Mathematics). சேர்வியல் (Combinatorics) மற்றும் கோட்பாடு கணினியியல் (Theoretical Computer Science) என்ற துறைகளில் மேற்கொண்ட மிக உயர்ந்த, அதிகபட்ச தாக்கம் ஏற்படுத்திய ஆராய்ச்சிக்காக இந்தப் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

இவருடைய ஆராய்ச்சிக்கு உடனடியான நேர்முகப் பயன்பாடு இல்லை எனினும், மறைமுகப் பயன்பாடு கோட்பாடு கணினியியல் துறையில் முக்கிய பங்காற்றியுள்ளது. இவர் கணிதத்தில் செய்த ஆராய்ச்சியில் உபயோகித்த முறைகள் இன்றும் பல வகைகளில் செயல்படுத்தி விடை அறிய முடியாமல் இருந்த திறந்த (open) கணிதக் கேள்விகளுக்கு நிரூபணம் அளிக்க ஏதுவாக இருந்திருக்கின்றன.

இவர் கணிதப் பங்களிப்பிலிருந்து ஒரு துளியைப் பார்க்கலாம். 2,4,6,8, என்ற தொடரில் அடுத்தடுத்து உள்ள எண்களுக்கு இடையே இருக்கும் வித்தியாசம் 2 மேலும் முதல் எண் 2. அதே போல் 4,7,10,13,16,19, என்கிற தொடரில் அடுத்தடுத்து உள்ள எண்களுக்கு இடையே இருக்கும் வித்தியாசம் 3 மேலும் முதல் எண் 3. இதுபோன்ற தொடர்கள் கூட்டுத் தொடர்கள் (Arithmetic Progressions) என்று அழைக்கப்படுகின்றன. இந்தக் கூட்டத் தொடர்களில் எண்ணில்டங்கா எண்கள் இருக்கின்றன.

முதல் கூட்டுத் தொடரில் 2, 4, 6, 8 மட்டும் எடுத்தக் கொண்டால் அதை 4 - நீளமுள்ள கூட்டுத் தொடர் என்கிறோம். அதே போல் 4, 7, 10 எனும் எண்களை எடுத்துக் கொண்டால் அதனை 3 - நீளமுள்ள கூட்டுத் தொடர் எனலாம். சரி இதைப் போலிருக்கும் ஒரு கூட்டுத் தொடரில் இருந்து இலக்கின்றி எதேச்சையாக (random) எண்களை நீக்கினால் என்னவாகும் என நினைக்கிறீர்கள்?

அந்த தொடர் எந்த ஓர் ஒழுங்குமில்லாத தொடராக மாறும் என்பது பொதுவான எண்ணமாக இருக்கும். ஆனால் அதற்கு மாறாக மாற்றி அமைக்கப்பட்ட தொடரில் ஓர் ஒழுங்கு இருப்பதைத் தவிர்க்க முடியாது என்பதுதான் எண்ட்ரேயின் மிக முக்கிய பங்களிப்புகளில் ஒன்று.

இதையே சற்று வேறு விதமாக பார்ப்போம். 1, 2, 3, 4, 5, ...1000 வரை என்னிடம் 1000 எண்கள் இருக்கின்றன. இந்த 1000 எண்களிலிருந்து 5 - நீளம் கொண்ட கூட்டுத் தொடர் அமையாதவாறு நீங்கள் தன்னிச்சையாக எண்களை விலக்க முயன்றால் கூடிய சீக்கிரமே அதனைக் கைவிட வேண்டியதிருக்கும். ஏனெனில் அது முடியாது.

எண்களை விலக்கிக் கொண்டே போனால் ஒரு கட்டத்தில் 1000 எண்களையும் எடுத்திருப்பீர்கள். ஆனால் 1000 எண்களையும் விலக்க வேண்டியதில்லை. வெகு சில எண்களை எடுத்த உடனே 5 - நீளம் கொண்ட கூட்டுத் தொடர் கிடைத்து விடும் என்பது தான் எண்ட்ரேயின் கண்டுபிடிப்பாகும்.

இதற்கு என்ன காரணம் என ஆராய்ந்த எர்டிஷ்- டுரோன் ஆகியோர், "எடுத்துக் கொள்ளும் எண்கள் கொண்ட கணத்தின் (set) மேற்படி திண்மம் (upper density), முழுவதுமான இயல் எண்களுடன் ஒப்பிடும் போது நேர்மறையாக (positve) ஆகாது இருந்தால் அந்தக் கணத்தில் நிர்ணயிக்கப்பட்ட அளவிலான நீளமுள்ள கூட்டுத் தொடர் இருக்கும்,' என்ற அனுமானத்தை (Conjecture) முன்மொழிந்தனர்.

இந்த ஏர்டிஷ்-டுரோன் அனுமானத்துக்குத்தான் எண்ட்ரே ஸெமெரீடி 1975 ஆம் ஆண்டு நிரூபணம் அளித்தார். அதுதான் ஸெமெரீடி தேற்றம் என அறியப்படுகிறது.

இத்தேற்றத்தை நிரூபிக்கும்போது, எண்ட்ரே செயல்படுத்திய முறை (method) கோலக் கோட்பாட்டில் (Graph Theory) ஒரு முக்கிய உத்தியாகும். இந்த உத்தியை ஒரு கருவியாகக் கொண்டு டாவ்-க்ரீன் (Tau-Green) பகா எண்களின் தொடரிலும் நிர்ணயிக்கப்பட்ட அளவிலான நீளம் கொண்ட கூட்டுத் தொடர்கள் இருக்கும் என நிறுவினர். இதற்காக டாவ் (Tau) 2006 ஆம் ஆண்டு ஃபீல்ட்ஸ் பதக்கம் பெற்றார்.

ஸெமெரீடி தேற்றத்தின் நிரூபணத்தைப் படித்துப் புரிந்து கொள்வது மிகவும் கடினம். அது கணிதத்தின் பல பிரிவுகளை ஒன்றிணைத்து உருவாக்கிய நிரூபணம். அதைப் பற்றி டாவ் (Tau) 'இந்த தேற்றத்தின்நிரூபணம் படிக்கும்போது, ஒரு கூத்தாடி பல பந்துகளை தூக்கிப்போட்டுகீழே விழாமல் சுழற்றி எறிந்து வித்தை செய்வதைப் போன்று இருந்தது' என்று கூறியுள்ளார்.

இதைத் தவிர கணினியியலில் வரிசை செய்தல் (sorting) என்பது மிகவும் முக்கியமான ஒன்று. அதாவது கொடுக்கப்பட்டுள்ள எண்களின் தொடர்களை ஏறு வரிசையில் எழுதுவது. இதற்கான ஒரு வழி முறையையும் எண்ட்ரே கொடுத்தார்.இதில் முக்கியமானது, வழிமுறையானது மிகக் குறுகிய நேரத்தில், மிகக் குறைந்த கணினியின் நினைவாற்றலை (memory) பயன்படுத்க்கூடியதாக இருக்க வேண்டும். அதைத் தான் எண்ட்ரே செய்தார். எண்ட்ரே 200இற்கும்மேற்பட்ட கணிதஆராய்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார். இங்கு குறிப்பிட்டுள்ளது ஒரு துளி.

இந்தப் பரிசுகள் கொடுக்கப்படும் நோக்கமே இளைஞர்கள் இதனால் உற்சாகம் பெற்று இந்த சமுதாயத்திற்கு நல்ல பங்களிப்பு கொடுத்து அதனை முன்னகரச் செய்ய வேண்டும் என்பதே. இயற்கையில் ஒளிந்திருக்கும் இரகசியங்களைக்கண்டுபிடிப்பதில் ஈடுபட்டு, எந்த ஒரு ஆரவாரமும் இல்லாமல் அமைதியாக உலகின் ஏதோ ஒரு மூலையில்அமர்ந்து மனித சமுதாயத்தை முன்னெடுத்துச் செல்லும் பணியில் ஈடுபட்டிருக்கும் எண்ட்ரே போன்றவர்களைநினைக்கும் தருணம் மானுடகுலத்தின் சார்பாக நன்றி சொல்லத் தோன்றுகிறது. ■

# நவநீதம்பிள்ளை குழுவினரை இலங்கைக்குள் அனுமதிக்கக்கூடாது

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் ஜனாதிபதிக்கு கடிதம்

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நேற்று கடிதம் ஒன்றை கையளித்துள்ளது.

குறித்த இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர உள்ளிட்ட குழுவினர் இந்த கடிதத்தை கையளித்துள்ளதுடன், ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் பிரதிநிதிகள் குழுவை இலங்கையினுள் அனுமதிக்ககூடாது என கோரியுள்ளனர்.

இதற்கு முன்னரும், சூடானில் யுத்தகுற்றச்சாட்டு தொடர்பில் அறிக்கையிடுவதற்கு இவ்வாறான நிபுணர் குழுவொன்று அனுப்பிவைக்கப்பட்டதாகவும், அந்த நாட்டின் ஜனாதிபதிக்கு எதிராக குழுவினர் செயற்பட்டதாகவும், அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால், மனிதவுரிமைகள் ஆணையாளரின் குழுவினரை இலங்கையினுள் ஏற்றுக் கொள்ளவேண்டாம் எனவும், தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கோரியுள்ளது.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் சபை பிரதிநிதிகள், குழு இலங்கைக்கு வரவேண்டுமாயின் அரசாங்கத்தின் அனுமதியை பெற்ற பின்னர் மாத்திரமே வரமுடியும் என வெளிவிவகாரத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிவிவகாரத்துறை அமைச்சர் கருணாதிலக்க அமுனுகம இது தொடர்பாக தெரிவிக்கையில், மனிதவுரிமைகள் ஆணையகம் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றிய யோசனையில் உள்ள விடயங்களை அரசாங்கத்தின் இணக்கப்பாடின்றி நடைமுறைப்படுத்த முடியாது என குறிப்பிட்டார்.

அதேவேளை, மனிதவுரிமைகள் ஆணையாளரின் பிரதிநிதிகளை இலங்கைக்குள் ஏற்பதா இல்லையா என்பது தொடர்பாக இதுவரை தீர்மானிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

# திருமணம் செய்ய மறுத்த இளைஞரின் மூக்கைத் துண்டித்த பெண்



மாத்தறை - கொடகும்புற பகுதியில் 26 வயதான இளைஞர் ஒருவரின் மூக்கை 40 வயதான பெண்ணொருவர் கத்தியால் வெட்டித் துண்டித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பெண், கடந்த டிசெம்பர் மாதம் தனது கணவரை விவகாரத்துச் செய்தவரெனவும் இவ்வருடம் தன்னை திருமணம் செய்வதாக அந்த இளைஞர் அளித்த வாக்குறுதியை மீறியதால் அவரின் மூக்கை அப்பெண கத்தியால் வெட்டித் துண்டாக்கியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விருவரும் தமது சட்டவிரோத உறவை சுமார் 6 வருடங்களாக தொடர்ந்ததாகத் தெரிவிக்கப் படுகிறது. தேயிலை தொழிற்சாலையொன்றில் உதவியாளராக பணியாற்றும் மேற்படி இளைஞர் காயமடைந்த நிலையில் தெனியாய அரசாங்க வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மாத்தறை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அவருக்கு பல சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளதாக வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# கைதிகளை விடுதலை செய்ய உறுதியான நடவடிக்கை தேவை

(கொழும்பு)

சிறைகளில் தடுத்து வைக்கபபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் 179 கைதிகளும், வவுனியா சிறைச்சாலையில் 33 கைதிகளும், களுத்துறை சிறைச்சாலையில் 22 கைதிகளுமாக மொத்தம் 243 தமிழ் அரசியல் கைதிகள், தம்மை விடுவிக்கக் கோரி சுமார் எட்டு நாட்களுக்கு மேலாக உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் படையினரிடம் சரணடைந்து சிறை வைக்கப்பட்டுள்ள இவர்களில் பலர் உடல் அங்கங்களை இழந்தவர்கள்.

எந்தக் குற்றச்சாட்டுகளும் சுமத்தப்படாத நிலையிலேயே இந்த தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தம்மை விடுதலை செய்யக் கோரி சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட கைதிகளினதும் உயிர்களை பாதுகாக்க அரசு உறுதியான பதிலை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# கழிவறையில் இருந்து இலங்கையர் சடலமாக மீட்பு



(கொழும்பு)

சென்னை விமான நிலையத்தில் மர்மமான முறையில் உயிரிழந்த இலங்கை பயணி ஒருவர் கழிவறையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இலங்கையை சேர்ந்த லால் சிங் பரசுராம் (வயது 55) என்பவர் கடந்த 10 தினங்களுக்கு முன்பு சென்னைக்கு சுற்றுலா சென்றுள்ளார்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் 1.30 மணியளவில் இலங்கை செல்வதற்காக விமானத்தில் அனுமதிச்சீட்டு எடுத்திருந்தார். பின்னர், விமான நிலையத்தில் உள்ள பயணிகள் காத்திருக்கும் அறையில் சென்று தங்கியுள்ளார்.

இதையடுத்து, லால்சிங் பரசுராம் கழிவறைக்கு சென்றுள்ளார். நீண்ட நேரமாகியும் அவர் வெளியே வராததால் சந்தேகமடைந்த விமான நிலைய ஊழியர்கள் கழிவறைக் கதவை உடைத்து உள்ளே சென்றனர். அப்போது, அங்கு அவர் மரணமான நிலையில் கிடந்தார். இதனால் விமான நிலையத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இது குறித்து தகவல் அறிநத விமான நிலைய பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆரோக்கிய ரவீநதிரன் விரைந்து சென்று லால்சிங் பரசுராமின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்.

லால்சிங் பரசுராம் மாரடைப்பால் இறந்தாரா? அல்லது தற்கொலை செய்து கொண்டாரா? என்பது குறித்து பிரேத பரிசோதனை முடிந்த பிறகு தான் தெரியவரும் என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# புலம்பெயர் தமிழர்கள் பொருளாதார அகதிகள்

(கொழும்பு)

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழர்களில் பெரும் பாலானோர் அகதிகள் அல்லரென்றும் அவர்கள் பொருளாதார அகதிகளே என்றும் மட்டக்களப்பு மாவட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் அருண் தம்பிமுத்து தெரிவிததார்.

இந்த உண்மையை ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர்கள் உள்ளத்தால் ஏற்றுக் கொண்டபோதும் உதட்டளவில் சொல்ல மறுக்கின்றனர்.

மாற்றுக் கருத்துக்கொண்டவர்களை அரசின் உளவாளிகள் என்றும் துரோகிகள் என்றும் முத்திரை குத்துவது தீவிரவாதத் தமிழர்களின் வரலாறாகிவிட்டது. புலிகளின் அழிவின் பின்னரும் அந்த நிலை இன்னும் தொடர்வது வேதனையானது.

லண்டன் கருத்தரங்கில் இலங்கையில் வாழும் அப்பாவித் தமிழர்களின் உண்மையான நிலையை தெளிவுபடுத்தியிருந்தேன். நானும் புலிகளால் பாதிக்கப்பட்டவன். 13 வயதில் எனது தாயும் தந்தையும் புலிகளால் காவு கொள்ளப்பட்டதில் நான் அநாதையாக்கப்பட்டேன்.

மட்டக்களப்பில் பிறந்த நான் அந்தப் பிரதேசத்தின் மண் வாசனை, மக்களின் துன்பங்கள் தொடர்பாக கருத்தரங்கில் தெரிவித்திருந்த கருத்துக்களுக்கு பிரதேசவாத சாயம் பூசி செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. புலிகள் இயக்கம் இலங்கைத் தமிழர்களிடமிருந்து "வரி" என்ற போர்வையில் கறந்த பணம் மற்றும் அப்பாவித் தமிழர்களிடமிருந்து பறித்தெடுத்த நகைகள் போன்றவற்றின் மூலம் ஐரோப்பிய நாடுகளில் மேற்கொண்டிருக்கும் முதலீடுகள் இன்று புலி ஆதரவாளர்களால் அனுபவிக்கப்படுகின்றன. இரத்தமும் வியர்வையும் கலந்த அப்பாவத் தமிழர்களின் உழைப்பில் அங்கு சொகுசு வாழ்க்கை வாழும் அவர்கள் அகதி முகாம் களிலும் வீடுகளிலும் வாழும் மக்களை பற்றி சிந்தித்ததுண்டா எனவும் வினா எழுப்புகிறேன் என்றார்.

# தம்புள்ளை உணர்வுகள் அடங்கிப் போகவில்லை



(கொழும்பு)

தம்புள்ளை சம்பவத்தை ஒட்டிய விரும்பத்தகாத சம்பவங்கள் இடம்பெறுவதற்கு பின்னால் வெளிச்சக்திகள் செயற்படுகின்றனவா என்ற சந்தேகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என நீதி அமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய தலைவருமான ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டார்.

உடுநுவர பகுதியில் வீதிகளுக்கு காபெட் இட்டு நவீனமயப்படுத்தும் வேலைகளின் ஆரம்ப வைபவம் நேற்று முன்தினம் எலமல் தெனியவில் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

தம்புள்ளை விவகாரத்தை ஒட்டி எழுந்த உணர்வுகள் இன்னும் அடங்கிப் போகவில்லை. நாம் பிரச்சினைகளை பேசித் தீர்க்க முடியும். எனவே இதனையும் பேசித் தீர்த்துக்கொள்ள முடியும்.

இத்தகைய விரும்பத்தகாத சம்பவங்கள் இடம்பெறுவதற்கு பின்னால் வெளிச்சக்திகள் இருக்கின்றதா? என்ற சந்தேகம் ஏற்படுகின்றது. இத்தகைய சம்பவங்கள் தொடர இடமளிக்க முடியாது.


நாட்டில் துரித அபிவிருத்தி ஏற்படும் வேளையில் துரிதமாக இனங்கள் மத்தியில் ஐக்கியத்தையும் சமாதானத்தையும் ஏற்படுத்த வேண்டும்.

அரசுக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் இடையில் பாலமாக தொழிற்பட்டு அரசியல் தீர்வுக்கான அடுத்த கட்ட நகர்வில் நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்குள் தமிழ் தேசிய கூட்டமைப்பை உள்வாங்கிக் கொள்ள வேண்டிய அவசியம் நிலவுகின்றது. நாட்டில் யுத்தம் முடிவடைந்தாலும் தேசிய பிரச்சினைக்கான தீர்வு பேச்சுவார்த்தை மூலம் காணப்பட வேண்டியுள்து. இதனை சர்வதேசமும் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது.

எனவே இந்த அரசியல் தீர்வை நோக்கி நாம் நகர வேண்டும். பேச்சுவார்த்தை மூலம் அர்த்த முள்ள சமாதானத்தை தோற்றுவிக்க முடியும். அரசாங்கம் நாமும் பரஸ்பரம் நம்ப வேண்டும். இதன் மூலம் பரஸ்பர நம்பிக்கை மற்றும் புரிந்துணர்வின் அடிப்படையில் செயற்பட முடியும்.

இரு தரப்பும் அவநம்பிக்கைள் மத்தியில் செயலாற்ற முடியாது. இந்த நம்பிக்கையைத் தான் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்திடம் எதிர்பார்க்கின்றது. எனவே பிரச்சினைகளுக்கான தீர்வுகளை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ளமுடியும் என்று நம்புகின்றேன் என்றார்.

# தரையிறங்கிய ஹெலியால் மூன்று வீடுகளுக்கு சேதம்



(கொழும்பு)

கண்டி - பல்லேகலையிலுள்ள இராணுவ மைதானத்தில் நேற்று முன்தினம் காலை விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர் ஒன்று தரையிறக்கப்பட்டபோது அருகிலுள்ள மூன்று வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்த மூன்று வீடுகளினதும் கூரைத் தகடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

வீடொன்றின் தகரக் கூரை முற்றாக தூக்கியெறியப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்காக விமானப் படையின் குழுவொன்று அந்த இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக விமானப்படை ஊடகப் பேச்சாளர் குரூப் கப்டன் அன்ரூ விஜேசூரிய தெரிவித்துள்ளார்.



# அரசாங்கம் புதிய திசையில் செல்வதற்கான நம்பிக்கை தெரிகிறதா?

தளபதி பொன்சேகாவை சிறையிலடைப்பதற்குக் காரணமாக அரசியல் நோக்கம் இருந்தமையினை மனதில் வைத்துப் பார்க்கும் போது அவரை இப்போது விடுதலை செய்யத் தூண்டிய காரணம் யாது என்பது வினாவாகிறது. சர்வதேச அழுத்தம், தளபதியினுடைய ஆரோக்கியம் தொடர்பான பிரச்சினைகள், எதிரணியினரை இன்னும் பிரித்து பலவீன-மடையச் செய்தல், நீதித்துறையின் முடிவாக வரக்கூடிய விடுதலையை கவனத்திற்கொண்டு அதற்கு முன்னரே தானே விடுவித்ததாக கூறிக் கொள்வதற்கான எண்ணம், ஜனாதிபதியின் இரக்கப் பண்பு என்பன காரணங்களாக இருக்கலாம் எனக் கூறிக்கொள்ளப் படுகின்றது.



ஜனாதிபதி மன்னிப்புக் தற்கோ அல்லது அவரது ஆரோக்கிய நிலை மோசமடைவதற்கோ பொறுப்பா யிருந்ததாக குற்றஞ்சாட்டப்படுவதனை அது விரும்பியிருக்காது.

தளபதி பொன்சேகா உயர் நீதி மன்றத்துக்கு செய்திருந்த மேன்முறையீடு இன்னும் விசாரிக்கப்படாது தேங்கியிருப்பது இன்னொரு காரணமாக இருக்கலாம். அவர் இராணுவ நீதிமன்றத்தினால் சிறையிலடைக்கப் பட்டமை தொடர்பான இரண்டு வழக்குகள் தொடர்பாக இவ்வாறான மேல் முறையீடுகளைச் செய்திருந்தார்.

ஏனைய அரச நிறுவனங்கள் அளவுக்கு மீறிய வகையில் அரசியல் மயமாக்கப்பட்டிருக்கும் நிலையிலும் கூட இலங்கையில் நீதித்துறையின் மீது பொதுமக்களிடையே நம்பிக்கை நிலவி வருகின்றது. நீதித்துறையின் அனைத்து மட்டங்களிலும் சுதந்திரம் நிலவுகின்றமையினை பல்வேறு சந்தர்ப்பங்களிலும் காணக்கூடியதாயிருந்திருக் கின்றது. அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும் என்ற வகையிலான பல தீர்ப்புகளை நீதித்துறை அண்மையில் வழங்கியுள்ளது.

எனவே அரசாங்க களுக்கு முன்னர் ஜனாதிபதி மன்னிப்பு வழங்கும் கடிதத்தில் கையெழுத்திட்டதனை தற்சம்பவமாக கருதுவதற்கில்லை.

பேராசிரியர் ஜி.எல். பீரிஸுக்கும் மற்றும் ஹிலாரி கிளின்டனுக்கும் இடையேயான சந்திப்பில் இலங்கை அரசாங்கத்திற்கு ஒன்றும் ஆர்வம் இருப்பதாகத் தெரியவில்லை. ஏனெ-னில் ஏற்கெனவே வருடத்தின் ஆரம்ப பகுதியில் இவ்வாறான சந்திப்பிற்கான சந்தர்ப்பம் ஏற்பட்ட போது சந்திப்பு நிராகரிக்கப்பட்டிருந்தது.

அப்போது இலங்கை அரசாங்கம் அது தனது சிநேகநாடுகள் என நம்பிய ரஷ்யா, சீனா மற்றும் சில மூன்றாம் உலக நாடுகளின் ஆதரவுடன் ஐக்கிய அமெரிக்காவையும் அதன் ஆதரவு நாடுகளையும் வென்று விடலாம் என்ற நம்பிக்கையுடன் இருந்தது. இலங்கை அரசாங்கம் ஐக்கிய அமெரிக்காவுக்கு எதிராக கடுமையான நிலைப்பாட்டை கொண்டிருந்த நிலையில், அமெரிக்கா தலைமையிலான பெரும்பாலான நாடுகள் ஐ.நா. சபையின் மனித உரிமைகள் பேரவையில் மார்ச் மாத கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியமை இப்போது வரலாற்று தகவலாகி தாக அமையவில்லை என்பதனை இப்போது கிடைக்கக்கூடியதான தகவல்களிலிருந்த தெரிந்துகொள்ளக் கூடியதாயிருக்கிறது.

அமெரிக்க இராஜாங்க செயலாளர் இலங்கை அமைச்சரை கற்றுக்கொண்ட பாடங்களுக்கும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையில் ஒரு பகிரங்க செயற்திட்டத்தை சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார். அத்துடன் வட மாகாண பகுதிகளில் தற்போது நிலவும் இராணுவ மயமாக்கப்பட்டுள்ள நிலைமையினை நீக்கி விடுமாறும், அங்கே மாகாண சபை தேர்தலை நடத்தும்படியும் அவற்றின் மூலம் அரசாங்கத்தின் அடக்குமுறைகள் இல்லாது சிவில் சமூகத்தின் செயற்பாடுகள் இடம்பெறுவதற்கான சூழலை உருவாக்க வேண்டும் என்றும் ஐக்கிய அமெரிக்கா கேட்டுக்கொண்டுள்ளது.

தளபதி பொன்சேகாவை விடுதலை செய்ததன் மூலம், இலங்கை அரசாங்கம் தான் ஏற்றுக்கொண்ட (நல்லாட்சி தொடர்பான) பொறுப்புகளில் ஒன்றில் மட்டுமே நிறைவேற்றியுள்ளது. தளபதி பொன்சேகாவை விடுதலை செய்தலிலும் க.பா.ந.ஆ. அறிக்கை கூறிய சிபாரிசுகளை எவ்வாறு நடைமுறைப்படுத்தப் போகின்றோம் என்பதற்கான செயற்திட்டம் தயாரித்தலிலும் எவ்வாறு அரசாங்கம் செயற்பட்டுள்ளதோ அதனை ஒத்த வகையில் சிபாரிசு களை நடைமுறைப்படுத்தலிலும் செயற்படுவதன் மூலம் அரசாங்கத் தினை நல்லதோர் நிலைமைக்கு கொண்டு செல்ல முடியும்.

- ஜெகான் பெரேரா கட்டுரையிலிருந்து.

கடிதத்தை வழங்கும்போது அரசாங்க அங்கத்தினர்கள் முன்பெல்லாம் கூறி வந்ததனைப் போன்று தளபதியின் குடும்பத்தினர் ஜனாதிபதியிடம் மன்னிப்புக்கோரி விண்ணப்பிக்க வேண்டும் என்ற முன் நிபந்தனைகளை விதிக்கவில்லை என்பது மிக முக்கியமான நிலைவரமாகும். அத்துடன் ஜனாதிபதியிடம் அவ்வாறான முறையீடுகள் எதுவும் இதுவரை செய்யப்படவில்லை என்ற தகவல்களே கிடைக்கக் கூடியதாகவும் உள்ளன.

கடந்த சில வாரங்களாக தளபதி பொன்சேகாவின் ஆரோக்கியம் படிப்படியாக குறைந்து கொண்டே சென்றுள்ளது. இதனைக் காரணமாக வைத்தே அவருக்கு தொடர்ந்தும் சிகிச்சை வழங்குவதற்காக தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்ல நீதிமன்றத்தில் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டது.

முன்னாள் யுத்தகள கதாநாயகனது பௌதீக/உடல் நிலை நலிவடைவ தளபதி செய்துள்ள பிணையில் செல்வதற்கு அனுமதி தருமாறு கோரிய வேண்டுதலை நீதிமன்றம் ஏற்று பிணையில் செல்ல அனுமதி வழங்குவதற்கு முன்பு தானாக விடுதலை செய்து தனது உயர்நிலையைத் தக்கவைத்துக் கொள்வதற்கு செய்துகொண்ட தந்திர உபாயமாகவும் இருக்கலாம்.

தளபதி பொன்சேகாவுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டிருக்கும் காலப்பகுதியினை கவனத்திற் கொண்டு பார்க்கும் போது சர்வதேச ரீதியாக மனித உரிமைகள் மீறப்படுவ தாக கருதப்படுவதனால் ஏற்படும் அழுத்தம் காரணமாக அரசாங்கம் அவ்வாறு நடந்துகொண்டதாகவும் எண்ணுவதற்கு தோன்றுகிறது. ஜனாதி பதி ராஜபக்ஷவின் வெளிவிவகார அமைச்சர் மே மாதம் 18 ஆம் திகதி ஐக்கிய அமெரிக்க இராஜாங்க செயலாளரை வாஷிங்டனில் சந்திக்கவிருந்த சில மணித்தியாலங் விட்டது.

வாஷிங்டன் சந்திப்பின்போது ஐக்கிய அமெரிக்கா தான் ஜெனிவா தீர்மானத்தில் வற்புறுத்தியவற்றினையே மீண்டும் உறுதி செய்திருந்தது. ஜெனிவா தீர்மானத்தின்படி இலங்கை அரசாங்கம் அதன் கற்றுக்கொண்ட பாடங்களுக்கும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதனையும் குறிப்பாக பொறுப்புக் கூறுதல், யுத்தக் குற்றங்கள் புரிந்தவர்கள் மீது விசாரணைகள் மேற்கொள்ளுதல் என்பனவற்றில் கவனம் செலுத்தி நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதனையும் ஐக்கிய அமெரிக்கா மீண்டும் வற்புறுத்தியிருந்தது.

வாஷிங்டனில் நடைபெற்ற கூட்டத்தில் இரு தரப்பினரிடையேயும் சம்பிரதாயமான இராஜதந்திர வழிமுறைகளின் படியே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றதாகவும் ஜெனிவாவில் மார்ச் மாதத்தில் நடைபெற்ற போராட்ட உணர்விலான வகையிலான-

பொன்சேகாவிற்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கியமை மற்றும் க.பா.ந.ஆ. அறிக்கை சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்திட்டத்தினைத் தயாரித்தமை போன்ற மாற்றங்களுக்கான பின்னணியின் நோக்கம் எதுவாகவும் இருக்கலாம். ஆனால், அவை யாவும் அரசாங்கம் புதிய திசையில் செல்வதற்கு தயாராக உள்ளமைக்கான நம்பிக்கையினையும் எதிர்மறையற்ற சிந்தனை நோக்கிய போக்கினையும் காட்டுவதாக உள்ளது என்பது கவனிக்க வேண்டியதாகும்.

இதேவேளையில் குறிப்பாக அரசாங்கம் அரசியல் தீர்வு தொடர்பான பிரச்சினைகளுக்கும் விரைவாகவும் திறமையுடனும் செய்து முடிக்கும் வகையில் ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பட்சத்தில் அரசாங்கத்தின் மீதான அழுத்தங்களும் குறைந்து செல்வதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கலாம்.

# இரும்பில் செய்த பெண்ணானாலும்...

ஜப்பானைச் சேர்ந்த ஹிரோசி இசிகுரோ என்ற விஞ்ஞானி, அச்சு அசலாக, பெண் போல் தோற்றமளிக்கும் ஒரு ரோபோவை தயாரித்துள்ளார். ஜப்பானில், இந்த ரோபோ, ஏற்கனவே பிர-பலமாகி விட்டது. இந்த பெண் ரோபோ, சில திரைப்படங்களில் நடித்துள்ளதுடன், சில விளம்பரப் படங்களிலும், மொடலாக நடித்துள்ளது.

தற்போது ஹொங்கொங் சென்றுள்ள இந்த ரோபோ, அங்குள்ள மக்களை வெகுவாக கவர்ந்து விட்டது. கடைத் தொகுதிகளின் வரவேற்பறைகளில், ஆடம்பரமான சோபாவில், ஒய்யாரமாக அமர வைக்கப்பட்டுள்ள இந்த ரோபோவை பார்ப்பதற்கும், புகைப்படம் எடுப்பதற்கும் ஆயிரக்கணக்கானோர் குவிகின்றனர்.

இந்தப் பெண் ரோபோவிடம், அப்படி என்ன விசேஷம் என்கிறீர்களா. மனிதர்களைப் போல், 65 வகையான செயல்களை இந்த ரோபோ செய்யும். சிரிப்பது, சில குறிப்பிட்ட வார்த்தைகளை பேசுவது, பாடுவது, பார்வையாளர்களுக்கு ஓட்டோகிராப் போட்டுத் தருவது ஆகியவை இதில் குறிப்பிடத்தக்கவை. சில குறும்புக்கார ஹொங்கொங் இளைஞர்கள், இந்த ரோபோவின் அழகில் மயங்கி, அதனிடம், “ஐ லவ் யூ” கூறிவிட்டு, அது பதிலளிப்பதைக் கேட்பதற்கு ஜொள்ளுடன் காத்திருக்கிறார்களாம்!





வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் எதிர்கொண்ட முக்கிய சந்திப்பான, ஹிலாரி மற்றும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கான விசேட பிரதிநிதியும் ஐ.நாவிற்கான பாதுகாப்பு பேரவையில் அமெரிக்காவை பிரதிநிதித்துவப் படுத்துபவருமான பவர் (Senior Director of the US National Security Council handling multilateral affairs and human rights and the head of the Atrocities Prevention Board) ஆகியோருடனான சந்திப்பின்போது நல்லிணக்க் ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அமுல்படுத்தல் நிலைமைகள் கேட்டறியப்பட்டதுடன், வட,கிழக்கில் அரசியல் முன்னெடுப்புக்களை சுதந்திரமாக மேற் கொள்ளக்கூடிய வகையில் இராணுவ நீக்கம் (de-militarize the area) அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி சந்திப்பின்போது, LLRC இன் பரிந்துரைகள் அமுல்படுத்தலுக்கான வேலைத்திட்டமொன்றை

சிறை வைக்கப்பட்டவர்.

புலிகளுக்கு எதிரான யுத்தம் நிறைவடைந்ததும் இராணுவத் தளபதி என்னும் பொறுப்பில் இருந்து Chief of Defense Staff என்னும் பொறுப்பிற்கு மாற்றப்பட்ட பொன்சேகா அமெரிக்காவில் இருந்த தனது மகளை பார்க்கும் நோக்கில் சென்றிருந்தபோது, இறுதிப் போர் தொடர்பான விடயங்களை கசிய விட்டார் என்னும் குற்றச்சாட்டுக்களின் பேரில் அவர் மீது சந்தேகங்கள் எழுந்தன.

ஜெனரல் பொன்சேகா பிரிகேடியர் அத்துல சில்வாவுடன் இணைந்து டுபாய் வழியாக

திருக்கும் பொன்சேகா அரசியல் விடயங்களில் பங்கு கொள்ள முடியாதவாறு தடை உண்டு.

ஆனால் அரசியல் செய்ய முடியும். பொன்சேகா 30 மாத சிறை வாசத்திலிருந்து வெளிவந்ததும், இந்து செய்தியாளருக்கு வழங்கிய முதல் நேர்காணலில்

# இனிவரும் நாட்களில் பல மாற்றங்களுக்கு வாய்ப்புண்டு

பீரிஸ் வைத்திருந்த போதும், அது தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதில் பீரிஸ் தோல்வியடைந்துள்ளதாக சண்டே லீடர் (Gov. shows no progress while the US stands firm May24.2012) தெரிவித்துள்ளது.

இத்தகையதொரு பின்னணியில்தான் சரத் பொன்சேகா ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இதில் குறிப்பிடப் பட வேண்டிய விடயம் அமெரிக்க இராஜாங்க திணைக் களத்தின் கீழ் இயங்கும் ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் விவகாரங்களுக்கான செயலகம் வெளியிடும் வருடாந்த மனித உரிமைகள் அறிக்கை இவ்வாரம் வெளிவரவுள்ளது. இந்த நிலையிலேயே அமெரிக்காவால் அரசியல் கைதி என்று குறிப்பிடப்பட்டிருக்கும் பொன்சேகாவை விடுதலை செய்வதன் மூலம் அமெரிக்க ஆலோசனைகளை செவிமடுப்பதற்கான தயார்நிலையை இலங்கை அரசு காண்பித்திருக்கலாம். இதற்கான வாய்ப்பே அதிகமாக உள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்த வெற்றியின் பிரதான சக்திகளில் ஒருவரான சரத் பொன்சேகா, 2010 இல் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது, மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக போட்டியிட்டு தோல்வியடைந்தவர். தேர்தலில் தோல்வியடைந்து இரு வாரங்களில் ஊழல் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு பின்னர் வோஷிங்டனுக்கு சென்றதாகவே அப்போதைய சில தகவல்கள் தெரிவித்தன.

அமெரிக்காவின் பசுபிக் தளபதியாக இருந்த அட்மிரல் திமோதி ஜே.கீட்டிங்கின் பிரியாவிடை நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்கான அழைப்பின் பேரில் சென்றதாகவே முன்னர் சொல்லப்பட்டது. எனினும் பின்னர் அதனை அமெரிக்க அரசு விலக்கிக் கொண்டதாகவும் அப்போது சண்டே டைம்ஸ் செய்தி வெளியிட்டிருந்தது.

இதேவேளை, நவம்பர் மாதம் இலங்கைக்கான அமெரிக்க தூதர் பட்ரிக்கா பூட்டின்ஸ் போர்க் குற்றச்சாட்டுக்களை பொன்சேகா கோத்தா மீது சுமத்த முற்படுகின்றார் (Fonseka tries to shift blame on war crime to Gota) என்னும் தலைப்பில் வோஷிங்டனுக்கான தனது இரகசிய ராஜதந்திர கேபிளை அனுப்பியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இது தொடர்பான தகவல்கள் பின்னர் விக்கிலீக்ஸ் மூலம் அம்பலமானது. இந்த பின்னணியிலேயே புலி-களை அழிப்பதில் முன்னின்ற பொன்சேகா மகிந்த அரசின் பிரதான எதிராளியானார்.

புலிகளை அழித்ததால் கிடைத்த வெகுசன கவர்ச்சியை பங்கு போடும் வகையிலேயே மகிந்த - பொன்சேகா தேர்தல் களம் அமைந்திருந்தது. ஆனால் பொன்சேகா தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இரகசிய உடன்பாடொன்றை செய்துள்ளார் என்னும் பிரசாரம் பொன்சேகாவை பெரியளவில் பாதித்தது.

தற்போது பொது மன்னிப்பின் பேரில் வெளிவந் தெரிவித்திருக்கும் விடயங்கள், தற்போதைய அரசுக்கு சவாலான ஒருவராக அவர் இருப்பார் என்பதையே குறித்துரைக்கின்றது - அரசியலில் நிறம், பெயர் என்ற அடிப்படையில் வேறுபடாது, ஒரு வலிமையான பொது எதிரணியை உறுதிப்படுத்த வேண்டும் என்று கூறியிருக்கும் பொன்சேகா, அரசுக்கு எதிரான பொது அணி என்பதே தற்போது முக்கியம், பின்னர் யார் தலைமை ஏற்க வேண்டும் என்பதை மக்கள் தீர்மானிக்கட்டும் என்றும் தெரிவித்திருக்கின்றார்.


பொன்சோகாவின் வருகை அரசியலில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதை இப்போது ஊகித்துவிட முடியாது. ஆனால் உடனடி அர்த்தத்தில் பொன்சேகாவின் விடுதலை அரசிற்கு இரு வழிகளில் சாதகமானதாக அமைந்திருக்கிறது. ஒன்று, வெகுசன அபிப்பிராயத்தில் அரசுக்கு எதிராக சதி செய்த ஒருவருக்கும் இந்த அரசு பொது மன்னிப்பு வழங்கியிருக்கிறது என்பதை புரிந்துகொள்ளும் ஒரு சாதாரண சிங்கள குடிமகன் அரசு குறித்து உயர்வாக எண்ணக்கூடும். இரண்டு, சர்வதேச அழுத்தங்களை சமாளிப்பதற்கான ஒரு உடனடி உபாயமாகவும் பொன்சேகாவின் விடுதலை அமைகிறது.

ஆனால் பீரிஸ் எதனைக் கூறினாலும் அமெரிக்கா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்திற்கு பின்னால்தான் நிற்கும் என்னும் செய்தி, இது போன்ற செயற்பாடுகளால் மட்டுமே அரசு தனது நம்பகத் தன்மையை உறுதிப்படுத்திவிட முடியாது என்பதையே காட்டுகின்றது. பொன்சேகா வெளியில் வந்ததும் உடனடியாக "ஜனநாயக கட்சி" என்னும் புதியதொரு அரசியல் கட்சியை பதிவு செய்யும் நடவடிக்கைகளிலும் இறங்கிவிட்டார். எனவே இனிவரப் போகும் நாட்களில் அரசியலில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

## சினிமா சினிமா



அஜித்துடன், "பில்லா-2" படத்தில் பார்வதி ஓமணக்குட்டன், பிரேசில் அழகி புரூனா அப்துல்லா இருவரும் நாயகிகளாக நடித்துள்ளனர். இதில் புரூனா அப்துல்லா, மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த தன் காதலரை விரைவில் கைப்பிடிக்கிறார். இதற்காக, "பில்லா-2" படக்குழுவினரையே பிரேசிலுக்கு வந்து தன்னை வாழ்த்துமாறு அன்பு அழைப்பு விடுத்துள்ளார் புரூனா. அன்புதான் இன்ப ஊற்று!



விஜய் டி.வி.யில் கலக்கப் போவது யாரு பட்டம் வென்று, பின்னர் அங்கே நிகழ்ச்சித் தொகுப்பாளராக மாறி, தனது நகைச்சுவை மறுத்தான்களால் பலரையும் கவர்ந்து இரண்டு படங்களிலும் கதாநாயகனாக நடித்து விட்டவர் சிவகார்த்திகேயன். "3" படத்தில் தனுஷ்க்கு நண்பராக நடித்திருந்த சிவகார்த்திகேயன் திரையில் வரும்போதெல்லாம் இரசிகர்களின் உற்சாக வரவேற்பைத் தியேட்டரில் பார்த்த தனுஷ் ஆச்சரியமாகி விட்டார். இப்போது தனுஷும், சிவகார்த்திகேயனும் நண்பர்களாகி விட்டனர். தனது மனைவி ஐஸ்வர்யா இயக்கத்தில் சொந்தப் படம் தயாரிக்கும் தனுஷ், அதில் நாயகனாக நடிக்க சிவகார்த்திகேயனையே ஒப்பந்தம் செய்துள்ளார். அந்த அளவுக்கு, சிவகார்த்திகேயனின் நகைச்சுவைக்கு தான் பரம இரசிகனாகி விட்டதாகச் சொல்கிறார் தனுஷ். சிரிப்புக்கு மயங்காதார் யார்?

ஹொலிவுட் தொழில்நுட்பத்துடன், கமல்ஹாசன் பிரமாண்டமாக தயாரிக்கும் விஸ்வரூபம் படத்தில் இடம்பெறும் மகுடப் பாடல் வரிகள் வெளியிடப்பட்டுள்ளன. கதாநாயகனின் வீரத்தை மையப்படுத்தி படத்துக்கான அந்தத் தலைப்பு பாடல் எழுதப்பட்டுள்ளது. வைரமுத்து எழுதிய சுமார் 50 வரிகளில் இருந்து கமல்ஹாசன் தனக்குத் தேவையான வரிகளை படத்தில் பயன்படுத்தியுள்ளார். இதோ வரிகள்...



"எவன் என்று நினைத்தாய்
எதைக்கண்டு சிரித்தாய்
விதை ஒன்று முளைக்கையில்
வெளிப்படும் புதுருபம்
நெருப்புக்குப் பிறந்தான்
நித்தம் நித்தம் வளர்ந்தான்
வேளை வந்து சேரும்போது
வெளிப்படும் சுயருபம்
யாரென்று புரிகிறதா-இவன்
தீயென்று தெரிகிறதா
தடைகளை வென்று வென்று
சரித்திரம் படைத்தவன்
ஞாபகம் வருகிறதா?
யாருக்கும் அடிமையில்லை-இவன்
யாருக்கும் அரசனில்லை
காடுகள் தாண்டிக் கடக்கின்ற பொழுதும்
காற்றுக்கு காயமில்லை...."

இந்த வரிகள்தான் விஸ்வரூபம் படத்தில் பலமுறை ஒலிக்கப்போகிறது என்பது குறிப்பிடத்தக்கது. பாட்டிலேயே "பஞ்ச்" வைப்பதுதான் உலக நாயகன் ஸ்டைலா!

தன்னுடைய அடுத்த படத்தைத் தமிழிலும் தெலுங்கிலும் ஒரே நேரத்தில் இயக்குகிறார் ஷங்கர். தமிழில் விக்ரம், தெலுங்கில் பவன் கல்யாண் ஹீரோக்களாக நடிக்க, இரு மொழியிலும் அசின் கதாநாயகியாக நடிக்கிறார். இந்தப் படத்தின் மூலம் முதல்முறையாக, ஷங்கருடன் கூட்டணி சேர்கிறார் ஒளிப்பதிவாளர் பி.சி.ஸ்ரீராம். இசை ஏ.ஆர். ரஹ்மான். பஸ்களுக்கு, லொறிகளுக்கு, ரயில்களுக்கு எல்லாம் பெயின்ற் அடித்து ஓடவிடுவதை நிறுத்தச் சொல்லுங்க ஸ்ரீராம்!



மணிரத்னம் இயக்கத்தில், கார்த்திக், பிரபு, அமலா, நிரோஷா ஆகியோர் நடிப்பில், இளையராஜா இசையமைப்பில் 1988இல் வெளிவந்து சூப்பர் - டூப்பர் ஹிட்டான படம் அக்னி நட்சத்திரம். இப்படம் இப்போது மீண்டும் ரீ-மேக் செய்யப்பட இருக்கிறது. இதற்கான உரிமையை ரமேஷ் என்பவர் வாங்கியுள்ளார். தமிழ் ரீ-மேக்கில் ஆர்யா - விஷால் ஆகிய இருவரும் நடிக்கப்போவதாக தகவல் வெளியாகி இருக்கிறது. ஏற்கனவே இருவரும் பாலாவின் அவன் இவன் படத்தில் நடித்தனர். அந்தப் படத்தில் இருவரது இணைப்பொருத்தம் அருமையாக அமைந்தது. மேலும் இருவரும் நல்ல நண்பர்களும் கூட, அதனால் இவர்களை தேர்ந்தெடுத்திருப்பதாக கூறப்படுகிறது. வேறு எங்கும் கூஜா தூக்குவதை விரும்பாத ராஜாதான் இசையா?



# கைதிகள் விவகாரம் குறித்து எவரும் என்னைச் சந்திக்கவில்லை

## சிறைச்சாலை அமைச்சர்



(கொழும்பு)

தமிழ் கைதிகளின் விசாரணைகளை துரிதப்படுத்தும் நோக்கில் உயர் மட்டக் கூட்டத்தில் முன்னெடுக்கப்பட்டிருக்கும் தீர்மானங்களின், ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை எதிர்வரும் ஜூன் இறுதிக்குள் தொடங்குவதற்கென துரித கதியில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சிறைச்சாலைகள் அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் கைதிகள் விசாரணைகளை துரிதப்படுத்தக் கோரி உண்ணாவிரதம் இருப்பதற்கு முன்பதாகவே நாம் அதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதாக கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற உயர் மட்ட கூட்டத்தில் முடிவு செய்திருந்தோம்.

அந்த செயற்பாடுகளை நடைமுறைப் படுத்துவது தொடர்பில் ஆராய்வதற்கென மே 22 ஆம் திகதி மீண்டும் உயர் மட்டக் கூட்டத்தை கூட்டுவதற்கு தீர்மானிக்கப் பட்டிருந்த வேளையிலேயே, இதனை நன்கு அறிந்து வைத்திருந்த சில அரசியல் வாதிகள் சுய இலாபம் தேடும் நோக்கில் தமிழ் கைதிகளை உண்ணா விரதமிருக்க தூண்டி விட்டிருந்தனர்.

தங்களால்தான் தமிழ் கைதிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக் கப்பட்டது என்று பெயர் சூட்டிக் கொள் வதற்காக சிறைக் கைதிகளை உண்ணா விரதமிருக்க தூண்டி விட்டு இந்த அர சியல் வாதிகள் வேடிக்கை பார்த்தனர்.

தமிழ் கைதிகள் மீது இத்தனை அக் கறை கொண்டிருக்கும் இந்த சில அரசியல் வாதிகள் அவர்கள் தொடர்பில் பேச்சு நடத் தவோ மேற்படி கோரிக்கைகளை முன் வைக்கவோ என்றுமே என்னை சந்திக்க வரவும் இல்லை. தொடர்பு கொள்ளவும் இல்லை. இந்த அரசாங்கம் அதாவது, ஆளுங் கட்சியே தமிழ் கைதிகளின் நலன் கருதி ஒவ்வொரு விடயங்களையும் கவனத்திற் கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

மேற்படி கைதிகள் நீதிமன்றத்தினால் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள். அவர்கள் உண்ணாமல் இருக்கும் பட்சத்தில் அக்கைதிகளின் உடல் நலன் குறித்து பொறுப்புக்கூற வேண்டியது எமது கடமை. சிறைக் கைதிகள் உண்ணாவிரத மிருந்த ஓரிரு நாட்களிலேயே அவர் களது கோரிக்கை தொடர்பில் ஏற் கனவே நாம் ஆராய்ந்து வருகிறோமென எமது அதிகாரிகள் அவர்களிடம் எடுத் துக் கூறியதையடுத்து, பெரும்பாலா னோர் தமது போராட்டத்தை கைவிட முன்வந்த போதும், வெளியிலுள்ள சில விஷமிகள் அதற்கு இடமளித்திருக்க வில்லை.

இதனை வெளிநாடுகளுக்கு பாரிய பிரச்சினையாக எடுத்துக்காட்ட வேண்டிய தேவை சிலருக்கு இருந்தமையே இதற் கான ஒரே காரணம்.

இறுதியாக உண்மையைப் புரிந்து கொண்ட தமிழ் கைதிகள் தமது போராட் டத்தை கைவிட்டு அமைச்சுக்கும் அரசாங் கத்துக்கும் நன்றி தெரிவித்து எமக்கு மடல் ஒன்றை அனுப்பி வைத்திருந்தனர் என அவர் தெரிவித்தார்.

## 22 மாடுகளுடன் மூவர் கைது

(கொழும்பு)

நிக்கவெரட்டிய பகுதியில் விலங்கு வதைக்கும் வகையில் சட்டவிரோத மாக லொறியில் மாடுகளை ஏற்றிச் சென்ற மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 12.10 மணி அளவில் கைது செய்யப்பட்ட இவர்கள் பயணித்த லொறியில் 22 மாடுகள் இருந்ததாக நிக்கவெரட்டிய பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

லொறியுடன் இவர்கள் கைது செய்யப்பட்டதை அடுத்து தப்பிக்க 25000 ரூபா லஞ்சம் கொடுக்க முயன் றதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

சந்தேக நபர்கள் மூவரும் நேற்று நிக்கவெரட்டிய நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

## ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் 345 கோடி வைப்பிலிடப்படவில்லை

(கொழும்பு)

வழக்குத் தாக்கல் செய்து வசூலிக் கப்பட்ட 345 கோடி ரூபா நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் (Employees Trust Fund (ETF) அந்தந்த உரிமையாளர்களின் வங்கிகளில் வைப்பிலிடப்படவில்லை என கணக்காய்வாளர் நாயகத்தினால் குற்றஞ்சுமத்தப்பட் டுள்ளது.



தொழில் ஆணையாளரினால் வழக்கு தாக்கல் செய யப்பட்டு வசூலிக கப்பட்ட நிதியே இவ்வாறு மோசடி செய்யப்பட்டுள்ளது.

344 கோடியே 99 இலட்சத்து 15 ஆயிரம் ரூபா நிதி கடந்த வருடம் யூலை 30 ஆம் திகதி வரை கணக்குகளில் வைப் பிலிடப்படவில்லையென 2010 ஆம் ஆண்டுக்கான கணக் கறிக்கையின்மூலம் உறுதியாகியுள்ளது.

அத்துடன், நீதிமன்ற உத்தரவுகளுக் கமைய மாவட்ட அலுவலகங்களில் சேர்ந்த ஊழியர் நம்பிக்கை நிதியத் திற்கான சுமார் 22 கோடி ரூபாவில் 10 கோடி ரூபா வைபபிலிடப்படவில்லை கணக்காய்வாளர் நாயகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கூரையற்ற தரிப்பிடம்



கிளிநொச்சி ஏ-9 வீதியில் வலயக் கல்விப் பணிமனைக்கு முன்பாக கூரையற்ற நிலையில் பேருந்து தரிப்பிடம் அமைந்திருப்பதைக் காணலாம்.

(படம்: ஜெ. கலையகன்)

## அவுஸ்ரேலியா செல்ல முயன்ற 113 பேர் நீர்கொழும்பில் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் அவுஸ்ரேலியா நோக்கிச் செல்ல முற்பட்ட 113 இலங்கையர்கள் கொழும்பு குற்ற விசாரணை பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை அவுஸ்ரேலியா அல்லது வேறு நாட்டுக்கு அனுப்பி வைக்க முயற்சித்த ஆறு முகவர்களும் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.


நீர்கொழும்பு மற்றும் காலி முகத்திடல் ஆகிய பகுதிகளில் வைத்து நேற்று அதிகாலை இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை கடல் பகுதிக்கு ஏற்றிச் செல்ல பயன்படுத்தப் பட்ட லொறி மற்றும் டொல்பின் வர்க்க வாகனம் ஏழு என்பன குற்ற விசாரணை பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அவுஸ்ரேலியா செல்லவென ஒரு நபரிடம் தலா இரண்டு இலட்சம் ரூபா பணம் முகவர்க ளால் பெறப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

சிலாபம், நீர்கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இவர் களிடம் பிரதான முகவர் 316 இலட்சம் ரூபா பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

## ஜனநாயக செயற்பாடு குறித்து சர்வதேசத்திற்கு ரணில் விளக்கம்



(கொழும்பு)

இலங்கையின் ஜனநாயக செயற்பாடுகள் குறித்து சர்வ தேச சமுகத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க விளக்கமளிக்கவுள்ளார்.

நியூசிலாந்தின் வெலிங்டன் நகரில் நடைபெறும் சர்வதேச ஜனநாயக சங்கத்தின் நிறை வேற்றுக் குழு மாநாட்டில் கலந்து கொள்ளும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க இதுகுறித்து உரையாற்றவுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க "சர்வதேச ஜனநாயக சங்கத்தின்" உப தலைவர் என்பது நினைவூட்டத்தக்கது.

முன்னாள் அவுஸ்ரேலியப் பிரதமர் ஜோன் ஹோர்ட் தலைமை யில் இந்த மாநாடு ஆரம்ப மானது. நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீ தலைமையிலான அந்நாட்டின் தேசிய கட்சி இந்த மாநாட்டை இம்முறை ஒழுங்கு செய்துள்ளது.

இந்த மாநாட்டில் இலங்கை, வடகொரியா, பெரலாஸ், ரஷ்யா ஆகிய நாடுகளில் முன்னெடுக்கப படும் ஜனநாயக செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடப்படு கிறது. இதில் கவனம் செலுத் தப்படும் நாடுகளின் ஜனநாயக செயற்பாடுகள் குறித்து அறிக்கை யொன்றும் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படவுள்ளது.

இதன்பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க, நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீ, அவுஸ்ரேலியாவின் முன்னாள் பிரதமர் ஜோன் ஹொவார்ட் ஆகி யோரைச் சந்தித்து விரிவான கலந்துரையாடல்களை நடத்த வுள்ளதாக எதிர்க்கட்சி அலுவல கத் தகவல்கள் தெரிவிக்கின் றன.

## துமிந்த சில்வாவின் சிகிச்சைக்காக அறைச் செலவு ஆறு கோடி ரூபா

(கொழும்பு)

முல்லேரியா துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி சிங்கப்பூர் மவுன்ட் எலிசபத் வைத்திய சாலையில் சிகிச்சைப் பெற்று வரும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் வைத்திய சாலை அறைக்கு மாத்திரம் இது வரை 6 கோடியே 26 இலட்சம் ரூபா கட்டணம் செலுத்தப்பட் டுள்ளதாக தெரியவருகிறது.

மேலும் சத்திரசிகிச்சை, மருந்து கள் உள்ளிட்ட இதர தேவைகளுக் காக பல இலட்சம் ரூபா செலவிடப் பட்டுள்ளதாகவும் தெரியவந்துள் ளது.

துமிந்த சில்வா அந்த வைத் தியசாலையில் சுமார் 200 நாட் களுக்கு மேல் சிகிச்சை பெற்று வருகிறார். எலிசபத் வைத்திய சாலையின் நடுத்தர அறையில் அவர் சிகிச்சைப் பெற்று வருகிறார்.

அவருடைய அறைக்கு நாளொன றுக்கு 3460 சிங்கப்பூர் டொலர் (இலங்கை ரூபாவில் மூன்று இலட்சத்து 64 ஆயிரத்து 758 ரூபா) அவர் சுகபோக அறையில் தங்கி யிருந்தால் அதற்கு 8898 சிங்கப் பூர் டொலர் செலுத்த வேண்டி வந்திருக்கும்.



கடந்த வருடம் நவம்பர் 2 ஆம் திகதி முதல் துமிந்த சில்வா இந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். அண்மையில் தலையில் சத்திர சிகிச்சை ஒன்றும் மேற்கொள்ளப்பட்டதாக நீதிமன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## கணினி பயிலச் சென்ற பெண் சடலமாக மீட்பு

(கொழும்பு)

நாவலப்பிட்டி - கடியன்லேன நீர்வீழ்ச்சிக்கு அருகில் 19 வயது பெண் ஒருவரின் உடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

போஹில் மேற்பிரிவு தோட்டத தைச் சேர்ந்த ஜெபமாலை லூட்ஸ ரொட்ரிகோ என்ற பெண்ணே சட லமாக மீட்கப்பட்டுள்ளதாக நாவ லப்பிட்டிய பொலிஸார் தெரிவித்த னர்.

நாவலப்பிட்டி நகரிலுள்ள தனியார் கணினி பயிற்சி நிலையத் திற்கு சென்று வீடு திரும்பாததை அடுத்து பெண்ணின் பெற்றோர் பொலிஸில் முறையிட்டுள்ளனர்.

இந்த நிலையில், நாவலப்பிட்டி பத்தனை பிரதான வீதியிலுள்ள கடியன்லேன நீர் வீழ்ச்சிக்கு அருகிலுள்ள பாலத்துக்கடியில் சடலமொன்று இருப்பதாக பொலிஸாருக்கு பொதுமக்கள் தகவல் கொடுத்துள்ளனர்.

பெண்ணின் சடலத்தை மீட் டுள்ள பொலிஸார் சில உடைகள் இருந்த பொதியொன்றையும் எடுத்துள்ளனர். நீதவானின் விசாரணைகளைத் தொடர்ந்து சடலம் சட்ட வைத்திய அதிகாரி யினால் பரிசோதனைக்கு உட் படுத்தப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.

02) below table show generation of computer. Fill in the blanks.

| Character | Growth Stage | | | |
|---|---|---|---|---|
| Time Period | | | 1944 - 1971 | |
| Technology Used | | Transistors | | |
| Speed | 1 | | | 1,000,000 *** |
| External Storage | Cards | | | Mass Storage |

b) i) Classify computer by using classification method of computer.

ii) Elaborate he following abbreviations
- a) RAM
- b) ROM
- c) LCD
- d) CRT
- e) OS

03. a) State 3 advantage and 3 disadvantage of Network of Computer?

b) What are the elements of Network working?

c) Draw 3 diagram to elaborate topologies used in net working of Computer.

d) What are the type of Networking of Computer, Simply explain?

04) a) Convert the following decimal number to base 2, 8, 16
1) 50 2) 175 3) 250

b) Complete below exercise
1) 1010 + 2) 1011 - 3) 101 X 101 110 11 ——————


c) Convert below numbers into decimal
1) 10002 2) 12348 3) 4D216

d) What are the coding systems of keyboard give 2 examples.

05) a) Show simple diagram of below Logic gate.
1) Not gate 2) AND gate 3) OR gate

b) i. Build up truth table for given below Logic gate

A.



C.


ii. Find out X?

6) i. In Excel, I need a formula for the following:
IF cell A1= PRADIP then value will be 100
IF cell A1= PRAVIN then value will be 200
IF cell A1= PARTHA then value will be 300
IF cell A1= PAVAN then value will be 400

ii. In Excel, I want to calculate following using an "if" formula:
if A1<100,000 then A1*.1% but minimum 25
and if A1>1,000,000 then A1*.01% but maximum 5000



# ICT & GIT மாணவர்களுக்கான வினாத்தாள்



# கல்வி முரசு

(AJ. Nimalrajan)



01) Father of the Computer?
1) Charles Babbage 2) Blaise Pascal
3) Remington 4) Howard

02) In which year MARK 1 built up?
1) 1960 2) 1944 3) 1935 4) 1900

03) Mark 1 can do?
A) Typing only
B) Addition, substraction, multiplication, division only
C) Typing + addition, substraction, multiplication, division
Which statement is correct?
1) A 2) B 3) C 4) All of above wrong

04) ENIAC mean
1) Electronic Integrator and Computer
2) Electronical Numerical Integrator and Computer
3) Electronic Numerical Integrator and computer
4) Electronic Numeric Integrator and computer

05) What is the period of first generation computer
1) 1900-1945 2) 1940-1956
3) 1956-1963 4) 1960-1970

06) Choose the basic parts of the computer are
1) CPU, Printer, Key board, Sound box
2) CPU, Key board, Printer, Mouse
3) CPU, Monitor, Printer, Mouse
4) CPU, Monitor, Key board, Mouse

07) Function of ALU.
1) Performs mathematics, Logical Function
2) Performs Control Function
3) Performs Storage Function
4) Performs Printing Function

08) Select the parts of processor.
1) Input, Output device 2) Input, Storage device
3) Out put, Storage device 4) Control Unit, ALU Unit

09) What is the unit of CPU's speed.
1) Ms-1 2) Kmh-1 3) MHz 4) Cms-1

10) Which hard wares can be connect on PS/2 Port.
1) Printer, Scanner
2) Monitor, Scanner
3) Printer, Monitor
4) Key board, Mouse

11) One mega byte is equal to
1) 8 bits 2) 1024 bytes 3) 1024 K.B 4) 1024 G.B

12) Which of the following is correct about memory.
A) Contain cache memory
B) Contain Random access memory
C) Contain Read only memory
1) A,B 2) B,C 3) A,C 4) A,B,C

13) Method of software classification is
1) Utilities, Operating software 2) Application, system software
3) Application programme, Operating System 4) Utilities, Physical device

14) Type of network topology
1) Star 2) Ring 3) Bus 4) all of above

15) Which is used in communication network.
1) Micro phone 2) Sound box 3) Modem 4) Head phone

16) Capacity of 3.5" floppy disk.
1) I.G.B 2) 100 K.B 3) 1 MB 4) 1.44 MB

17) Which of the following is not suitable for Network.
1) URL 2) IP address 3) Server 4) Ps/2 Port

18. Mouse should be connected with.
1) Key board 2) Monitor 3) CPU 4) Electricity

19. Which is correct when 10 is written in base 2.
1) 102 2) 10102 3) 1012 4) 11112

20. When numbers write in based 8 is called.
1) Binary 2) decimal 3) Octal 4) Hexadecimal

21. MSB, LSP of 110010102 is
1) 1,0 2) 0,1 3) 1,1 4) 0,0

22. 1012 x 112 is equal to.
1) 10112 2) 10012 3) 10002 4) 11112

23) Which of the following is a disadvantage of Network
1) Time Sharing 2) Centralized Software/ Hardware management
3) Resource Sharing 4) Prevention of computer difficult.

24) Network which is established between town known as
1) LAN 2) MAN 3) WAN 4) All of above

25) Application of computer in relation to communication is
1) Internet 2) E-Mail 3) ATM 4) All of above

26) Statement, which is correct about modem.
A) Convert Digital Signal to Analog Signal
B) Convert Analog signal to Digital Signal
1) A only 2) B only 3) A,B both 4) A,B in correct

27) Statement which is correct about terminating a working computer.
A) Terminating is by giving commands to switch off the computer



B) When operating system is windows. It's appear shut down
C) When operating system is windows XP It's appear Turn Off.
1) A,B 2) B,C 3) A,C 4) A,B,C

28) Who said that data stored in 0,1 (binary)
1) Blaise Pascal 2) Ada 3) Charles babbage 4) Abacus

29) Meaning of 1,0 in machine language
1) On, Off 2) Off, On 3) On, On 4) Off, Off

30) Nibble meant.
1) 2 bits 2) 4 bits 3) 8 bits 4) 16 bits

31) If you don't want the frame windows to be resizeable, simply add what to the <frame> lines ?
1)save 2) dontresize 3) noresize

32) How can you make a list that lists the items with numbers?
1) <dl> 2) <ol> 3)<ul> 4)<list>

33) The ________button on the quick access Toolbar allows you to cancel your recent commands or actions.
1) Search 2) Cut 3) Document 4) Undo 5) None of these

34) In Excel, any set of characters containing a letter , hyphen, or space is considered—
1) a formula 2) text 3) a name 4) a title 5) None of these

35) ____________Software allows users to perform calculations on rows and columns of data.
1) Word processing 2) Presentation graphics 3) Database Management Systems
4) Electronic Spreadsheet 5) None of these

36) A ____ is a named location on a disk where files are stored.
1) folder 2) pod 3) version 4) none of the above

37) The ____ allows you to choose where to go and is located below the Standards Buttons toolbar.
1) System menu 2) Address bar 3) Menu bar 4) none of the above


38) A ____ is a set of computer instructions that carry out a task on the computer.
1.program 2. database 3. memory file 4. none of the above

39) An operating system version designed for home use is Microsoft Windows XP ____.
1. Home Edition 2. Media Center Edition 3. Tablet PC Edition 4. none of the above

40) A user-interface that is easy to use is considered to be ____.
1. user-happy 2. user-simple 3. user-friendly 4. none of the above

## Part II

01) a) Simply explain data and information?
b) Concern below logical diagram of computer and answer the questions?




i. Name A, B, C, D, E?
ii. Simply explain function of A, B, C, D, & E
iii. Give 2 examples for the following B, C, E
iv. Give 2 characters of following dot matrix, Laser Printer?

# வேகக்கட்டுப்பாட்டை மீறும் வாகனங்கள்; விபத்துக்கள் ஏற்படும் அச்சநிலை

(சிகரம்)

யாழ்ப்பாணம்- கொழும்பு போக்குவரத்தின் பிரதான வீதியான ஏ-9 வீதியில் வேகக் கட்டுப் பாட்டை இழந்த பாரவூர்தி மற்றும் பிக்கப் வாகனம் என்பன ஓமந்தைக்கும் வவுனியாவிற்கும் இடைப் பட்ட பகுதியில் தடம்புரண்டன.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட இந்த விபத்தில் பாரவூர்தி மற்றும் பிக்கப் வாகனம் என்பன வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு தடம்புரண்டு தரையிலிறங்கி உள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.



தற்போது நாட்டின் பல பாகங்களிலும், முன்னெடுக்கப்பட்டு வரும் வீதிப் புனரமைப்புப் பணிகள் கிளிநொச்சி மாவட்டத்தின் ஓமந்தை தொடக்கம் முகமாலை வரையான பகுதிகளில் மிகவேகமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்லும் வீதியான ஏ-9 வீதியிலுள்ள ஆனையிறவு, பரந்தன், முறுகண்டி, மாங்குளம், கனகரயன்குளம்,புளியங்குளம் ஆகியபிரதேசங்களிலுள்ள வீதியின் இரண்டு பக்கங்களும் அகலமாக்கப்பட்டு காப்பெற் வீதிகளாக. மாற்றப்பட்டுள்ளன.

எனினும், காப்பெற் வீதிகளாக மாற்றப்பட்டுள்ள இந்த வீதிகளில் வீதி சமிக்கைகள் இன்னமும் பயன்படுத்தப்படாமல் உள்ளதால் வாகனங்கள் வேகக் கட்டுப்பாட்டை மீறிச் செல்கின்றன.

இதனால் இந்த வீதிகளில் அதிகளவிலான விபத்துக்கள் ஏற்படுகின்றன.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு போன்ற பகுதிகளுக்கு அதிகளவிலான பயணிகளை ஏற்றிச் செல்லும் பேருந்துகள் விபத்துக்குள்ளா வதனால் அந்தப் பேருந்தில் பயணம் செய்யும் அத்தனை பயணிகளுமே விபத்துக்குள்ளாகும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன.

எனவே, புனரமைக்கப்பட்டு வரும் காப்பெற் வீதிகளில் வீதிச் சமிக்கைகளைப் பயன்படுத்து வதன் மூலமும், வாகன சாரதிகளை வேகக் கட்டுப்பாட்டுடன் செல்வதன் மூலமும் ஓரளவுக் கேனும் வீதி விபத்துக்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# அச்சம் என்பது மடமையல்ல

(சிகரம்)

அச்சம் என்பது மடமையல்ல. வாழ்க்கையில் முன்னேறுவதற்கும். வாழ்க்கையை செவ்வனவே அமைத்துக் கொள்வதற்கும் அச்சம் சிறிதளவு தேவையே. இதற்காகவே தான் ஔவையார் அச்சம் தவிர் என்றாரேயன்றி அச்சம் வேண்டேல் எனக் கூறவில்லை.

பாடசாலையில் கல்வி கற்கின்ற ஒரு மாண வன் பரீட்சைப் பெறுபேறுகள் பற்றிய பயம் இருந் தால்தான் நன்கு படிப்பான், சிறந்த பெறுபேறு களைப் பெறுவான்.

தனக்கு அடுத்த நிலையில் உள்ளவன் தன்னை முந்தி விடுவான் என்ற பயம் விளையாட்டு போட்டி யில் ஒருவனை முன்னேற வைக்கின்றது.

பெற்றோர் கோபிப்பார்கள் என்ற பயமொன் றின் காரணமாகவே தன் நண்பர்களுடன் இரவு கேளிக்கைகளுக்கு சென்ற பிள்ளைகள் நண்பர் களை விட்டு வர மனமில்லாமல் வீடு செல்கிறார் கள்.



வீதியில் விபத்து ஏற்படலாம் என்ற பயத்தினா லேயே நாம் கார் ஓட்டும் போது கவன சிரத்தையு டன் வாகனத்தை ஓட்டுகின்றோம்.

அதிகம் போவானேன், வீட்டுக்கு வருகின்ற விருந்தினரை கோப்பி குடிக்கும்படி கேட்டால், சீனி போடாமல் தாருங்கள் என்பவருக்கு என்ன பிரச்சினை என்று உங்களுக்கு தெரிந்து விடுகின்றது.

கொஞ்சம் எண்ணெய் குறைவாக பாவிக்கின் றேன் என்று ஒருவர் நாசூக்காக சொன்னால் அவ ரது உடல் நலப் பிரச்சினை எத்தகையது என்பது விளங்கி விடுகின்றது.

இவர்கள் எடுக்கும் இக்கவனங்கள் தமது நோய் மேலும் தீவிரம் அடையக்கூடாது அல்லது அந்த நோய் வருவதைத் தவிர்க்க வேண்டும் என்ற பயத்தினாலேயே தான். சட்டத்துக்கு அமைந்த நற்பிரஜைகளாக வாழ வேண்டும் என்று மனச்சாட்சிக்கு பயந்து வாழ்கின்றவரிலும் பார்க்க சட்டத்துக்கு விரோதமாக நடந்தால் தண் டனை பெற வேண்டும் என்ற பயத்திலே சட்டத் துக்கு அமைய வாழ்பவரின் தொகை பன் மடங்கு அதிகம் தானே.

மனது எனும் பொலிஸ்காரனிலும் பார்க்க தெரு வில் நிற்கும் பொலிஸ்காரனுக்கு பயந்து கார் ஓட்டும் வேகத்தை நாம் குறைப்பதில்லையா? ஆகவே பயம் என்பது மிக அவசியமானது.

ஆனால் அது அளவோடு இருக்க வேண்டும். மிகுந்த பயம் வாழ்க்கையை அனுபவிக்க விடமாட்டாது. வெற்றி தோல்வி பற்றிய அதிக பயம் தீர்க்கமான ஒரு முடிவினை எடுக்க விட மாட்டாது. பாதுகாப்பு பற்றிய அசாதாரண பயம் தலைமைத்துவம் ஏற்பதற்கோ, முன்னின்று செயற்படவோ வேண்டிய துணிவினைத் தரமாட் டாது. மறுமை பற்றிய மிகையான பயம் இன்மை யை உய்ப்பதற்கு தடையாக அமையும்.

பதக்ளிப்பு என்பது வருங்காலத்தில் நடக்கவுள் ளது ஒன்றைப் பற்றி மனதிலே எண்ணம் ஒன்றினை ஏற்படுத்தி அதைப்பற்றி வருத்தப்பட் டுக் கொண்டிருத்தல். பொதுவாக அது ஏற் படுத்திய எண்ணம் சந்தோசகரமானதாக இருக் காது.இத்தகையவர்கள் அதிகம் தோல்வி மனப் பான்மை உடையவர்கள் .எனவே அவர்களது எண்ணம் முற்போக்கானதாக அமைய வாய்ப் பில்லை. இவர்கள் பரீட்சை எடுத்தால்,சித்தி யடையா விட்டால் என்ன செய்வது என்பது பற்றியே எண்ணிய வண்ணம் இருப்பார்கள். ஒரு தொழில் பெறுவதற்காக நேர்முகப் பரீட் சைக்குத் தோற்றினார்கள் என வையுங்கள்.

நேர்முகப் பரீட்சை முடிந்த நாள் முதல் அதன் பெறுபேறுகள் கிடைக்கும் வரை எந்த நேரமும் 'சீ' நான் அதை அப்படி சொல்லியிருக்கலாம், பிழை விட்டு விட்டேன் எனப் பிதற்றியபடியே இருப்பார்கள். அச்சக் கோளாறுகள் என்பது மனதிலே தோன்றுகின்ற எவ்விதத்திலும் நியா யப்படுத்த முடியாத அதீத பயம். இதனால் ஒருவர் உணர்வு ரீதியாகப் பாதிக்கப்படுகின்ற மையால் அவரது அன்றாட வாழ்கையும் பெரிய ளவில் பாதிக்கப்படுகின்றது.

உலகில் யதார்த்த நிலை இவர்களுக்கு சோதனையாக அமையலாம். இவர்கள் ஏன் பயப்படுகிறார்கள், எதற்குப் பயப்படுகிறார்கள் என்பதை அறிந்து கொள்ளக் கூட கடினமாக இருக்கும்.

ஒருதேர்ந்த உளவியலாளர்தான் உண்மை யான காரணத்தைக் கண்டு பிடிக்க முடியும்.

ஆகவே பயம் என்பது வாழ்க்கையை ஓட்டு வதற்கு அவசியமானது. அது அதிகரித்தால் வாழ்க்கையை விட்டே ஓடச் செய்து விடும்.

# பதிவிறக்கப் பெட்டகம்

எம்.ஏ. படித்தவன் கிராமத்துக்குப் போனான். அங்கே செக்கில் எண்ணெய் எடுத்துக் கொண்டிருந்தான் படிக்காத கிராமத்து ஆள். செக்குமாடுகள் தாமாகச் சுற்றிவர, அவன் தன் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

"மாடு ரண்டும் தனியாச் சுத்துதே- அதை ஓட்டுறதுக்கு ஒருத்தனை வைச்சுக் கொள்ளக் கூடாது?"

"தேவையில்லைத் தம்பி அவை தானாகவே சுற்றும்."

"ரெண்டும் சுற்றிக்கொண்டுதானிருக்கும் என்று உங்க ளுக்கு எப்பிடித் தெரியும்?"

"கழுத்தில் சலங்கை கட்டியிருக்கு சத்தம் கேட்கும்."

"அதெப்பிடி? அந்த மாடுகள் தந்திரமா ஒரே இடத்தில் நின்று கழுத்தை மட்டும் ஆட்டிச் சலங்கைச் சத்தத்தை ஒலிக்க வைச்சா?"

"மாடுகளெல்லாம் அப்பிடிப் பண்ணாது தம்பி"

"ஏன்?"

"அவையெல்லாம் பி.ஏ, எம்.ஏ படிக்கவில்லை."

*** *** ***

துதிபாடிகளினால் "மகா சித்திகள் வாய்ந்த சாமி" என்று போற்றப்பட்ட சாமியார் ஒருவர், பலரும் ஆசி பெற்றுச் செல்ல வந்திருக்கும் ஒரு சமயத்தில் – திடீரென "சூ–சூ" என எதையோ விரட்டினார். சாமீ என்ன– என்ன– என்று பதறினார்கள் பக்தர்கள்.

"காசியிலுள்ள கோயிலில் கழுதை ஒன்று புகுந்துவிட் டது. அதை இங்கேயிருந்தே விரட்டுகிறேன்" என்றார் ஜகஜ்ஜால சாமியார். "ஆ" என்று பக்தர்கள் வாய்பிளந் தார்கள்.

அந்தச் சாமியாரை வீட்டுக்குச் சாப்பிட அழைத்தாள் ஒரு விவரமான பெண். அவர் முன்னால் இலையில் சோற்றை மலைபோல குவித்து வைத்துவிட்டு "சாப்பிடுங்கள்" என் றாள். "கறி குழம்பு ஊத்தாமல் எப்படிச் சாப்பிடுவது?" என்று சீறினார் சாமியார்.

"காசி கோயில் கழுதையே தெரிகிற சாமியாருக்குச் சோத் துக்குள்ளே இருக்கிற கத்தரிக்காய்க்குழம்பு ஏன் தெரிய வில்லை?" என்றாள் அந்தப் பெண்மணி.

*** *** ***

ரோம் நாட்டில் ஒலிம்பிக்ஸ் நடந்து கொண்டிருந்த நேரம். இந்திய தடகளப் போட்டி வீரர் மில்காசிங் மைதானத்தில் கை கால்களை உதறியபடி படுத்துக்கிடக்கிறார். ஒரு பெண் நிருபர் அவர் அருகே வந்தவர் மில்காசிங்கிடம் "Are you relaxing?" என்கிறார். தடகள வீரர் சர்தார்ஜி அவசர மாக உடனே எழுந்து வேகமான குரலில் சொல்கிறார் "No..No.. I am Milka Singh"

*** *** ***

காமராஜர் பற்றி இப்படி ஒரு ஜோக் உண்டு.


சஞ்சீவ ரெட்டியும் காமராஜரும் விமான நிலையத்தில் காத்திருக்கிறார்கள். விமானம் தயாரானவுடன் ஒரு அதி காரி வந்து "Are you ready?" என்று பணிவாக கேட்கிறார். சஞ்சீவ ரெட்டி "எஸ்" என்று சொன்னபோது காமராஜர் அவ சரமாக தலையை ஆட்டி மறுத்து "No..No.. I am not a Reddy. I am a Nadar." என்றாராம்.

*** *** ***

அமெரிக்காவின் இரட்டை கோபுரங்கள் மீது விமா னத்தை மோதி தகர்த்த செப்டம்பர் 2001... அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷை போனில் அழைத்தார் பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப்... "புஷ் அவர் களே... என்னுடைய ஆழ்ந்த வருத்தத்தையும், இரங்கலை யும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்... எவ் வளவு பெரிய பேரழிவு... எத்தனை மக்கள்... எவ்வளவு உயரமான கட்டிடம்... இங்கே ஒன்றை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்... இந்த சம்பவத்திற்கும், எங்களுக்கும் கொஞ்சமும் தொடர்பில்லை..." எனக் கூறினார்.

குழம்பிப் போன புஷ், "என்ன கட்டிடம்? மக்களுக்கெல் லாம் என்ன ஆனது?" எனக் கேட்டார். சுதாரித்துக் கொண்ட முஷாரப், "இப்போது அமெரிக்காவில் எத்தனை மணி?" எனக் கேட்டார். "காலை எட்டு மணி ஆகிறது!" என்றார் புஷ். "அப்படியானால், இன்னும் ஒரு மணி நேரம் கழித்து கூப்பிடுகிறேன்!" எனக் கூறி, போனை வைத்தார் முஷாரப்.

(அமெரிக்க நேரம் பாகிஸ்தானை விட 11 மணி நேரம் பிந்தியது. ஜனாதிபதி முஷாரபின் பங்கு இரட்டைக் கோபுர தகர்ப்பில் உள்ளது என்பது போல, அவரது முட்டாள்தனத்தை கிண்டலடிக்கிறது இந்த ஜோக்!)




# இந்திய விவசாயிகள் நலனுக்காக ஜனாதிபதி தேர்தலில் குதிக்கும் தங்கவேல்



(ஈரோடு)

விவசாயிகள் நலனுக்காக, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகிறேன் என அகில இந்திய விவசாயிகள் நலவாழ்வு சம்மேளனத் தலைவர் தங்கவேல் தெரிவித்தார்.

ஈரோடு, மொடக்குறிச்சியைச் சேர்ந்த தங்கவேல் இந்த அறிவிப்பு பற்றித் தெரிவித்ததாவது இந்தியாவின், 15 ஆவது ஜனாதிபதி தேர்தல் விரைவில் நடக்கவுள்ளது.

இதுவரை ஜனாதிபதியாக இருந்த, 14 பேரில் ஒருவர் கூட விவசாயி இல்லை. நாட்டின் முதுகெலும்பான விவசாயத்துக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் விவசாயி ஒருவர் ஜனாதிபதியாக வர வேண்டும். இதற்காக ஜனாதிபதி தேர்தலில் நான் போட்டியிடுகிறேன்.

35 வயது நிரம்பிய நாட்டின் வாக்காளர் எவரும் இத்தேர்தலில் போட்டியிடலாம். மனுவை பரிசீலித்து ஏற்க 50 எம்.பி.க்கள் அல்லது 100 எம்.எல்.ஏ.க்களின் முன்மொழிவு தேவை.

இதற்காக, பல்வேறு மாநிலங்களின் அரசியல் கட்சிகள் சுயேச்சை எம்.பி. எம்.எல்.ஏ.க்களின் ஆதரவை திரட்டவுள்ளேன்.

தமிழகத்தில் உள்ள 75 அரசியல் கட்சிகளுக்கும் கடிதம் அனுப்பியுள்ளேன். அடுத்தது, அனைத்து மாநில முதல்வர்களுக்கும் கடிதம் அனுப்பவுள்ளேன்.

ஏற்கனவே மொடக்குறிச்சி சட்டசபைத் தொகுதியில் இரண்டு முறையும் ஈரோடு, சேலம் லோக்சபா தொகுதிகளில் தலா ஒரு முறையும் தேர்தலில் போட்டியிட்டுள்ளேன்.

நான் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டால் விவசாயத்துக்கு முக்கியத்துவம் அளிப்பது, நதிகளை தேசியமயமாக்கி அவற்றை இணைப்பது, பள்ளி கல்லூரிகளில் விவசாயத்தைக் கட்டாயமாக்குவது, இந்தியாவில் விவசாயம் தன்னிறைவு அடைதல் உள்ளிட்டவற்றுக்கு நடவடிக்கை எடுப்பேன்.

இவ்வாறு தங்கவேல் தெரிவித்துள்ளார்.

# ஜெகன் மோகன் ரெட்டி கைது; ஆந்திராவில் நேற்றுக் கடையடைப்பு

(ஈரோடு)

ஆந்திரா முன்னாள் முதல்வர் ராஜசேகர ரெட்டி மகன் ஒய்.எஸ்.ஆர் ஜெகன் மோகன் ரெட்டியை மத்திய புலனாய்வுத்துறை அதிகாரிகள் நேற்று முன்தினம் கைது செய்தனர். வை.எஸ்.ஆர் காங்கிரஸ் தலைவரும் கடப்பா தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெகன் மோகன் ரெட்டி வருமானத்துக்கு அதிகமாக பல கோடி ரூபாயக்கு சொத்துச் சேர்த்ததாக புகார் இருந்தது. இந்த புகாரை புலனாய்வுத்துறையினர் விசாரணை மேற்கொண்ட பின்னர் இக் கைது இடம்பெற்றுள்ளது.

ஜெகனின் தந்தை ராஜசேகர ரெட்டி, 2004 முதல் 2009 வரை ஆந்திரா முதல்வராக பதவி வகித்த போது ஜெகனுக்கு சொந்தமான நிறுவனங்களில் பல நிறுவனங்கள் ஏராளமான அளவில் முதலீடு செய்தன.

இப்படி முதலீடு செய்த நிறுவனங்களுக்கு ராஜசேகர ரெட்டி ஆட்சியில் அரசியல் ரீதியாக பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டன. தன் தந்தை முதல்வராக இருந்ததை பயன்படுத்தி, தனக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு ஏராளமான முதலீடுகளைத் திரட்டினார் என்பதே பிரதான குற்றச்சாட்டாக புலனாய்வுத்துறை பதிவு செய்துள்ளது.


இக்கைதின் காரணமாக நேற்று ஆந்திர மாநிலத்தில் ஜெகன் மோகன் ஆதரவாளர்கள் கடையடைப்பிற்கு அழைப்பு விடுத்திருந்தனர். இந்நிலையில் தெலுங்கு தேசம், தெலுங்கானா ராஷ்டிர சமிதி ஆகிய கட்சிகள் கடையடைப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளன.



கலவரங்கள் எதுவும் ஏற்படாமல் இருகக பொலிஸார் அதிகளவில் குவிக்கப்பட்டுள்ளனர்.

## விமானத்தில் தீ

# 150 பயணிகள் உயிர் தப்பினர்



விமானத்தின் இயந்திரத்தில் தீப்பிடித்ததால் மும்பை விமான நிலையத்தில் ஜெட் ஏர்வேஸ் விமானம் ஒன்று அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

நேற்று அதிகாலை மும்பையிலிருந்து சவூதி தலைநகர் ரியாத் நோக்கி புறப்பட்டது ஜெட் ஏர்வைஸ். புறப்பட்ட சில நிமிடத்தில் விமானத்தில் இடதுபுற என்ஜினிலிருந்து புகை வந்ததால் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

இதன் மூலம் இதில் பயணம் செய்த 150 பயணிகள் அதிர்ஷ்ட வசமாக உயிர் தப்பினர். பின்னர் 7 தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்துக்குச் சென்று தீயை அணைத்தன.

# இரு விபத்து; 41 பேர் பலி



(தர்மபுரி)

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு அருகே, கட்டுபாடு இழந்த லொறி தாறுமாறாக ஓடி கவிழ்ந்தது. இந்த கோர விபத்தில், 17 பேர் பலியாகினர். 23 பேர் படுகாயம் அடைந்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம் அடுத்த சுற்று வட்டார கிராமங்களைச் சேர்ந்த கூலி தொழிலாளர்கள், 40 பேர் நேற்றுமுன்தினம், மாமர தோட்டங்களில் மாங்காய் பறிக்க லொறியில் சென்றனர். இரவு வீடு திரும்பும் வேளை மலைப்பகுதியில், லொறியில் பிரேக் பிடிக்கவில்லை. கட்டுப்பாட்டை இழந்து தறிகெட்டு வீதியில் தாறு மாறாக ஓடிய லொறி, மலைப்பகுதியில் தலைகுப்புற கவிழ்ந்தது. லொறியின் மேலிருந்த தொழிலாளர்கள் லொறிக்கு அடியில் சிக்கினர். லொறியில் இருந்த மாங்காய்கள் அவர்கள் மேல் சரிந்து விழுந்தது. ஏழு ஆண்கள், ஐந்து பெண்கள், மூன்று பள்ளி மாணவர்கள் உட்பட, 17 பேர் இறந்து இருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை மும்பை-புனே நெடுஞ்சாலையில் சிறிய வான் மீது மீது டெம்போ ரக வான் மோதியதில் 24 பேர் உடல் நசுங்கி பலியாயினர்.

உறவினர்கள் திருமணத்தை முடித்துக்கொண்டு திரும்பிய போதே இந்த கோர விபத்து ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. திருமணத்திற்கு சென்றவர்கள் அனைவரும் சிறறூர்தியில் பயணம் செய்துள்ளனர். இந்நிலையில் சாமான்கள் ஏற்றி வந்த டெம்போ வான் மோதியதில் சம்பவ இடத்திலேயே 24 பேர் பலியாயினர். பலர் காயமுற்ற நிலையில் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். டெம்போ ரக வான் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

## தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்



விஷ்ணுராசன் துவேனுஜன்
40, யமுனா வீதி,
நல்லூர்.
நான்காவது பிறந்தநாள்



வரதராசா செரணிதா
2 ஆம் கட்டை, இராச வீதி,
கோப்பாய் வீதி மத்தி.
நான்காவது பிறந்தநாள்



இராஜகுமாரன் சாம்சன்
செங்குந்தா வீதி,
நல்லூர்.
ஆறாவது பிறந்தநாள்

# ஊடகவியலாளரான அமீர்கான் சமுதாயத்தினைத் திருத்த முயற்ச்சி



இந்தியாவில் நடைபெறும் அநியாயங்களை மையமாக வைத்து அதை விவாதித்து தீர்வு காணும் நிகழ்ச்சியொன்றை பொலிவுட் நடிகர் அமீர்கான் நடத்தி வருகின்றார்.

சத்யமேவ ஜெயதே என்ற பெயரையுடைய இந்நிகழ்ச்சி ஸ்டார் ப்ளஸ், டிடி, விஜய் என மூன்று அலைவரிசைகளில் ஞாயிறு காலை 11 மணிக்கு (இந்திய நேரம்) ஒளிபரப்பப்படுகின்றது.

முதன் முதலாக பெண் கருக்கொலையைப் பற்றிய விவாதத்தை நடத்தினார் அமீர்கான். அதில் வைத்தியசாலைகளில் உள்ள ஸ்கேனர்கள் மூலம் ஆணா, பெண்ணா எனக் கண்டறிந்து பெண்ணாக இருப்பின் அதை கருவிலேயே அழிக்கும் கொடிய பெற்றோர்கள் நாட்டில் இருந்து வருகின்றார்கள் என்ற விவாதத்தை முன் வைத்தார்.

நாடு முழுவதும் பரபரப்பை ஏற்படுத்திய இந்த விவாதத்தின் எதிரொலி, ராஜஸ்தான், மத்திய பிரதேசம் மாநிலங்களில் பெண் கருக்கொலைக்கு வித்திடும் ஸ்கேனர்களின் உரிமங்கள் வைத்தியசாலைகளில் இரத்து செய்யப்பட்டது.

இதையடுத்து இந்த வார நிகழ்ச்சியில் இந்திய மருத்துவத்துறையில் நடைபெறும் அக்கிரமங்களை முன் வைத்து பேசினார் அமீர்கான். இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற இந்திய மருத்துவ வாரிய தலைவரிடம் அமீர்கான் மருத்துவத்தை தொழிலாக செய்யக்கூடாது.

அதை சேவையாக கருத வேண்டும். எந்த ஒரு மருத்துவரும் நோயாளியிடம் அவருடைய நோயைப்பற்றி பயமுறுத்தும் வகையில் தெரிவிக்கக்கூடாது.

அறுவை சிகிச்சை என்ற பெயரில் அந்த மருத்துவமனைகள் இலட்சக்கணக்கான பணத்தை வசூல் செய்கின்றன. எனவே இப்படி நோயாளிகளை ஏமாற்றும் மருத்துவர்கள் மருத்துவ மனைகளின் உரிமங்களை இரத்துச் செய்யவேண்டுமென அமீர்கான் மருத்துவ வாரியத் தலைவரிடம் கேட்டுக்கொண்டார்.

# உலக நாடுகளுக்கு ஐ.நா.வேண்டுகோள்



சிரியாவில் 32 குழந்தைகள் உட்பட 92 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு ஐ.நா பொதுச் செயலாளர் பான் கி மூன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.


சிரியா கலவரங்களை தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு உலக நாடுகளுக்கு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிரியாவில் ஜனாதிபதி பஷார ஆசாத் அரசு பதவி விலகக் கோரி கடந்த ஓராண்டுக்கு மேலாக மக்கள் புரட்சி நடந்து வருகிறது. மனித உரிமைக்கான சிரியா அமைப்பினர் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். எதிர்ப்பாளர்களை இராணுவம் மூலம் ஜனாதிபதி ஆசாத் ஒடுக்கி வருகிறார்.

ஐ.நா தலையிட்டு சண்டை நிறுத்தம் செய்த நிலையிலும், தலைநகர் பெய்ரூட் உட்பட பல பகுதிகளில் இருதரப்பு மோதல் நீடிக்கிறது. பெய்ரூட் அருகே ஹாம்ஸ் பகுதியில் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் எதிர்ப்பாளர்கள் பேரணி நடந்தது. அதில் திடீரென பீரங்கிகளுடன் இராணுவத்தினர் புகுந்து, கண்மூடித்தமாக தாக்குதல் நடத்தினர். இயந்திர துப்பாக்கிகளை கொண்டு அப்பாவி மக்கள் மீது பயங்கர தாக்குதல் நடத்தினர். அதில் 32 குழந்தைகள் உட்பட 92 பேர் கொல்லப்பட்டனர்.

சம்பவம் நடந்த இடத்தில் பார்வையிட்ட ஐ.நா அமைதிக் குழுவினர், கொடூரமாக கொல்லபபட்டவர்களின் உடல்களை பார்த்தனர்.அதன்பின் குழு தலைவர் ஜெனரல் ராபர்ட் மூடு கூறுகையில், இத்தனை பேர் கொல்லப்பட்டதற்கான பின்னணி குறித்து எதுவும் தெரியவில்லை. ஆனால், இது மிக மோசமான சம்பவம். மக்கள் மீது இராணுவத் தாக்குதல் நடத்துவது ஏற்கத்தக்கதல்ல என்றார்.

இதேவேளை சிரியாவின் ஹவுலா நகரில் நடந்த தாக்குதலில் 92 பேர் கொல்லப்பட்டதற்கு நாங்கள் காரணமல்ல என சிரியா வெளியுறவுத் துறை தகவல் தொடர்பாளர் ஜிகாத் அல் மக்திசி தெரிவித்துள்ளார். பயங்கரவாதிகள் தான் இராணுவத்தின் போர்வையில் இந்த வெறியாட்டத்தை நடத்தியுள்ளனர். இது தொடர்பாக இராணுவ மற்றும் சட்டக்குழுவை அமைத்து விசாரித்து வருகிறோம் என மக்திசி கூறியுள்ளார்.



சியோல் ஜோக்யி கோவிலைக் காண தென் கொரியாவிற்கு வருகை தரும் பராகுவே ஜனாதிபதி பெர்ணான்டோவை வரவேற்க காத்திருக்கும் இளம் புத்த துறவிகள்.

உலகச் செய்திகள்


# கனடாவை தாக்கவிருக்கும் அரிகேன் புயல்

அமெரிக்காவில் வீசும் அரிக்கேன் புயல் கனடா பகுதியை நோக்கி விரைவில் வீசப் போவதாக அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இவற்றில் பெரும் புயல்களும் வீசக் கூடும் எனவும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் கிழக்குப் பசிபிக் கடலின் மேல்மட்டத்தில் உருவாகும் ஏல் நினோ என்ற வெப்பத்தினால் விஞ்ஞானிகளின் கணிப்பு மாற்றமடையலாம் என கனடாவின் புயல் மையத்தினை சேர்ந்த பாப் ரோபிசோட் தெரிவித்தார். இந்த வெப்பத்திற்கு அரிக்கேன் புயலின் நடவடிக்கையை மாற்றிவிடும் வலிமை கொண்டது. ஒவ்வொரு ஆண்டும் கனடாவின் நிலப்பகுதியை புயல்கள் கடுமையாகத் தாக்குவது வழமை என்பது குறிப்பிடத்தக்கது.

# செயற்கைக் கோளை விண்ணில் ஏவியது சீனா



சீனாசேட் 2ஏ என்ற தொலைத் தொடர்பு செயற்கைக்கோளை சீனா வெற்றிகரமாக விண்ணில் ஏவியது. ஒலிபரப்பு மற்றும் பல்லூடக பயன்பாட்டுக்காக, ஜிசாங் செயற்கைக் கோள் ஏவுதள மையத்திலிருந்து லாங் மார்ச் - 3 பி என்ற ரொக்கெட்டின் உதவியுடன் இந்த செயற்கைக்கோள் ஏவப்பட்டது.

விண்வெளி தொழில்நுட்பத்துக்கான சீன கல்லூரி இந்த செயற்கைக்கோளை வடிவமைத்துள்ளது. செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்துவதற்காகவே சீனா,லாங் மார்ச் வகை ரொக் கெட்டுகளை உருவாக்கிவருகிறது. இது தற்போது 163ஆவது முயற்சியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# தொடர் கொலைகளைச் செய்தவர் கைது



சீனாவில் அடுத்தடுத்து 11 பேரை கொலை செய்த கொலை வெறியரை பொலிஸார் கைது செய்துள்ளனர். சீனாவின் யுனான் மாகாணத்தில் உள்ள ஜின்னிங் கவுன்டி பகுதியில் அடுத்தடுத்து 11 இளைஞர்கள் கொலை செய்யப்பட்டனர். இந்த தொடர் கொலை சம்பவங்களால் அப்பகுதி மக்கள் பலர் வெளியே செல்லவே அஞ்சினர். ஆனால் பொலிஸ் விசாரணையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இதையடுத்து மத்திய பாதுகாப்பு படை வீரர்கள் விசாரணையில் ஈடுபட்டனர். இவர்களும், உள்ளூர் பொலிஸாரும் கடந்த 20 நாட்களுக்கு மேல் நடத்திய அதிரடி தேடுதலில் சந்தேகத்தின் பேரில் 56 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டார். இந்த நபர் வசித்த வீட்டின் அருகே தனியாக செல்வோரில் குறிப்பாக இளைஞர்களை கண்காணித்து கொலை செய்துள்ளார்.

கொலை செய்ததை மறைக்க சிலரின் உடல் உறுப்புகளை வெட்டி எரித்துள்ளார். சிலரின் உடல்களை புதைத்துள்ளார். இது விசாரணையில் தெரியவந்தது. மேலும் இவர் 1979ஆம் ஆண்டில் ஒரு கொலை வழக்கில் கைதாகி சிறைத்தண்டனை அனுபவித்து வெளியே வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 16ஆவது ஆசீர்வாதப்பரின் சமையல்காரர் கைது



வத்திக்கானின் கத்தோலிக்கத் திருச்சபையின் முக்கிய ஆவணங்கள் காணாமல் போனமை தொடர்பில் புனித பாப்பரசர் 16ஆவது ஆசீர்வாதப்பரின் சமையல்காரர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வத்திக்கான் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வத்திக்கான் கத்தோலிக்க திருச்சபைக்குள் அதிகாரப் போட்டி நிலவுவதாக இத்தாலியின் ஊடகங்கள் அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தன. முக்கிய ஆவணங்கள் பலவற்றை ஆதாரமாக வைத்தே இந்தச் செய்தி வெளியிடப்பட்டிருந்ததாக ஊடகங்கள் குறிப்பிட்டிருந்தன. இந்த நிலையில் முக்கிய ஆவணங்கள் பல எவ்வாறு வெளியாகியுள்ளது என்ற விசாரணைகளை வத்திக்கான் பொலிஸார் மேற்கொண்டிருந்தனர். இதனையடுத்து பாப்பரசரின் சமையல்காரர் மீது பொலிஸார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளனர். இந்த விவகாரங்கள் காரணமாகவே வத்திக்கான் வங்கியின் தலைவரும் அண்மையில் பதவி விலகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இத்தாலிய முன்னாள் பிரதமர் இளம் பெண்களுக்காக 130கோடி செலவிட்டார்



இத்தாலியின் முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனி, இளம் பெண்களுடனான விருந்துக்கு ரூ.130 கோடி வரை செலவிட்டுள்ளார் என்பது தற்போது தெரியவந்துள்ளது. இத்தாலியின் முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனி, பெண்கள் விஷயத்தில் பலவீனமானவர்.

அவர் இளம் பெண்களுடன் தவறாக நடந்து கொண்டு, அவர்களுக்காக பல கோடி ரூபாய் செலவிட்டதாகப் புகார் கூறப்பட்டது. அதுமட்டுமல்லாது 17 வயது பெண்களுடனும் இவர் உறவு கொண்டதாகப் புகார் உள்ளது. இதை அவர் மறுத்தாலும் சம்பந்தப்பட்ட பெண்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

கடந்த 2009ஆம் ஆண்டு மற்றும் 2010ஆம் ஆண்டு இவரிடம் கணக்காளராக இருந்த குய்செப் ஸ்பினெலி குறிப்பிடுகையில், மிலன் நகரில் உள்ள பங்களாவின் கீழ்த்தளத்தில் தான் இளம் பெண்களுடனான கேளிக்கை விருந்து நடக்கும். சில பெண்கள் நர்ஸ் போலவும், சிலர் பொலிஸ் போலவும் உடை அணிந்து வந்து இந்த விருந்தில் நடனமாடுவார்கள். இவர்களுக்கெல்லாம் உறையில் பணத்தை வைத்து அளிக்கும் படி பிரதமராக இருந்த பெர்லுஸ்கோனி கூறுவார். இதற்காக 130 கோடி ரூபாய் வங்கியிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

# அணு உலைகளை பார்வையிட ஐ.நா. குழுவுக்கு அனுமதி மறுப்பு

ஈரானின் அணு சக்தி தொடர்பாக கடந்த வாரம் நடந்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. இதில் 6 நாடுகள் கலந்து கொண்டன. இதனையடுத்து ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் அடுத்த மாதம் மீண்டும் பேச்சுவார்த்தை நடைபெற உள்ளது.

இதற்கிடையே ஈரானில் உள்ள பாரஷின் என்ற இடத்தில் அணு குண்டு தயாரிப்பதாக செயற்கைகோள் மூலம் தெரியவந்துள்ளது. இதனால் ஐ.நா.குழு அந்த இடத்தை பார்வையிட வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளது. ஆனால் பாரஷின் பகுதி இராணுவ முகாம் அமைந்துள்ள பகுதி என்பதால் யாரையும் பார்வையிட அனுமதிக்க முடியாது என ஈரான் தெரிவித்துள்ளது.

அங்கு செல்ல அனுமதி கேட்டு இதற்கான காரணம் மற்றும் ஆவணங்களை சர்வதேச அணு சக்தி கழகம் எங்களிடம் இதுவரையில் வழங்கவில்லை என்றும் ஈரான் அணுசக்தி கழகம் விளக்கம் அளித்துள்ளது. இந்த புதிய பிரச்சினையால் மாஸ்கோவில் நடக்க இருக்கும் பேச்சுவார்த்தை சுமுகமாக நடக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

# சிறுமிகளை பாலியல் ரீதியாக துன்புறுத்திய சீன கம்யூனிஸ்ட் துணைத் தலைவர் கைது

சீனாவில் சிறுமிகளிடம் பாலியல் ரீதியாக தவறாக நடந்து கொண்டதாக கூறி, கம்யூனிஸ்ட் கட்சியின் துணைத்தலைவர் கைது செய்யப்பட்டது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. சீனாவில் உள்ள ஹெமான் பிராந்தியத்தில் உள்ள யங்ஷிங் நகரில் கம்யூனிஸ்ட் கட்சியின் துணைத் தலைவராக லீ ஷிங்யாங் பதவி வகித்து வந்தார். 10 சிறுமிகளிடம் பாலியல் ரீதியாக தவறாக நடந்து கொண்டதாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. இது தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி அவரை கைது செய்தனர். இதே போன்று கடந்த மார்ச் மாதம் ஷோங்கிங் பகுதியைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் தலைவர் போ ஷலாய் மீது கூறப்பட்ட புகார் காரணமாக, பதவி நீக்கம் செய்யப்பட்டார். இந்நிலையில் தற்போது மேலும் ஒரு தலைவர் சிக்கி உள்ளது குறிப்பிடத்தக்கது.

# காதலியுங்கள், ஆனால்...

- சேவியர்

'உலகின் மிக அழகான பொருட்களை தொட்டோ, பார்க்கவோ முடியாது' என்கிறார் ஹெலன கெல்லர்.

அழகானவை பொருட்களல்ல, உணர்வுகளே என்பதையே அவர் அப்படிச் சொல்கிறார்.

வாழ்க்கையை அழகாக்கும் வலிமை படைத்த மிகச் சில விஷயங்களில் காதலும் ஒன்று.

அன்பு செய்வதும், அன்பு செய்யப்படுவதும்தான் உலகின் உன்னதமான விஷயங்கள் என்பதில் சந்தேகமில்லை. அந்த அன்பின் ஒவ்வோர் பக்கத்திலும் ஒவ்வோர் வாசனை. இளைஞர்களின் வாழ்க்கைப் பக்கத்தில் அதிகமாய் வீசும் வாசனை, காதல்.

காதலும், காதல் சார்ந்த இடங்களும் தான் இளைஞர்களின் எல்லைக் கோடுகள். காதல் அவர்களுடைய வாழ்க்கையை அவர்கள் கண்களுக்கே மிக அழகானதாக மாற்றித் தருகிறது.

ஓர் இளைஞனும், அவனுடைய தந்தையும் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். ஜன்னல் வழியே



தெரிந்த காட்சிகள் இளைஞனை உற்சாகம் கொள்ளச் செய்தன.

'வாவ்.. மரங்கள்!' என்றான். 'ஆஹா... வெயில்' என்றான், 'அடடா பறவைகள் என்ன அழகு' என்றான்.

அருகில் இருந்தவர்கள் எல்லாம் அவனை வித்தியாசமாய்ப் பார்த்தார்கள்.

தந்தையோ அவனுடைய கைகளைப பற்றியபடி, எல்லாவற்றுக்கும் புன்னகையுடன் தலையாட்டிக் கொண்டிருந்தார்.

கொஞ்ச நேரத்தில் மழை தூறத் துவங்கியது.

இளைஞன் வழக்கம் போல 'அப்பா, மழைத்துளி தரையில் விழுவது அழகா இருக்கு' என குதிக்க ஆரம்பித்தான்.

அருகில் இருந்தவருக்கு பொறுக்கவில்லை.

இளைஞனின் அப்பாவைப் பார்த்து, 'பையனுக்கு... மூளை....' என்று இழுத்தார்.

தந்தை இல்லை யென அவசரமாய் தலையாட்டிக் கொண்டே சொன்னார், 'இவனுக்கு நேற்று வரைக்கும் பார்வையில்லை. இப்போ தான்



சத்திரசிகிச்சை முடித்துப் பார்வை வந்திருக்கு. இதுதான் பார்வை கிடைச்சபிறகு இவன் செய்கிற முதல் பயணம். அதுதான் அவனுக்கு எல்லாமே புதுசா இருக்கு, மன்னிச்சுக்கொள்ளுங்கோ'.

காதலும் இப்படித்தான்.

காதல் ஒரு மனிதனுடைய உள்ளத்தில் விதையாய் விழுந்த உடன் அவனைச் சுற்றிய வாழ்க்கை அழகான மலர்களைச் சொரிய ஆரம்பித்து விடுகிறது. அதுவரை சாதாரணமாய் இருந்த விஷயங்கள் எல்லாம் அவனுக்குள் அழகியலைப் போதிக்கும் மகத்துவமான விஷயங்களாகி விடுகின்றன.

சந்தேகம் இருந்தால் ஏதேனும் ஒரு பண்டைய இலக்கியத்தை தூசு தட்டிப் பாருங்கள். உள்ளேயிருந்து காதல் உதிரும்.

இவ்வளவு அழகான காதலை பலரும் விமர்சிக்கக் காரணம் என்ன? வெறுக்கக் காரணம் என்ன? பதட்டப் படக் காரணம் என்ன? அது தீண்டக் கூடாத விஷயம் என பதறக் காரணம் என்ன...?

முக்கியமான விஷயம், உண்மைக் காதலுக்கு இடையே வளரும் காதல் போன்று தோற்றமளிக்கும் களைகள்.

'காதலிக்க மறுத்த காதலியை வெடடிக் கொன்றான் காதலன்', 'காதல் ஜோடி தற்கொலை', 'காதலித்த பெண் மண்ணெண்ணை ஊற்றிப் படுகொலை', 'காதலித்து திருமணம் செய்த நாலே மாதத்தில் விவாகரத்து' என்றெல்லாம் வரும் தகவல்கள் காதலைக் கொச்சைப் படுத்துகின்றன.

அதனால்தான் உண்மையான காதலைக் கூட சமூகம் சந்தேகக் கண்ணோடு பார்க்கிறது.

இளைஞர்கள் பல வேளைகளில் 'உடல் ரீதியான ஈர்ப்பை'க் கண்டு 'இதுதான் காதல்' என நினைத்து விடுகிறார்கள். அதன்பிறகு உடல் சிந்தனைகளிலேயே மூழ்கி நீச்சலடிக்கவும் செய்கிறார்கள்.

'காம நினைவுகளின்போது மூளையின் குறிப்பிட்ட பகுதி தூண்டப்படுகிறது. கோகைன் போன்ற போதைப் பொருளை உட்கொண்ட மூளையும், காம சிந்தனை நிறைந்த மூளையும் ஒன்று போல இருக்கும். அது உண்மையான நபரைப் பார்க்காமல், இச்சையை நோக்கியே சிந்தனையைச் செலுத்தும்' என்கிறார் உளவியல் மருத்துவரும் எழுத்தாளருமான ஜுடித் ஆலோப்.

காமம் ஒரு நபருடைய மேனி எழிலைப் பார்த்து வருவது. கட்டுமஸ்தான உடலையோ, நளினமான உடலையோ பார்த்து தூண்டப்படுவது.

வந்திருப்பது காதலா, இல்லை ஈர்ப்பா என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் இதை தொடரலாமா அல்லது விடலாமா என முடிவெடுக்க முடியும்.

உடலையும், அழகையும் மட்டுமே உங்களுடைய கண்கள் பார்க்கிறதா? சாதாரணமாகப் பேச முடியவில்லையா? அவிழ்த்து விடப்பட்ட ஆட்டுக்குட்டிகளைப் போல உங்கள் பார்வை அழகுப் பிரதேசங்களில் இலக்கில்லாமல் ஓடித் திரிகிறதா?

அது காதலல்ல, உடல் ஈர்ப்பு.

பேசும் போது எப்படிப் பேசுகிறீர்கள்?

'வானவில்லை மேலும் வளைத்து நட்சத்திரப் பூக்களைப் பறித்து வரும் விஷயங்களையா?' அல்லது யதார்த்தமான பிரச்சினைகள், நிகழ்வுகளையா?

வெறும் கற்பனைக் கயிறில் பட்டம் விட்டால், அது உண்மைக் காதலல்ல.

**காதல் ஒரு மனிதனுடைய உள்ளத்தில் விதையாய் விழுந்த உடன அவனைச் சுற்றிய வாழ்க்கை அழகான மலர்களைச் சொரிய ஆரம்பித்து விடுகிறது. அதுவரை சாதாரணமாய் இருந்த விஷயங்கள் எல்லாம் அவனுக்குள் அழகியலைப் போதிக்கும் மகத்துவமான விஷயங்களாகி விடுகின்றன.**

உண்மையான அன்பு, இணைந்து நேரம் செலவிட விரும்பும். ஆனால் அது பாலியல் சார்ந்தவையாய் இருப்பதில்லை.

அடுத்தவருடைய உணர்வுகளை, சிந்தனைகளை, விருப்பங்களை, சோகங்களை எல்லாம் அது காது கொடுத்துக் கேட்கும். உண்மையான பரிவுடன் ஆலோசனைகள் சொல்லும். உண்மையில் அடுத்த நபருடைய இடத்தில் தன்னை வைத்துப் பார்ப்பதில் காதல் தனது உண்மை முகத்தை வெளிக்காட்டும்.

அடுத்தவரை வாழ்வில் முன்னேறச் செய்ய வேண்டுமென ஊக்கப்படுத்துவதையும், தொடர்ந்து ஆதரவு நல்குவதையும் காதல் சிறப்புறச் செய்யும்.

'பரீட்சை கிடக்கட்டும்... வாடா படத்துக்குப் போகலாம்' என்பது உண்மைக் காதலல்ல.

'சோதனையை நல்லா எழுது, மெனக்



கெடாமல் நேரத்தோட ஹோலுக்குப் போ? எல்லாம் திரும்ப ஒருமுறை பார்த்திட்டியா?' என அக்கறையாய் விசாரிப்பதில் அது மலரும்.

மல்கம் கிளாட்வெல் தனது 'பிளிங்க்' எனும் நூலில் குறிப்பிடும் விஷயம் சுவாரசியமானது. நம்முடைய உள்ளுணர்வு ஒரு விஷயத்தை முந்திரிக் கொட்டை மாதிரி முன்னால் வந்து எச்சரிக்கும் இல்லையா? 'அது முற்றிலும் உண்மை, அதன்படி நடந்துகொள்ளுங்கள்' என்பதை அவருடைய நூல் வலுவாக முன்வைக்கிறது.

**அடுத்தவருடைய உணர்வுகளை, சிந்தனைகளை, விருப்பங்களை, சோகங்களை எல்லாம் அது காது கொடுத்துக் கேட்கும். உண்மையான பரிவுடன் ஆலோசனைகள் சொல்லும். உண்மையில் அடுத்த நபருடைய இடத்தில் தன்னை வைத்துப் பார்ப்பதில் காதல் தனது உண்மை முகத்தை வெளிக்காட்டும்.**

'இது சரியில்லையே' என உள்மனம் எச்சரித்தால் உடனே ஒரு முற்றுப் புள்ளி போட்டு விடுங்கள்.

'உண்மை கசக்கும், ஆனால் நிலைக்கும்'.

உண்மையான காதலுக்கு சில அற்புதமான குணாதிசயங்கள் உண்டு. உண்மைக் காதல் நிஜங்களை அதன் உண்மையான இயல்புகளோடு ஏற்றுக் கொள்ளும், முரண்டு பிடிக்காது. உண்மைக் காதல் அடுத்தவருடைய வலிகளில் துடிக்கும், வளர்ச்சியில் பறக்கும், தோல்வியில் துவளும். அடுத்த நபர் விலகிவிட்டாலும் கூட.

உண்மைக் காதல் ஒரு நீண்டகால ஒப்பந்தம். தற்காலிகத் தேவைகளுக்கான அடைக்கல நிழல் அல்ல.

காதல் நமது உள்ளங்கைக்குள் வந்தமர்ந்த பறவை போல என்பார்கள். இறுகப் பிடித்தால் இறந்து விடும். ஏனோ தானோவென்று விட்டால் பறந்து விடும்.

காதலனும், காதலியும் சுதந்திரமாய் உணர்வது காதலில் மிக முக்கியம்.

காதல் என்பது அன்பின் நிலை. அந்த அன்பு நிரம்பியிருப்பவர்கள் மற்றவர்கள் மீதும் அன்பும் கரிசனையும் காண்பிப்பார்கள். அடுத்த நபரிடம் மரியாதை செலுத்துவார்கள். செயல்களில் பணிவும் நாகரிகமும் மிளிரும், மன்னிப்பு மலரும், ஈகோ விடைபெறும்.

ஒரு சின்னக் கதை...

உயிருக்குள் உயிர் பொதிந்த காதலர்கள் அவர்கள். எல்லா காதலர் தினத்திலும் காதலிக்கு விசேஷ பூங்கொத்தொன்றை பரிசளிப்பான் காதலன். காதல் வளர்ந்து திருமணமானது. வருடங்கள் வளர வளர காதலும் வளர்ந்தது. பூங்கொத்தும், பிரியமும் தொடர்ந்தது. இந்தக் காதலை மரணம் கூட பிரிக்கக் கூடாதென மன்றாடினர் இருவரும். ஆனால் மரணம் ஒரு நாள் வந்தது. காதலன் மறைந்தான், காதலி உறைந்தாள்.

அடுத்த காதலர் தினம் துயரத்துடன் வந்தது. அவனில்லாத முதல் காதலர் தினம் அது. படுக்கையில் புரண்டு கண்ணீர் விட்டாள். திடீரென கதவு தட்டும் ஓசை. வாசலில் பூங்கொத்துடன் ஒருவன். பூங்கொத்தை வாங்கினாள்.

இறந்து போன காதலன் அனுப்பியிருந்தான்.

பூங்கொத்தில் ஒரு வாசகம். 'மரணம் உயிரைத்தான் பிரிக்கும், காதலையல்ல. நான் உன்னை நேசிக்கிறேன்'.

அவளுக்கோ கோபம்.

பூ அனுப்பிய கடைக்காரரிடம் சென்றாள்.

'வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுகிறாயா?' என சீறினாள்.

அவன் நிதானமாய்ச் சொன்னான்.

'அம்மா, உங்கள் கணவர் பல வருஷங்களுக்கு முன்னரே எங்கள் கடையுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார். எல்லா காதலர் தினத்துக்கும் உங்கள் வாசலில் ஒரு பூங்கொத்து வைக்கச் சொல்லி பணம் கொடுத்தார். ஒருவேளை நான் நேரடியாக கடைக்கு வந்து பூங்கொத்தை வாங்கவில்லையென்றால், நான் இறந்துவிட்டேன் என்று அர்த்தம். ஆனாலும் நீ பூங்கொத்து கொடுப்பதை நிறுத்தக் கூடாது. ஒருவேளை மரணம் வந்து அவளையும் சந்தித்தால் கடைசியாய் ஒருமுறை அவள் கல்லறையில் பூங்கொத்தை வை.

எப்போதும் கடிதத்தில் தவறாமல் எழுது - 'மரணம் உயிரைப் பிரிக்கும், காதலையல்ல'... என்று.

இதுதானம்மா நடந்தது' அவன் சொன்னான்.

அவள் அழுதாள். அவளுடைய கண்ணீர்த் துளிகள் காதலில் கரைந்து பெருமிதம் அடைந்தன.

உயிரில் உலவும் உண்மை

அதுவே காதலின் தன்மை!

# யுத்தத்துக்குப் பிந்திய அபிவிருத்தி கிளிநொச்சியில் விசேட மீளாய்வு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்துக்குப் பிந்திய அபிவிருத்திக்காக பணியாற்றுகின்ற சர்வதேச மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிகள் தொடர்பில் மீளாய்வு செய்கின்ற கலந்துரையாடல் நேற்று கிளிநொச்சி அரச செயலகத்தில் இடம்பெற்றது.

மீள்குடியேற்றத்தின் பின் தொண்டு நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற வாழ்வாதாரம் உள்ளிட்ட அனைத்து பணிகள் தொடர்பிலும் ஆராயப்பட்டதோடு தொண்டு நிறுவனங்கள் திட்டங்களை அமுல்படுத்துகின்ற போது முறையாக ஜனாதிபதி விசேட செயலணி குழு மற்றும் பிரதேச ஒருங்கிணைப்பு குழுவின் அனுமதிகள் பெறப்பட்டு நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும் என்று வலியுறுத் தப்பட்டதோடு வாழ்வாதார உதவிகள் உள்ளிட்ட திட்டங்களுக்கு முறையான தேவை பகுப்பாய்வின் அவசியம் பற்றியும் கூறப்பட்டது. மேலும் எதிர்காலத்தில் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நிறுவனங்களின் பணிகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி கண்டாவளை பூநகரி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பிலேயே ஆராயப்பட்டது.

இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார், வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன், மேலதிக அரச அதிபர் சிறிநீவாசன் மற்றும் கரைச்சி, கண்டாவளை, பூநகரி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர்கள், சர்வதேச உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் திட்டமிடல் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (29)

## தமிழருக்கு...

உருவாகி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மிக்க பாதுகாப்பு அமைச்சு அலுவலகத்தில் கோத்தாபய ராஜபக்ஷவை சந்தித்த பி.பி.சி.யின் கொழும்பு செய்தியாளர் சார்ல்ஸ் ஹெவிலண்ட், அண்மையில் வடக்கு சிவில் நிர்வாகத்திலுள்ள சில மூத்த தமிழ் அதிகாரிகள் மாற்றப்பட்டு, அவர்களுக்குப் பதிலாக சிங்கள அதிகாரிகள் நியமிக்கப்படுவதன் காரணம் என்ன என்று கேட்டார்.

அதற்குப் பதிலளித்த கோத்தாபய, போருக்கு எல்லாம் முன்னர், அங்கிருந்த அதிகாரிகள் சிங்களவர்களாக தான் இருந்தார்கள். அதிகளவான தமிழ் அதிகாரிகள் தெற்கு மாவட்டங்களில் பணியாற்றுகின்றனர். சிங்களவர்களும் முஸ்லிம்களும் வடக்கில் பணியாற்ற முடியுமாக இருக்க வேண்டும். அது இலங்கையின் பாகம் தானே என்றார்.

வடக்குப் பிரதேசம் அங்கு செறிந்து வாழும் தமிழர்களுக்கே உரித்தான ஒரு பகுதி என்று தமிழர்கள் கருதுவதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா என பி.பி.சி. செய்தியாளர் சார்ல்ஸ் ஹெவிலண்ட் வினவி யதற்கு ஏன் அப்படி இருக்க வேண்டும், நீங்கள் இலங்கையர் என்றால் நாட்டின் எந்த இடத்திற்கும் சென்று சொத்துக்களை வாங்க முடியுமாக இருக்க வேண்டும்.

திட்டமிட்ட குடியேற்றத்தை பற்றி நான் பேசவில்லை. நான் அம்பாந்தோட்டையில் இருந்து வந்தவன். நான் சிறுவயதில் அங்கு ஒரு தமிழ் குடும்பத்தை பார்த்ததில்லை. ஆனால் இன்று அங்கு பல தமிழ் குடும்பங்கள் வாழ்கின்றன. அப்படியானால் ஏன் அந்த நிகழ்வு வடக்கில் இடம்பெறக்கூடாது? நீங்கள் ஒரு இலங்கை பிரஜையாக இருந்தால் நாட்டின் வேண்டிய இடத்திற்குச் செல்ல, சொத்துக்களை கொள்வனவு செய்ய சுதந்திரம் இருக்க வேண்டும். இலங்கையர் நாட்டின் எந்த பகுதியிலும் வாழலாம் என்ற சுதந்திரத்தைப் பற்றியே நான் பேசுகின்றேன்

கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் இடம்பெற்று வரும் கடத்தல்கள் குறித்து பி.பி.சி. ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த பாதுகாப்புச் செயலாளர்,

அங்கே இருக்கின்ற சில பாதாள உலகக் குழுவினர் இந்த குற்றச் செயல்களை புரிகின்றனர். போதைப் பொருள் விநியோகத்தர்கள் பல குற்றங்களை செய்கின்றனர். இவர்கள் தப்பிச் செல்கின்றனர். இவர்களுக்கு இந்தியாவிற்குச் செல்வது மிகவும் இலகு. எனவே தவறான குற்றச்சாட்டுக்களை முன்வைக்க வேண்டாம் என்று பதிலளித்தார்.

எனினும், இவைகள் தவறான குற்றச்சாட்டுக்கள் அல்ல. நான் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து தகவல் பெற்றுள்ளேன் என பி.பி.சி. ஊடகவியலாளர் கூறினார்.

அப்போது கோபப்பட வேண்டாம். வழமையாக நான்தான் கோபப்பட வேண்டும். ஆகவே நீங்கள் கோவப்பட வேண்டாம். நான்தான் பாதுகாப்புச் செயலாளர் நான் இது குறித்து விசாரணை நடத்தியுள்ளேன். நீங்கள் அவர்களிடம் இருந்து தகவல் பெற வேண்டாம். என்னிடம் தகவல் கேளுங்கள். அவைகள் பொய். நாட்டுக்கு வெளியில் மறைந்திருக்கும் புலி ஆதரவாளர்கள் இலங்கையின் நற்பெயருக்கு அபகீர்த்தி ஏற்படுத்த முயற்சிக்கின்றன

இறுதிக் கட்டத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் கொள்ளப்பட்டதாக ஐ.நா. பிரதானி, மனித உரிமை அமைப்புக்கள் குற்றம் சுமத்துகின்றமை குறித்து பி.பி.சி. ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினார்.

நாங்கள் அதுகுறித்து உத்தியோகபூர்வமாக செயற்பட்டுள்ளோம். வடக்கில் பொது மக்கள் பாதிப்பு குறித்து அனேக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என பாதுகாப்புச் செயலாளர் பதிலளித்தார்.

இலங்கை அதற்கு என்ன செய்திருக்கிறது என பி.பி.சி. ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினார்.அதற்குப் பதிலளித்த பாதுகாப்புச் செயலாளர், நாங்கள் நிறைய செய்திருக்கிறோம். புள்ளிவிபரத் திணைக்களம் இந்த பகுதிகளில் கணக்கெடுப்பு செய்துள்ளனர். இதில் நூறு வீத தமிழ் அலுவலர்கள் ஈடுபட்டனர் என்றார்.

அதில் 8 அல்லது 9 ஆயிரம் சிவிலியன்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென பி.பி.சி. ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினார்.

தவறான வார்த்தைகளை பயன்படுத்த வேண்டாம். சிவிலியன்கள் அல்ல. இலங்கை இராணுவத்திற்கும் சிவிலியன்களுக்கும் இடையில் யுத்தம் இடம்பெற்றது என நீங்கள் நினைக்கிறீர்களா? அது இராணுவத்திற்கு நிகராக ஆயுதம் தாங்கிய குழுவுடன் தான் மோதல் இடம்பெற்றது. இறந்தவர்கள் சிவிலியன்கள் என்றால் ஆயுதம் ஏந்தியவர்கள் எங்கே..? என பாதுகாப்புச் செயலாளர் பி.பி.சி. ஊடகவியலாளரிடம் இறுதியில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அப்பாவி பொதுமக்களை கொன்ற பயங்கரவாதிகளை இராணுவம் ஒழித்திருக்கிறது. இப்போது அவை எல்லாம் நிறுத்தப்பட்டுவிட்டன. அது பற்றி நீங்கள் பேசமாட்டீர்கள். நீங்களும் பயங்கரவாதிகளின் நிலைப்பாட்டை தான் ஆதரிக்கிறீர்கள் என்றும் பி.பி.சி.யின் செய்தியாளரிடம் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

## தற்கொலைத்...

தனது அலுவலகத்தில் முதலில் பணியாற்றியவர் என்றும், விடுதலைப் புலிகளின் நிர்ப்பந்தம் காரணமாகவே அவர் தற்கொலைத் தாக்குதலாளியை தன்னை தாக்குவதற்கு அழைத்து வந்ததாகத் தான் நம்புவதாகவும், ஆகவே அவரை மன்னிக்கத் தான் தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளார்.

எவரையும் பழிவாங்கும் நோக்கம் தனக்கு என்றும் கிடையாது என்றும், அந்தப் பெண்மணி ஏற்கனவே விளக்க மறியலில் பல ஆண்டுகளைக் கழித்துவிட்டார் என்பதால் அவர் மீது தனக்கு அனுதாபம் உண்டு எனவும் செய்தியாளர்களிடம் அமைச்சர் டக்ளஸ் கூறியுள்ளார்.

அதேவேளை, வழக்கில் முடிவான தீர்ப்பை வழங்க வேண்டியது நீதிமன்றத்தின் கையிலேயே இருக்கிறது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## நாடாளுமன்ற...

சரவணபவன், நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திருமதி பிறின்ஸி ஜயதுங்க, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர்கள், பிரதேச செய லர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பணியாளர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். இந்தச் செயலமர்வு இன்றைய தினமும் இடம்பெறவுள்ளது. (பா)

## சட்டவிரோத...

தெரிவிக்கப்பட்டதையடுத்த அவரை எதிர்வரும் 11ஆம் திகதி யாழ்.நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதவான் மா.கணேசராஜா உத்தரவிட்டுள்ளார். (137, எஸ்)

# எட்டு வயதுச் சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம்

எட்டு வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த இளைஞர் கைது செய்யப்பட்டார்.

மல்லாகம் கோணப்புலம் முகாம் பகுதியில் நேற்று முன் தினம் இரவு 8.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது, சிறுமி நேற்று முன்தினம் இரவு 8.00 மணியளவில் மல்லாகம் பழைய நீதிமன்ற வீதிக்கருகில் உள்ள கடைக்குச் சென்றுள்ளார். இதனை அவதானித்துக்கொண்ட குறித்த இளைஞர் சிறுமியின் வாயைத் துணியால் பொத்தி பாலியல் துஷ்பிரயோகம் புரிந்துள்ளதாகவும், சிறுமி துஷ்பிரயோகம் செய்யப்பட்ட இடத்தில் வாயில் துணி அடைத்த நிலையில் பெற்றோரினால் மீட்கப்பட்டதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர். (எஸ்)

## 2 கோடியைத்...

கணக்கெடுப்பின் மூலம் தற்போது இலங்கையில் 14.9 மில்லியன் பேர் சிங்கள மக்களாக உள்ளனர். கடந்த முப்பது ஆண்டுகளின் பின்னர் முதன் முதலாக இலங்கை முழுமையும் மக்கள் தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்கணக்கெடுப்பில் மேலும் 220,000 பேர் இணைக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, 2041 இல் இலங்கையில் மொத்த மக்கள் தொகை கிட்டத்தட்ட 24 மில்லியனாகக் காணப்படும் என கணக்கிடப்பட்டுள்ளது.

வடக்கில் 9 இலட்சத்து 97 ஆயிரத்து 754 பேர் காணப்படுவதாகவும், இதில் 9இலட்சத்து 34 ஆயிரத்து 392 பேர் தமிழ் மக்கள் எனவும் இக் கணக் கெடுப்பின் மூலம் அறிய முடிகின்றது. வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் 21ஆயிரத்து 860 சிங்களவர்களும், 32ஆயிரத்து 659 முஸ்லிம்களும் வாழ்கின்றனர். இலங்கையில் வாழும் 1.5 மில்லியன் முஸ்லிம்களில் மூன்றில் ஒரு பங்கு முஸ்லிம் மக்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழ்வதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பு சான்றுபகர்கின்றது. கிழக்கு மாகாணத்தில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் பெரும் பான்மையாக வாழ்வதாகவும் உத்தியோகபூர்வ வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இக்கணக்கெடுப்பின் இறுதிப் பெறுபேறுகள் மூன்று கட்டங்களாக வெளியிடப்படும். முதலில் இலங்கைத்தீவின் முழுமையான கணக்கெடுப்பு தொடர்பான பொதுவான தகவல்கள் மற்றும் குடும்ப எண்ணிக்கைகள் போன்றன வெளியிடப்படும். இரண்டாவதாக பொதுவான ஏனைய தகவல்கள் வெளியிடப்படும். இணையப் பாவனைகள் மற்றும் குடியகல்வுடன் தொடர்புபட்ட விடயங்கள் மூன்றாவதாக வெளியிடப்படும் என குடிசன மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தின் மேலதிக இயக்குனர் நாயகம் D.C.A.குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

2011 கணக்கெடுப்பில், தேசிய அடையாள அட்டை இலக்கம், குடியகல்வுக்கான காரணம், தொழில் விடயம், வாழ்க்கைத்திறன் சார் தகவல்கள் மற்றும் கணினி அறிவுத்திறன் போன்ற புதிய விடயங்களும் இணைக்கப்பட்டுள்ளதாக குணவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார்.

## 12 மாணவர்களுக்கு....

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது,

வவுனியா தெற்கு வலயத்திலுள்ள கோமரசன்குளம் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மேற்படி மாணவர்கள் ஒழுங்கீனமாக நடப்பதாகத் தெரிவித்து அதிபரால் அவர்களின் கல்விக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதில் ஒரு மாணவனுக்கு அவனது சாதாரண தர பெறுபேற்று அறிக்கையில் சிவப்பு மையினால் கீறப்பட்டு கற்பதற்குத் தடையும், மேலும் 3 மாணவர்களுக்கு மூன்று மாதத் தடையும், ஒரு மாணவருக்கு ஒரு மாதத்தடையும், ஏழு மாணவர்களுக்கு 14 நாள் தடையும் பாடசாலை அதிபரால் விதிக்கப்பட்டது.

இது தொடர்பாக தமது எதிர்ப்பைத் தெரிவித்த பெற்றோர் இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் யோசப் ஸ்ராலின், வவுனியா தெற்கு வலய ஆசிரியர் சங்க உறுப்பினரும், கணக்காளருமான நேசன் மற்றும் மூன்று மாணவர்களுமாகச் சேர்ந்து வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜாவிடம் முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு சிறந்த தீர்வைப் பெற்றுத் தருவதாக வலயக் கல்விப் பணிப்பாளர் இவர்களுக்கு உறுதியளித்தார். இதேவேளை, பாடசாலைகளில் மாணவர்கள் ஒழுங்கீனமாக நடந்தால் அவர்களுக்கான கற்பித்தல் தடை விதிப்பதற்கு அதிபருக்கு உரிமையில்லை எனவும் அந்த அதிகாரம் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கே உள்ளதெனவும், 2005 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (12)

## திருடனின்....


கலந்துவிட்டு இரவு 8.30 மணியளவில் வீட்டிற்கு வந்து செயற்பாடுகளை முடித்து 10.00 மணியளவில் உறங்கச் சென்றுள்ளார்.

இந்தச் சமயம் வீட்டின் பின் பக்கமாக சலசலப்பு கேட்க விழித்துக் கொண்ட அவர் வெளியில் வந்து பார்த்து எதுவும் இல்லையென அறிந்து நித்திரைக்குச் சென்றுள்ளார்.

சமையலறைப் பக்கமாக யன்னலை உடைத்துக்கொண்டு திருடன் உள்நுழைந்துள்ளான். இதன்போது விழிப்படைந்த அவருக்கும், திருடனுக்குமிடையே வாக்குவாதம் முட்டி மோதிக் கொண்டபோதே திருடன் கத்தியை எடுத்து உதவிக்கல்விப் பணிப்பாளரை தலையில் வெட்டி விட்டு தப்பியோடியுள்ளான். படுகாயமடைந்த அவரை உடனடியாக அருகிலுள்ள ஆரம்ப சுகாதார வைத்திய நிலையத்திற்குச் கொண்டு சென்று பின்னர் மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (04)

# மனித உரிமைகள் தொடர்பாக பொறுப்புடமையை காக்க வேண்டும்

## அரசுக்கு கூறுகிறார் தம்பர அமில தேரர்



(கொழும்பு)

தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல்கள் தற்போது பன்மடங்கில் அதிகரித்துள்ள நிலையில், ஐக்கிய நாடுகள் சபையையும் அமெரிக்காவையும் குறை கூறாமல் மனித உரிமைகள் தொடர்பில் அரசாங்கம் பொறுப்புடமையை பாதுகாக்க வேண்டும் என தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் பேராசிரியர் தம்பர அமில தேரர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் பொறுப்பற்ற தன்மையே சர்வதேச தலையீடுகள் அதிகரிக்கக் காரணமாகும். போருக்குப் பின்னரான காலப் பகுதிலும் வடக்குக் கிழக்கு தமிழ் மக்களினதோ அல்லது தெற்கில் வாழ்கின்ற சிங்கள மக்களினதோ பிரச்சினைகளுக்குத் தீர்வுக் காண்பதில் அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது.

இதனால் நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் தோற்றம் பெற்று வருவதுடன், சர்வதேச ரீதியிலும் பாரிய சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தற்போது வெளிப்படையாகவே இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக நாட்டில் போர் முடிவடைந்த பின்னர் அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட இயல்பு வாழ்வு ஏற்படவில்லை.

மாறாக கடத்தல், காணாமற்போதல், தாக்கப்படுதல் என பல்வேறு மனித உரிமை மீறல்களே நாட்டில் இடம்பெற்று வருகின்றன. இதனைக் காரணம் காட்டி ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அமெரிக்கா உட்பட சர்வதேச நாடுகள் இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை நிறைவேற்றி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிலைக்கு வந்துள்ளன.

எந்தவொரு நாடுமே செய்யாத விடயமொன்றை வெளிவிவகார அமைச்சு செய்துள்ளது. அதாவது இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விளக்கம் அளித்து, அதனை எவ்வாறு செயற்படுத்துவது என்பது தொடர்பில் செயற்திட்டத்தை தயாரித்து அமெரிக்காவிடம் கையளித்துள்ளது. இந்தச் செயல் திட்டம் உள்நாட்டில் வெளியிடப்படவில்லை.

மேற்கத்தேய நாடு ஒன்றிடம் இலங்கை அரசாங்கம் இவ்வாறு மண்டியிட வேண்டுமா? எனவே தற்போதைய அரசாங்கம் இவை அனைத்திற்கும் பொறுப்புக் கூற வேண்டும்.

அத்துடன், அந்நிய நாடுகளின் தலையீடுகளுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி நாட்டிற்கு பெரும் சாபத்தையே பெற்றுக் கொடுத்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


# குடத்தனையில் சடலம் மீட்பு

(வடமராட்சி)

குடத்தனை வடக்கில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டிருக்கிறது.

மேற்படி பகுதியைச் சேர்ந்த சிவசிதம்பரம் சிறீஸ்குமார் (வயது - 21) என்பவரின் சடலமே நேற்று மாலை மீட்கப்பட்டு மந்திகை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. (116)

# ஜப்பான், பாகிஸ்தான் நாடுகளின் கடற்படை கப்பல்கள் கொழும்பில்





(கொழும்பு)

ஜப்பானின் இரு கடற்படை கப்பல்களும் பாகிஸ்தானின் ஒரு கடற்படை கப்பலும் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக கடற்படை அறிவித்துள்ளது.

இந்தக் கப்பல்கள் நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

ஜப்பானின் " IKAZUCHI" என்ற கப்பல் 151 மீற்றர் நீளமும் 4,550 தொன் நிறையுடைய, 180 படையினரை தாங்கியதாகும். ஜப்பானின் "SAWAGIRI" என்ற மற்றைய கப்பல் 137 மீற்றர் நீளமுடையதுடன் 3,550 தொன் நிறையுடைய 190 படையினரை கொண்டதாகும்.

சீனாவில் இருந்து திரும்பும் வழியில் கொழும்பு வந்துள்ள "Azmat" என்ற பாகிஸ்தானின் கடற்படை கப்பல் 63 மீற்றர் நீளமுடையதுடன், 631 தொன் நிறை கொண்டதும், 77 படையினரை தாங்கியதுமாகும்.

இந்த இரு நாட்டு கடற்படை அதிகாரிகளுடனும் மேல் மாகாண கடற்படை தளபதி ரியர் அட்மிரல் டி.எஸ்.உடவத்த சந்திப்பு நடத்தியுள்ளார்.

ஜப்பானிய கப்பல்கள் இன்றும் பாகிஸ்தான் கப்பல் எதிர் வரும் 31 ஆம் திகதியும் கொழும்புத் துறைமுகத்தில் இருந்து தங்களது நாடுகளை நோக்கிப் பயணிக்கவுள்ள்தாக கடற்படை அறிவித்துள்ளது.

# பனையில் ஏறியவர் தவறி வீழ்ந்து மரணம்

(மன்னார்)

மன்னார், முருங்கன் செம்மண்தீவுப் பகுதியில் கடந்த சனிக்கிழமை நுங்கு வெட்டுவதற்காக பனை மரத்தில் ஏறிய குடும்பஸ்தர் ஒருவர் தவறி விழுந்து மரணமடைந்துள்ளார்.

வவுனியா குருக்கள் ஊரைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான பழனிச்சாமி குலராஜசிங்கம் (வயது - 32) என்பவரே இவ்வாறு மரணமடைந்தவுர் ஆவார்.

சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# தனக்குத் தானே தீ மூட்டி தற்கொலை செய்த வர்த்தகர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எருவில் வடக்கைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் ஒருவர் தனக்குத் தானே தீ மூட்டி தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை 4.00 மணியளவில் ப.அருணகிரி (வயது - 48) என்ற பிரபல வர்த்தகரே வீட்டிற்கு வெளியே தனக்குத் தானே மண்ணெண்ணெய்யை ஊற்றி தீ மூட்டியுள்ளார்.

உயிருக்காக போராடிக் கொண்டிருந்தவரை உறவினர்கள் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்திய சாலையில் அனுமதித்து, மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இவர் இறப்பதற்கு முன்னர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் வைத்து பொலிசாருக்கு வாக்கு மூலம் அளித்துள்ளார். சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்ட களுவாஞ்சிக்குடி பொலிஸார் விசாரணை நடத்தியுள்ளனர்.

# படிப்படியான படைவிலகல் சிவில் பாதுகாப்பு பொலிஸார் வசம்

## ஆஸி. தூதுவரிடம் யாழ். தளபதி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் ஸ்தாபிக்கப்பட்டுவரும் நிலையில், யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் படிப்படியாக குறைக்கப்பட்டு அவ்விடங்களுக்கு பொலிஸார் நியமிக்கப்பட்டு வருகின்றனர் என யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட அவுஸ்ரேலிய துதுவர் றொபின் மூடி குழுவினரை சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறியதாக பாதுகாப்புப் படைகளின் யாழ். கட்டளைத் தலைமையகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பு நிலைமைகள் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் மனிதாபிமானப் பணிகள், முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு மேற்கொள்ளப்பட்டு வரும் வாழ்வாதார நடவடிக்கைகள் தொடர்பாகவும் அவுஸ்ரேலியத் தூதுவருக்கு விளக்கம் அளித்ததாக அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குடாநாட்டில் இராணுவத்தின் பாவனையில் இருந்த வீடுகள், மற்றும் நிலங்களை மீளக் கையளிக்கப்பட்டு வருகின்றதென தெரிவித்த மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க, எஞ்சியுள்ள நிலங்களையும், வீடுகளையும் பாதுகாப்பு நிலைமையை கவனத்தில் கொண்டு பொதுமக்களிடம் கையளிக்கப்படும் என்றும் அவுஸ்ரேலியத் தூதுவரிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்கள் கடந்த 3 தசாப்தங்களாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவ்வாறானதொரு நிலைமையை மீண்டும் அனுபவிக்க இலங்கை மக்கள் விருப்பவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இராணுவத்தினரின் மனிதாபிமானப் பணிகளை இலங்கைக்கான அவுஸ்ரேலியக் குழுவினர் பாராட்டியதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மண்டபம் அகதி முகாமில் மன்னார் இளைஞன் கொலை

(இராமேஸ்வரம்)

தமிழ்நாடு - இராமநாதபுரம், மண்டபம் முகாமில் வசித்து வந்த இலங்கை அகதியான 18 வயதுடைய ஜெகன் எனும் இளைஞன் கொலை செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பகுதியைச் சேர்ந்த ஜெகன் கடந்த 2008 முதல், மண்டபம் அகதிகள் முகாமில், பெற்றோருடன் வசித்து வந்தார்.

வீடு அருகில் உள்ள ஆள் இல்லாத அறையில் உறங்கிக் கொண்டிருந்த இவரை அதிகாலையில், அருகில் உள்ளவர்கள் சென்று பார்த்த போது பிணமாக கிடந்துள்ளார்.

கைகள் மடக்கப்பட்ட நிலையில், வலது தொடை, ஆண் உறுப்பு அருகில் போத்தலால் கீறப்பட்ட காயங்கள் இருந்தன.

சந்தேகத்தின் பேரில் இருவரிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்ற போதிலும் பின்னணி என்ன என்பது தெரியவரவில்லை.

# 16 மாணவர்கள் துஷ்பிரயோகம் விளக்கமறியலில் ஆசிரியர்

(கொழும்பு)

மாணவ, மாணவியர் 16 பேரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் ஆசிரியர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட ஆசிரியர் மாவனெல்ல நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதை அடுத்து இவரை அடுத்த மாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தர விட்டுள்ளார்.

ஆசிரியரின் நடத்தை குறித்து சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு பல முறைப்பாடுகள் செய்யப்பட்ட நிலையில், அதிகார சபையின் உதவியுடன் பொலிஸார் குறித்த ஆசிரியரைக் கைதுசெய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியுள்ளனர்.

# எறிகணை மீட்பு

(வேலணை)

வேலணைப் பகுதியில் உள்ள தோட்டக் கிணறு ஒன்றிலிருந்து வெடிக்காத நிலையில் உள்ள எறிகணை ஒன்று மீட்கப்பட்டிருக்கிறது.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தின்போது மீட்கப்பட்ட எறிகணையை கடற்படையின் சிவில் பாதுகாப்பு பிரிவினர் செயலிழக்கச் செய்துள்ளனர். (85)

யாழ்ப்பாணம் - கொழும்பு
பிரபல ஆசிரியர்களின்
2012 உயர்தர மாணவர்களுக்கான
மாதிரி வினாத்தாள்களும் விடைகளும்

02.06.2012 சனிக்கிழமை முதல்
தினமுரசு நாளிதழின்
கல்வி முரசில் வெளிவருகின்றது

மாணவர்களின் சந்தேகங்களை உரிய பாட
ஆசிரியர்களுடன் தொலைபேசியில்
கலந்துரையாடி தீர்வுகாணும் வசதி.

வாரம் தோறும் செவ்வாய், சனி, ஞாயிறு ஆகிய
3 தினங்களில் தினமுரசு
நாளிதழில் வெளிவரும்.

உயர்தர மாணவர்களின் பரீட்சைப் பெறுபேற்றினை
உயர்த்த தினமுரசின் பங்களிப்பு!

உங்களின் உயர்பெறுபேறு எங்களின் திருப்தி!
உங்கள் பிரதிக்கு முந்துங்கள்

தினமுரசு

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மே 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.